REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 பெப்ரவரி 1 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 28 | Thursday 01, February, 2024 | 16பக்கங்கள் | 50/-




## சுதந்திர தின நிகழ்வு ஏற்பாடுகள் பூர்த்தி; காலி முகத்திடல் விழாக்கோலம்

### தேசிய மாணவர் படையணியில் 6300 பேர் பங்கேற்பு

ஸாதிக் ஷிஹான்



நாட்டின் 76ஆவது தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்வு எதிர்வரும் (04) கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், வெகு விமர்சையாக கொண்டாடப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்படுள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் 06

## சுற்றுலா செல்லவேண்டுமா? இலங்கைக்கு செல்லுங்கள்

### இந்தியர்களுக்கு அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை



சுற்றுலா செல்லவிரும்பினால் இலங்கைக்கு செல்லுங்கள், இதனை விளையாட்டாக சொல்லவில்லையென இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றிலே, அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது உரையில், இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட வேளை இந்தியா 06

## ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு வழங்கியுள்ள அதிகாரத்தின் பிரகாரமே பணிகள் முன்னெடுப்பு

பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அரச உயர் பதவிகளுக்கான நியமனங்கள், அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமையவே இடம்பெறுகிறது. எனவே, ஜனாதிபதியின் இப்பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்துவது அரசியலமைப்பை மீறுவதாக அமைகிறது. அரசியலமைப்பின் 4 (ஆ) உறுப்புரையின் கீழ், இலங்கை ஜனநாயக குடியரசின் ஜனாதிபதி, நாட்டின் தேசிய பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துகிறார்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, நிறைவேற்று அதிகாரத்தின் பிரதானி என்ற வகையிலும், அரசியலமைப்பில் குறிக்கப்பட்டுள்ள நடைமுறைக்கு அமையவும் ஜனாதிபதியின் அரசியலமைப்பு 06

# சகல பல்கலைக்கழகங்களிலும் செயற்கை நுண்ணறிவு கற்கைகள்

### தொழில்நுட்ப யுகத்தின் தேவைக்கேற்ப கல்வி முறையை வலுப்படுத்துவோம்
### களனி பல்கலைக்கழக கட்டட திறப்பு விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



**அறிவு, பண்புமிக்க சமூகத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென்றும் ஜனாதிபதி தெரிவிப்பு**

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான கற்கை நெறிகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தொழில்நுட்ப யுகம் ஒரே இடத்தில் ஸ்தம்பித்து நிற்காது. வரலாற்றிலிருந்த அணுகுமுறைகள் இன்று வேறுவிதமாக வளர்ச்சியடைந்துள்ளன. தொழில்நுட்ப யுகத்தின் தேவைக்கேற்ப இலங்கையில் கல்வி முறையை வலுப்படுத்துவோம்.

அறிவு மற்றும் பண்புமிக்க சமூகத்தின் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பத்தின் வாயிலாகவும் பௌத்த தர்மம் தொடர்பில் தேடியறிவதற்கான சூழலை உருவாக்க வேண்டும். அதற்கு செயற்கை நுண்ணறிவு உதவும். கல்வி அமைச்சருடன் கலந்துரையாடி அனைத்து பல்கலைக்கழகங்களிலும் செயற்கை நுண்ணறிவு கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அறிவு மற்றும் பண்பு மிக்க சமூகத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

களனி பல்கலைக்கழகத்தின் பாளி மற்றும் பௌத்த பட்டப் படிப்பு பிரிவின் புதிய கட்டடத்தை நேற்று (31) திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றி கொள்ள புத்த பெருமானின் போதனைகள் மிக முக்கியமானது. இத்தகைய தர்மத்தின் ஆழத்தை 06

## இராஜாங்க அமைச்சராக ஷசீந்திர நியமனம்



நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சராகப் பணியாற்றிய சனத் நிஷாந்தவின் மறைவையடுத்து வெற்றிடமான பதவிக்கு, ஷசீந்திர ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். நீர்ப்பாசன மற்றும் நீர் 06

## மலேசியாவின் புதிய மன்னர் பதவியேற்பு



மலேசியாவின் புதிய மன்னராக ஜோகூர் ஆட்சியாளர் சுல்தான் இப்ராஹிம் சுல்தான் இஸ்கந்தர் பதவியேற்றுள்ளார். இதன்படி அவர் மலேசியாவின் 17ஆவது மன்னராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மாநில அந்தஸ்து வழங்கும் விழா நேற்று (31) நடைபெற்றது. இதில் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 06

## சாந்தனை நாட்டுக்கு அழைத்துவர ஏற்பாடு



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு சில தினங்களுக்குள் அறிவிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சாந்தனின் தாயாரிடம் உறுதியளித்துள்ளார்.

வழக்குத்தீர்ப்பின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட சாந்தன், சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சாந்தனின் தாய் மற்றும் சகோதரர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த 30 ஆம் திகதி சந்தித்து, சாந்தனை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு

### காணி பிரச்சினைகள் தீர்வுக்கு 'உரித்து' திட்டம்

## 10,000 பேருக்கு நிரந்தர காணி உறுதிப் பத்திரம்

### 05 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நிகழ்வு



முறையான காணி உரிமையின்றி நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருந்த இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கும் "உரித்து" வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 05ஆம் திகதி திங்கட்கிழமை தம்புள்ளையில் நடைபெறவுள்ளதாக 06

## ஜனாதிபதியின் வீடு எரிப்பு 04 பேருக்கு பிடியாணை

### CCTV காட்சிகளை சமர்ப்பிக்க உத்தரவு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள வாசஸ்தலத்திற்கு, கடந்த வருடத்தில் தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சிசிடிவி கெமரா காட்சிகள் மற்றும் காணொளிகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு 06

## சுதந்திர தின நிகழ்வுகளுக்காக காலிமுகத்திடல் வீதிக்கு பூட்டு

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு காலிமுகத்திடல் வீதி முழுமையாக மூடப்படவுள்ளதாக, பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் பெப்ரவரி 03 பகல் இரண்டு மணி முதல் மறுநாள் (04) நண்பகல் 12 மணி வரை இவ்வீதி முழுமையாக மூடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு தேசிய கொடியை முறையற்ற 06

## சாந்தனை இலங்கைக்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### இந்திய தூதரக அதிகாரி தெரிவித்ததாக ஸ்ரீதரன் எம்.பி தெரிவிப்பு



பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்குமாயின் சாந்தனை இலங்கைக்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென, இந்திய தூதரக அதிகாரி தமக்கு அறிவித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் 06

### போலி விசாக்கள் வழங்கும் முகவர்கள்

## குடிவரவு, குடியகல்வு திணைக்களம் எச்சரிப்பு

வெளிநாட்டு விசாக்களை வழங்கும் போலி முகவர்கள் குறித்து விழிப்பாகச் செயற்படுமாறு குடிவரவு, குடியகல்வு திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இம்முகவர் நிறுவனங்கள் அதிக பணத்தை அறவீடு செய்து போலி வெளிநாட்டு விசாக்கள் அல்லது பயண ஆவணங்களை வழங்குவதாகவும் திணைக்களம் 06

## சனத் நிஷாந்த வெற்றிடத்துக்கு ஜகத் பிரியங்கரவின் பெயர்

### வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் வெற்றிடத்துக்கு, எல். கே. ஜகத் பிரியங்கரவின் பெயரை அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இவர், புத்தளம் மாவட்டத்துக்கான பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார். 06



03
**பொதுத்தேர்தலை மிகுந்த பலத்துடன் பொதுஜன பெரமுன எதிர்கொள்ளும்**
பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ



# நகர்வலம்



# கொள்கைகளுக்கு வாக்களித்தமையாலே நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



கொள்கைகளுக்கு வாக்களித்தமையாலே நாடு வங்குரோத்து நிலைக்கு வந்தது. தற்போதைய ஜனாதிபதி ஒரு கொள்கைக்கு மட்டுமின்றி அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைவர் எனவும் அந்த அர்ப்பணிப்புகளின் அடிப்படையில் நாட்டிற்கு வெற்றியை பெற்றுத்தர அவர் உழைத்து வருவதாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தனக்கு எந்த கொள்கையும் இல்லை எனவும், நாட்டை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்லும் தீர்வொன்றில் தான் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் "இலங்கையை வெற்றி கொள்வோம் "மக்கள் நடமாடும் சேவை நிகழ்வுத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (31) அநுராதபுரம் சல்காது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான தொழில்சார் பயிற்சி வழங்குவது தொடர்பாக மக்களுக்கு அறிவிக்கும் வேலைத் திட்டம், தொழிலாளர்களின் தொழில் கௌரவத்தையும் பாதுகாப்பையும் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமும் நடைபெற்றன. இதன் போது, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்காக மக்களுக்கு விசேட சேவைகளும் வழங்கப்பட்டன.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

இலங்கையையை வெற்றிகொள்ளும் திட்டமானது நடமாடும் சேவை அல்ல, மாறாக நாட்டை பொருளாதார ரீதியில் உயர்த்தும் தீர்வாக அறியப்படுகிறது. இது போன்ற இரண்டு நிகழ்வுகளை காலி மற்றும் யாழ்ப்பாணத்தில் நடத்தியுள்ளோம்.

கொள்கைகளுக்கு வாக்களித்தமையாலே நாடு வங்குரோத்து நிலைக்கு வந்தது. ஆனால் என்னிடம் எப்போதும் இருந்த தீர்வு நாட்டிற்கு வெற்றியைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை நான் பிரதிநிதித்துவப்படுத்தினேன். மக்களுக்கு வெற்றியைக் கொண்டுவரும் வாய்ப்பிற்காக நான் நின்றேன். இந்த நாட்டின் எதிர்காலத்தை வெல்லக்கூடிய தலைமைக்காக நான் இன்று நிற்கிறேன்.

இரண்டு வருடங்களுக்கு முந்தைய நிலைமை உங்களுக்கு நினைவிருக்கும். தற்போதைய சாதகமான நிலைக்கு ஜனாதிபதி நாட்டைக் கொண்டுவந்து இருக்கிறார் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை இல்லாத முடிவுகளைக் கொண்ட தலைவர். கொள்கைகள் மாறுகின்றன. ஆனால் முடிவுகள் வளர்ந்து வருகின்றன. மக்களை காப்பாற்றக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்று நான் கூறுகிறேன் என்றார்.

# நளீமிய்யா நாற்பெரும் விழாவில் பிரதம அதிதியாக மர்ஜான் பளீல் எம்.பி



பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள நாற்பெரும் விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ள பாராளுமன்ற உறுப்பினரும் நளீமிய்யா கலாபீட ஆளுநர் சபை உறுப்பினருமான மர்ஜான் பளீல் அவர்களை, ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலய தலைவர் அஷ்ஷெய்க் பௌஸர் ஹுஸைன் (நளீமி), வலய உப தலைவர் சாமஸ்ரீ தேசமான்ய மிர்சூக் பளீல் மற்றும் நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) ஆகியோர் அவரது பேருவளை இல்லத்தில் சந்தித்து உத்தியோகபூர்வமாக அழைப்பிதழை கையளித்தபோது எடுத்த படம்.

## மின் வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு

மதவாச்சி மகாதிவுல்வெவ வயல் பகுதியில் காட்டு யானை ஒன்று சட்டவிரோத மின் வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

எட்டு வயதுடைய குறித்த யானை வயல் பகுதியில் சென்று கொண்டிருந்த போது விவசாயி ஒருவரினால் சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட மின்வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்தது.

# திறைசேரிக்கு 3 பில்லியன் ரூபா பங்களிப்பு செய்த லிற்றோ நிறுவனம்

## வளர்ச்சிப்பாதை 23/24 இலும் தொடரும் என எதிர்பார்ப்பு



இலங்கை லிற்றோ காஸ் லங்கா லிமிடட் நிறுவனம் தனது பிரதான பங்குதாரரான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் ஊடாக 3 பில்லியன் ரூபா (3,000 மில்லியன்) பங்கு இலாபத்தை திறைசேரிக்கு வழங்கிப் பாரிய பங்களிப்பை மேற்கொண்டுள்ளது. இது 2023 ஒக்டோபர் மாதம் வழங்கிய 1.5 பில்லியன் ரூபா பங்களிப்பு மற்றும் 2024 ஜனவரி 26ஆம் திகதி வழங்கிய 1.5 பில்லியன் ரூபா பங்களிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

நோய் தொற்று மற்றும் அதனைத் தொடர்ந்தன பொருளாதார பின்னடைவு போன்றவற்றின் பின்விளைவுகளிலிருந்து மீண்டு ஸ்திரத்தன்மையை அடைய அரசாங்கத்தின் வருமானத்தை உயர்த்துவதற்கு முயற்சிக்கும் முக்கியமான நேரத்தில் இது குறிப்பிடத்தக்கதொரு சிறந்த சமிக்ஞையாக அமைந்துள்ளது.

இலாபமீட்டும் சில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் ஒன்று என்ற நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், 2.6 பில்லியன் ரூபாவை வரியாகச் செலுத்தியுள்ள லிற்றோ நிறுவனம் நாட்டை வலுப்படுத்துவதில் தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்டியுள்ளது. அந்நியச் செலாவணிக் கையிருப்புத் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணிகளால் விநியோகச்சங்கிலி பாதிப்புப் போன்ற சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தபோதும் தலைவர் முதித பீரிஸின் தலைமைத்துவத்தின் கீழ் இப்பிரச்சினைகளை விரிவாக தீர்த்துக்கொள்ள முடிந்தது.


இது தொடர்பில் தனது திருப்தியை வெளிப்படுத்திய தலைவர் முதித பீரிஸ் குறிப்பிடுகையில், 'பொருளாதார சவால்கள் மற்றும் கஷ்டங்கள் காணப்பட்டாலும் 2023/ 24 நிதியாண்டில் லிற்றோ நிறுவனத்தினால் இலாபமீட்ட முடிந்தது என்பதை அறிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு கட்டுப்படியாகும் விலையில் திரவப்படுத்தப்பட்ட பெற்றோலிய வாயு கிடைப்பதை உறுதிப்படுத்துவதில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படும் அதேநேரம், எதிர்வரும் நிதியாண்டுகளில் கிராமப்புறத் துறைக்கும் எமது அடைவு எல்லையை விரிவுபடுத்தவுள்ளோம்" என்றார்.

பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான மாற்றீடாக திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயுவுக்கு மாறுவதன் முக்கியத்துவத்தை ஊக்குவிக்கும் நிறுவனத்தின் அறிவூட்டல் முயற்சிகள் உள்ளிட்ட பாதுகாப்புத் தொடர்பான நிறுவனத்தின் பல்வேறு நோக்கங்கள் பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இந்திய முன்னாள் உதவித் தூதுவர் நடராஜனின் நூல் வெளியீட்டு விழா

**இக்பால் அலி**





கண்டி – யாழ். உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் உதவித் தூதுவராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள இந்தியாவைச் சேர்ந்த ஏ. நடராஜன் எழுதிய 'பொரம் த விலேஜ் டு த குளோபல் ஸ்டேச்' (அனுபவ வாழ்க்கைக் குறிப்பு) ஆங்கில நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 03 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4.00 மணி முதல் 5.30 மணிவரை பேராதனை ரெஸ்ட் ஹவுஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. கலந்து சிறப்பிக்கவுள்ளார். நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வரவேற்புரையை சமூக செயற்பாட்டாளர் முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்தன், நூல் நயவுரையை பேராதனைப் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் நெலும் தீபிகா உடகம, நூல் அறிமுகவுரையை பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சரத் பி.எஸ். அபயக்கோன் மற்றும் பேராதனை பல்கலைக்கழ பேராசிரியர் வி. மகேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரையை நூலாசிரியரும் ஓய்வுபெற்ற உதவித் தூதுவருமான ஏ. நடராஜன் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தக சங்கம், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், மத்திய மாகாண இந்த மாமன்றம், கண்டி இந்து இளைஞர் மன்றம், கண்டி தமிழ்ச் சங்கம், கண்டி முத்தமிழச் சங்கம், மாத்தளை மகாத்மா காந்தி சபை, மாத்தளை தமிழ் இலக்கிய மன்றம், மலையக கலை – கலாசார (இரத்தின தீபம்) சங்கம், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் என்பனவற்றின் பிரதிநிதிகள், அசோகா குரூப் நிறுவனத் தவிசாளர் பி.டி.ஆர். ராஜன், சன்ரயிஸ் பிஸ்கட் நிறுவன பணிப்பாளர் தொழிலதிபர் எஸ்.முத்தையா ஆகியோர் கலந்து கொள்வர்.

# வெலிகம வீதி விபத்தில் இரு வெளிநாட்டவர் பலி

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம மிதிகம பகுதியில் (30) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரு வெளிநாட்டவர் பலியாகியதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

காலி மாத்தறை பிரதான வீதியில் மிதிகம என்ற பிரதேசத்தில் மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பஸ் வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இவ்விருவரும் பலியாகினர். பஸ் வண்டியின் பின்புற சில்லுக்குள் சிக்கியே உயிரிழந்துள்ளனர்.

இவ்விருவரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லையெனவும் விபத்தின் போது அவர்களை அடையாளம் காணுவதற்கான ஆவணங்கள் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு விபத்து சம்பந்தமாக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

# சீனன்கோட்டை ஜாமிஅத்துல் பாஸியாவில் சுதந்திர தின நிகழ்வு

76 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பேருவளை சீனன் கோட்டை ஜாமிஅத்துல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடம் ஏற்பாடு செய்துள்ள சுதந்திர தின நிகழ்வு எதிர்வரும் 4ம் திகதி கலாபீட வளாகத்தில் காலை 8:00 மணிக்கு அதிபர் மௌலவி எம். ஏ.எம் அஸ்மிகான் (முஅய்யிதி) தலைமையில் நடைபெறும்.

கலாபீட நிர்வாக சபைத் தலைவர் சட்டத்தரணி எம் ஸீ எம் ஹம்ஸாவின் வழிகாட்டலின் கீழ் நடைபெறும் நிகழ்வில் நாட்டில் சாந்தி சமாதானம் ஐக்கியத்திற்காக விசேட துஆ பிரார்த்தனையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

"தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக தியாகத்துடன் பங்களிப்புச் செய்த தலைவர்கள்" என்ற தலைப்பில் அதிபர் மௌலவி எம் ஏ எம் அஸ்மி கான் (முஅய்யிதி) உரையாற்றுவார். கலாபீட பணிப்பாளர் மௌலவி எம் ஜே எம் பஸ்லான் (அஷ்ரபி) உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொள்வர்.



கொல்லிமலை சித்தர் சுவாமிகள் தனிப்பட்ட விஜயம் ஒன்றினை மேற்கொண்டு நேற்று பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்தார். நாளை இரண்டாம் தேதி மாத்தளையில் நடைபெறும் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கொடியேற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு அடியார்களுக்கு நல்லாசி வழங்கவுள்ளார். மேற்படி சுவாமியை சமூக செயற்பாட்டாளர் எஸ். விக்கிரமசிங்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றபோது எடுத்த படம்.

## இரண்டு வருடங்களுக்கும் மேலாக

# தந்தையினால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான 13 வயது சிறுமி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

இரண்டு வருடங்களுக்கு மேலாக தந்தையினால் ஏற்படும் பாலியல் துஷ்பிரயோகத்தை பொறுத்திருக்க முடியாமல் 13 வயதுடைய சிறுமி பொலிஸ் நிலையத்துக்கு தனியாகச் சென்று அது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளதுடன் கடந்த (28) திகதி தந்தை நொச்சியாகம பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நொச்சியாகம. பொலிஸ் பகுதிக்குட்பட்ட 34 வயதுடைய தந்தையான கொத்தனார் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமி அவரது தாய், தந்தை மற்றும் சகோதரனுடன் வீட்டில் வாழ்ந்து வருவதுடன் இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 06இல் கல்வி பயிலும் காலம் தொடக்கம் இதுவரைக்கும் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தன்னை இடையிடையே தந்தை துஷ்பிரயோகம் செய்வதாக சிறுமி பொலிஸ் நிலயத்தில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து தந்தையினால் ஏற்படும் பிரச்சினைகளை பொறுத்துக் கொள்ள முடியாமல் சிறுமி இது தொடர்பில் தந்தையின் தாயிடம் தெரிவித்துள்ளதாகவும் இதன் பின்னர் தன்னை பாட்டியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றதாகவும் பின்னர் (28) மீண்டும் தன்னை தாய், தந்தை இருக்கும் வீட்டிற்கு அழைத்துச் செல்ல முயற்சித்த போது பாட்டிக்கு தெரியாமல் பொலிஸ் நிலையம் வந்ததாக சிறுமி அளித்த வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது. சந்தேக நபரான தந்தை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளதுடன் சிறுமி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# ஆயுதங்களுடன் வாகனத்தில் பயணித்த இருவர் சந்தேகத்தில் கைது

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



கொலை செய்யும் நோக்கில் ரீ 56 துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் வாகனத்தில் பயணித்த இரண்டு சந்தேக நபர்களை களுத்துறை பொலிஸ் பிரிவின் ஊழல் குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் தெல்கொட வீரப்பன் மற்றும் பாஜா என்ற புனைப் பெயர்களில் அடையாளப்படுத்தப்படும் 46 மற்றும் 29 வயது நபர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். யுக்திய பொலிஸ் நடவடிக்கைக்கு சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் நடவடிக்கையில் தெல்கொடவிலிருந்துஅங்குருவாதொட்ட நோக்கிப் பயணித்த மோட்டார் வாகனமொன்றை நார்த்துபான பாலத்தடியில் பொலிசார் சோதனையிட்டபோதே ஆயுதங்களுடன் சந்தேக நபர்கள் கைதாகியுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களை வாகனத்துடன் கைது செயத பொலிசார் வாள், கைக்குண்டு மற்றும் 11 கிராம் ஹெரொயின் போதைப் பொருளையும் கைப்பற்றியுள்ளனர். இவர்களிடத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார்பிரதானசந்தேக நபரின் வீட்டில் மேற்கொண்ட சோதனையின்போது மேலும் வாள், துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் டீ. ராஜபக்ஷ, பிரதான பொலிஸ் பரிசோதகர் சனத் குமாரவின் ஆலோசனையில் உப பொலிஸ் பரிசோதகர் நுவன் கோரலகே தலைமையிலான பொலிஸ் குழுவினர் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளர்.

# தனது மனைவியை தீ மூட்டி கொலை செய்த நபருக்கு மரண தண்டனை

## அநுராதபுரம் மேல் நீதிமன்றம் தீர்ப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

2 பிள்ளைகளின் தாயான தனது மனைவியை கடுமையாக தாக்கி உடலுக்கு தீ வைத்து படுகொலை செய்த கணவனுக்கு அநுராதபுரம் மேல்நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

நொச்சியாகம பஹல மஹரகஹவெள பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவருக்கே அநுராதபுரம் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. குளியாப்பிட்டி தற்போதைய மேல் நீதிமன்ற நீதிபதி மனோஜ் தல்கொடபிட்டிய மேற்படி மரண தண்டனையை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

தீர்ப்பின் போது நீதிபதி அது தொடர்பில் தெரிவிக்கையில், மனிதப்படுகொலை செய்துள்ளதாக குற்றவாளிக்கு எதிராக முறைப்பாடுகளில் முன்வைக்கப்பட்டுள்ள கடும் குற்றச்சாட்டுக்கள் சந்தேகங்களின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2010ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினத்தில் மேற்படி நபர் தமது மனைவியை கடுமையாக தாக்கி அவர் மீது மண்ணெண்ணெயை ஊற்றி கடுமையான காயங்களுக்குட்படுத்தி படுகொலை செய்துள்ளார். அந்த வகையில் அந்த பிரதிவாதிக்கு எதிரான சட்டமா அதிபரினால் குற்றவியல் தண்டனைக் கோவை சட்டத்தின் 296ஆவது சரத்திற்கிணங்க அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் நீதிமன்ற மருத்துவராக பணிபுரிந்த அஜித் ஜயசேன உள்ளிட்ட 12 பேர் இந்த வழக்கில் சாட்சிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

# சேவையிலிருந்து அகற்றப்பட்ட 17 சொகுசு பஸ்கள் புனரமைப்பு

## 01 கோடி ரூபா செலவு, 99 கோடி ரூபா சேமிப்பு



இலங்கை போக்குவரத்து சபையின் சுற்றுலா சேவைக்கு சொந்தமான 17 அதி சொகுசு பஸ்கள் புனரமைக்கப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவின் ஆலோசனைக்கமைய இந்த பஸ்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

சொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவைக்கு சொந்தமான இரத்மலானை வளாகத்தில் புனரமைக்கப்பட்ட பஸ் வண்டிகளின் திருத்தப்பணிகளுக்கு பத்து மில்லியன் ரூபாவுக்கும் குறைவான தொகையே செலவிடப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். இந்த பஸ்களில் ஒன்றை நெடுஞ்சாலைகளில் இயக்குவதன் மூலம் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்ட முடியும். அமைச்சர் கலாநிதி பந்துலு குணவர்தன, மேற்பார்வை அதிகாரியாக பொறியியலாளர் குஷான் வெகொடோபொலவை நியமித்ததுடன் இந்த பஸ்களை புனரமைக்கும் பொறுப்பையும் வழங்கினார். அதன்படி கடந்த செப்டம்பர் மாதம் 19 மில்லியனாக இருந்த நிறுவனத்தின் வருமானம் இந்த ஜனவரிக்குள் 42 மில்லியனாக உயர்ந்துள்ளது. இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர், "இன்று இலங்கையின் முகாமைத்துவத் துறையில் புதிய முன்மாதிரியும் புதிய பெறுமதியும் சேர்க்கப்படும் நாள். சில காலமாக இடம்பெற்று வரும் திறமையற்ற முகாமைத்துவத்தினால் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிய தலைவரை நியமித்துள்ளேன். மோசடி, ஊழல், முறைகேடுகள் அற்ற வினைத்திறனான மற்றும் வினைத்திறனான இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றும் பொறுப்புடன், இ.போ.சவை முறையான அரச சேவை நிறுவனமாக மாற்றுவதை இலக்காகக் கொண்டே இந் நியமனம் வழங்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் சரியான முறையில் பொதுமக்களுக்கு சேவையை வழங்கும் நிறுவனமாக இலங்கை போக்குவரத்து சபையை மாற்றுவதே இலக்காக வழங்கப்பட்டுள்ளது. ஓராண்டுக்கு முன், நாங்கள் இந்த இடத்துக்கு வந்தபோது, பொதுநலவாய

06



சுதந்திர தின பாராசூட் சாகச ஒத்திகையின் போது காயமடைந்த வீரர்களின் நலம் விசாரிப்பதற்காக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் இராணுவ ஆஸ்பத்திரிக்கு சென்றிருந்தார். காயமடைந்த இராணுவ மற்றும் விமானப்படை வீரர்களின் நலன்களை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விசாரித்ததுடன் அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

# இரண்டு சட்டமூலங்களில் கையெழுத்திட்டு சான்றுரைப்படுத்தல்



பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட மத்தியஸ்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம், நொத்தாரிசு (திருத்த) சட்டமூலம் ஆகிய இரு சட்டமூலங்களில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (31) கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய, இந்தச் சட்டமூலங்கள் 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மத்தியஸ்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்று அங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டம், 2024 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்த) சட்டமாக அமுலுக்கு வருகின்றன.

# பொதுத்தேர்தலை மிகுந்த பலத்துடன் பொதுஜன பெரமுன எதிர்கொள்ளும்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை பொதுஜன பெரமுன மிகுந்த பலத்துடன் எதிர்கொள்ளுமென்றும், தேர்தலில் கட்சி பெரு வெற்றிபெறும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் வெற்றியை நோக்கி கட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ வெளிநாடு சென்றுள்ள நிலையில், கட்சியின் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்களா என

06

இலங்கை மத்திய வங்கியின் இலட்சினையை தவறாகப் பயன்படுத்துதல்
சிக்கிக்கொள்ள வேண்டாம்
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
இலங்கை மத்திய வங்கியின் இலட்சினையை தவறாகப் பயன்படுத்தி சமூக வலைத்தளங்களில் பல ஏமாற்றுபேர்வழிகள் தொழில் தொழில் நடவடிக்கைகளை நடாத்திவருகின்றனர்




இவ்வாறான தொழில்களுடன் இலங்கை மத்திய வங்கிக்கு எவ்வித தொடர்பும் இல்லை.
இது இலங்கை மத்திய வங்கி வழங்கும் செய்தி

கல்வி அமைச்சு
+9411 2879720/+9411 2879727
info@mohe.gov.lk
www.mohe.gov.lk
செயலாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி
கல்வி அமைச்சு
உயர் கல்வி பிரிவு
18, வார்ட் பிளேஸ், கொழும்பு 07.

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25அ பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய உயர் கல்வி துறைக்கு பொறுப்பான அமைச்சரினால் வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களின் பட்டியல், www.mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

மேலும், கீழ் தரப்பட்டுள்ள படிகளை பின்பற்றி 2023.12.31 ஆம் திகதி வரை அமைச்சினால் அங்கீகரிக்கப்படும் பட்டப்படிப்பு கற்கைகள் தொடர்பில் விபரங்கள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி பத்திரங்கள் அனைத்தையும் உங்களால் தரவிறக்கம் செய்ய முடியும்.

www.mohe.gov.lk → Universities & Institutes → Degree Awarding Insititute → Recognized Degree

CINEC SIBA CAMPUS CA ICBT KIU SLTC ESOFT RIC BCI BMS IIHS NBI INSTITUTE SLINTEC NIIBS LYCEUM CAMPUS

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் தை மாதம் 18ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 20

### குறள் தரும் சிந்தனை



அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது

அந்தணர் என்பதற்குப் பொருள் சான்றோர் என்பதால், அறக்கடலாகவே விளங்கும் அந்தச் சான்றோரின் அடியொற்றி நடப்பவர்க்கேயன்றி, மற்றவர்களுக்குப் பிற துன்பக் கடல்களைக் கடப்பது என்பது எளிதான காரியமல்ல.

## பணம் ஈட்டுவதை இலக்காக கொண்டதல்ல மருத்துவசேவை!

தெற்காசியாவில் இலவச சுகாதார சேவையை சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இலங்கை முன்னெடுத்து வருகின்றது. இதன் பொருட்டு விசாலமான கட்டமைப்பைக் கொண்டுள்ள இந்நாடு, வருடா வருடம் பெருந்தொகை நிதியை வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்து செலவிட்டு வருகிறது.

இந்த இலவச சுகாதார சேவை தரமான முறையிலும் சிறப்பாகவும் முன்னெடுக்கப்படுவதன் பயனாக இந்நாட்டு மக்கள் ஆரோக்கிய ரீதியில் பிரதிபலன்களை அடைந்து கொண்டுள்ளனர். இந்நாட்டின் இலவச சுகாதார சேவையை அரசாங்கம் தரமான முறையிலும் சிறப்பாகவும் முன்னெடுக்கின்ற அதேநேரம், தனியார் சுகாதார சேவையும் முன்னேற்றகரமான நிலையில் உள்ளது.

அதன் பயனாக நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சைகளுக்காக நாட்டில் குறிப்பிடத்தக்க அளவிலானோர் தலைநகரிலும் பிரதான நகர்களிலும் உள்ள தனியார் மருத்துவமனைகளை நாடக்கூடியவர்களாக உள்ளனர்.

இருந்த போதிலும் சில தனியார் மருத்துவமனைகள் நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை வழங்கவும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும் அதிகரித்த கட்டணத்தை அறவிடுகின்றன. இது தொடர்பில் மக்களே குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கும் நிலைமை காணப்படுகிறது. இக்குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லாமல் இல்லை என்பதுதான் பலரதும் கருத்தாகும்.

குறிப்பாக சில மருத்துவ நிபுணர்கள் நோயாளர் ஒருவருக்கு ஐந்து பத்து நிமிடங்கள் ஆலோசனை வழங்கவென மூவாயிரம் ரூபாவுக்கும் மேல் கட்டணம் அறிவிடக் கூடியவர்களாக உள்ளனர். அந்தளவுக்கு தனியார் நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை சேவை காணப்படுகிறது.

அதிலும் ஒரு சில மருத்துவ நிபுணர்கள், தமது ஆலோசனைக்கு அமைய பெறப்படும் மருத்துவ அறிக்கைகளை சில நிமிடங்கள் பரிசீலனை செய்து ஆலோசனை வழங்கவும் கூட கட்டணம் அறவிடுகின்றனர். இது நியாயம் காண முடியாத விடயமாகவே பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் விமர்சனங்களும் உள்ளன.

இவ்வாறான சூழலில் தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை அளிப்பதற்காக அதிக கட்டணம் அறவிடப்பட்டமை தொடர்பில் அண்மையில் சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உணவு மற்றும் மருந்து பரிசோதகர் குறித்த வைத்தியசாலையின் நிர்வாகத்திற்கு எதிராக மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

நீதிமன்றம் இம்மனுவை விசாரித்த போது சிகிச்சைக்காக வரும் நோயாளர்களிடம் அதிக கட்டணம் அறவீடு செய்ததை வைத்தியசாலையின் பிரதான நிர்வாகத்தினர் ஒப்புக் கொண்டனர். அதனை அடிப்படையாகக் கொண்டு குறித்த வைத்தியசாலையின் நிர்வாகத்திற்கு எதிராக 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம், குறித்த அபராதத்தை செலுத்தத் தவறினால் ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இந்நாட்டின் தனியார் மருத்துவ சேவை வரலாற்றில் இது ஒரு முக்கியத்துவம்மிக்க நீதிமன்ற உத்தரவாகும். இந்த உத்தரவு தனியார் மருத்துவமனைகள் நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை சேவை, சிகிச்சை உள்ளிட்ட அனைத்துக்கும் நியாயமான கட்டணத்தை அறவிட வழிவகுக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

முற்றிலும் தரமான இலவச சுகாதார சேவை நடைமுறையில் இருக்கும் நாட்டில் தனியார் மருத்துவத் துறையின் ஊடாகவும் சேவை பெற்றுக்கொள்ள மக்கள் வருகின்றனர். அவர்களை தனியார் மருத்துவத் துறையினர் மதித்து செயற்பட வேண்டும். அவர்களுக்கு நியாயமான கட்டணத்தில் சேவை வழங்க வேண்டும். அதற்கான ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதுவே ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமையும்.

தனியார் மருத்துவ சேவை பணம் அறவிடப்படக் கூடிய ஒன்று என்றாலும் அது பணம் உழைப்பதை இலக்காகக் கொண்டதாக இருக்க முடியாது. மக்களுக்கு தரமான சேவையை நியாயமான கட்டணத்தில் பெற்றுக்கொடுக்கக் கூடியதாக தனியார் மருத்துவ சேவை இருக்க வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் மக்களை அதிகளவில் கொண்டுள்ள இந்நாட்டில் தனியார் மருத்துவத் துறையினரின் சேவை எல்லா மக்களையும் சென்றடையக்கூடிய வகையில் அமைய வேண்டும். அப்போது பணத்துக்காகவன்றி மக்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடன் தனியார் மருத்துவத்துறையும் செயற்படுகிறது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்படும். அதுவே இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# உலக விவகாரங்களை அணுகுவதில் முக்கிய பாத்திரமாக உருவெடுத்துள்ள சவூதி அரேபியா



சவூதி அரேபியா உலக அரசியல் அரங்கில் ஒரு முக்கிய இராஜதந்திர கதாபாத்திரமாக உருவெடுத்துள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டு முழுவதும், சவூதி அரேபிய இராச்சியம் குறிப்பிடத்தக்க சர்வதேச உச்சிமாநாடுகளை நடத்தியது. ஓகஸ்ட் மாதம், உக்ரேனிய நெருக்கடி பற்றிய கலந்துரையாடலுக்காக சுமார் 40 நாடுகளைச் சேர்ந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களை வரவழைத்து ஜித்தா நகரில் உச்சிமாநாட்டை நடத்தியது. வளைகுடா நாடுகளின் கூட்டுறவுக் கவுன்சில் (GCC) மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) ஆகியன தங்கள் தொடக்க உச்சிமாநாட்டை ஒக்டோபர் மாதத்தில் சவூதியில் நடத்தின. காசாவின் போர் நிலைமைக்கு தீர்வுகாணும் வகையில், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை நிவர்த்தி செய்ய நவம்பர் மாதம் ரியாத் நகரில் ஒரு அரபுஇஸ்லாமிய உச்சி மாநாட்டைக் கூட்டியது. இதைத் தொடர்ந்து சவூதிஆபிரிக்க உச்சிமாநாடு நடைபெற்றது. மேலும் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் சவூதிக்கான விஜயத்தைத் தொடர்ந்து ஒரு முக்கிய சவுதி_ ரஷ்ய உச்சிமாநாடு நடைபெற்றது.

சூடானில் உள்நாட்டுப் பிரச்சினைகளால் ஏற்பட்ட பதற்ற நிலையின் போது சவூதி தனது கடற்படையை பயன்படுத்தி மேற்கொண்ட மீட்புப்பணி உலகளவிலும் பாராட்டப்பட்டது.

அரசியல்சார் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்கில், வளைகுடா நாடுகளின் கூட்டுறவுக் கவுன்சில் (GCC) மற்றும் ஐந்து மத்திய ஆசிய நாடுகளின் (C5) தலைவர்களை இணைத்து ஜுலை மாதம் ஜித்தா நகரில் சவூதி ஒரு உச்சிமாநாட்டை நடத்தியது.

ஓகஸ்ட் மாதம், உக்ரைன் போர் விவகாரம் தொடர்பாக ஜித்தா நகரில் ஒரு அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

சவூதி தனது சுறுசுறுப்பான வெளியுறவுக் கொள்கையை மேம்படுத்தும் விதத்தில் , நவம்பர் மாதம் ரியாத் நகரில் சவூதிஆபிரிக்க உச்சி மாநாட்டை நடத்தியது.

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான், உச்சிமாநாட்டின் போது ஆபிரிக்காவில் மன்னர் சல்மான் மேம்பாட்டு முன்முயற்சித் திட்டத்தை நிறுவுவதாக அறிவித்தார்.

காஸா மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நிலைமையின் உக்கிரம் காரணமாக, நவம்பர் மாதம் ஒரு அரபுஇஸ்லாமிய உச்சிமாநாட்டிற்கு சவுதி அரேபியா அழைப்பு விடுத்தது. ரியாத் நகரில் நடைபெற்ற இவ்வுச்சிமாநாட்டில் 57 க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றன.

சவூதி கரீபியனினருடனான (CARICOM) தனது முதல் உச்சிமாநாட்டை நவம்பர் மாதத்தில் நடத்தியது. 2023 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சவூதி அரேபியாவிற்கு இராஜதந்திர விஜயமொன்றை மேற்கொண்டு பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மானோடு பல கட்ட சந்திப்புகளை நடத்தினார்.

## இலங்கையுடனும் உறவுகளை பலப்படுத்தும் நடவடிக்கைகள்

சவூதி மற்றும் இலங்கைக்கு இடையிலான வரலாற்று ரீதியான உறவுகளையும் தாண்டி, பாரம்பரியமாக புலம்பெயர் தொழிலாளர்களின் நலன் மற்றும் ஹஜ் உம்ரா விவகாரங்கள், பொருளாதாரம்சார் நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

விஷன் 2030 என்ற இலட்சிய திட்டத்துடன் சர்வதேச அரங்கில் முன்னணிப் பாத்திரத்தை சவூதி அரேபியா வகிக்கும் நிலையில், இலங்கையும் தற்போது சவூதியுடனான பன்முக உறவுகளை மேம்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், சவூதி அரேபியாவில் இருந்து இலங்கைக்கான முதலாவது இருதரப்பு அமைச்சர்களின் விஜயமானது சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் கௌரவ பைசல் பின் பர்ஹான் அவர்கள் இலங்கைக்கு மார்ச் 2022 இல் விஜயம் செய்ததில் இருந்து ஆரம்பமானது. கடந்த மார்ச் 2022 முதல் ஜுன் 2023 இற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் இருந்து சவூதிக்கு 7 அமைச்சர்கள் விஜயம் செய்துள்ளனர். இதில் ஜனவரி 2023 இல் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ அலி சப்ரியின் விஜயமும் அடங்கும்.

இலங்கையும் சவூதி அரேபியாவும் இடையில் கடந்த 202223 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சில இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.





இலங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கு இடையில் நிலவி வரும் இருக்கமான உறவானது மேலும் பல முன்னேற்றகரமான இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த பரிய பலமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**காலித் ரிஸ்வான்...**

# கல்முனை பொதுநூலகத்தின் அவலநிலைக்கு கிழக்கு ஆளுநர் நேரில் சென்று உடனடித் தீர்வு

கல்முனை பொதுநூலகத்தின் அவலநிலையை பாராளுமன்ற உறுப்பினர் முஸர்ரப்பின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரடியாக வந்து பார்வையிட்டார்.

1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஏ.ஆர்.எம். மன்சூர் கல்முனை தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தமிழ்,முஸ்லிம் மக்களின் பேராதரவுடன் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். தனது அரசியல் வாழ்க்கையில் முதலாவது சேவையாக தமிழ்,முஸ்லிம் மக்களின் நலன் கருதி கல்முனையில் கவனிப்பாரற்றுக் கிடந்த குளத்தில் மண் நிரப்பி சகல வளங்களையும் கொண்ட ஒரு பொதுநூலகத்தை அமைத்தார்.

இந்தியாவிலிருந்து அதிகளவு புத்தகங்களை இந்நூலகத்துக்கென கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து தகுதியும் திறமையும் வாய்ந்த பொது நூலகர் கணபதிப்பிள்ளை வசந்தாதேவியை அழைத்துவந்து அப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருந்த ஏ.சி.எஸ். ஹமிட் மூலம் 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பொது நூலகத்தைத் திறந்து வைத்தார்.

கொழும்பு, யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு ஆகிய முக்கிய நகரங்களில் காணப்படும் பொதுநூலகங்களுக்கு அடுத்தாற் போல் கல்முனை பொதுநூலகத்தை அபிவிருத்தியடையச் செய்தார்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்ததாக விளங்கிய கல்முனை பொதுநூலகம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக அவலநிலையில் காணப்படுகின்றது. பொதுநூலகமானது இக்கட்டட வளாகத்தின் ஒரு பகுதிக்குள் முடக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் மிகுதிப் பெரும்பகுதி கல்முனை மாநகர சபைக்கான காரியாலயங்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமன்றி, நூலக வளாகமானது கனரக வாகனங்களும் குப்பை ஏற்றும் வாகனங்களும் நிறுத்தி வைக்கப்படுகின்ற இடமாக மாறியுள்ளது. பொதுநூலகமானது இவ்வாறான அவலநிலைக்குச் சென்றுள்ளமை குறித்து வாசகர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர். தமிழ், முஸ்லிம் வாசகர்களின் வாசிப்புக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த பொது நூலகத்துக்கு ஏற்பட்டுள்ள கதி குறித்து வாசகர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.





## ஆளுநர் செந்தில் தொண்டமான், கல்முனை அபிவிருத்திக்குழுத் தலைவர் எஸ்.எம்.எம். முஸர்ரப் எம்.பி ஆகியோருக்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ஏ.அப்துல் கபூர் பாராட்டு

கல்முனை பிரதேச தமிழ், முஸ்லிம் மாணவர்களின் நன்மை கருதி பொதநூலக கட்டட வளாகத்தில் இயங்கும் மாநகர சபை காரியாலயத்தை முற்றாக வெளியேற்றிவிட்டு, பொதுநூலகத்தை தனியாக இயங்கச் செய்யுமாறு வாசகர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை அபிவிருத்திக்குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸர்ரப் ஆகியோருக்கும் கடிதங்கள் எழுதப்பட்டிருந்தன. கல்முனை அபிவிருத்திக் குழு கூட்டங்களின் போதும் சமூக ஆர்வலரான முன்னாள் கல்முனை பிரதேச சபை உறுப்பினர். ஓய்வுநிலை அதிபர் ஏ.அப்துல் கபூர் எடுத்துக் கூறி வந்தார்.

கல்முனை பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் நடைபெற்ற வேளையில் இவ்விவகாரம் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அப்போது கல்முனைப் பிரதேச அபிவிருத்தி குழுத் தலைவரான சட்டத்தரணி முஸர்ரப் இந்த பொதுநூலகத்தை தனியாகவும் சிறப்பாகவும் இயங்கச் செய்வதற்கு முயற்சிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

இதற்கு அமைவாக கடந்த2024.01.29 பிற்பகல் 5 மணியளவில் கல்முனை அபிவிருத்திக் குழுத் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்எம். முஸர்ரப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் ஆகியோரை கல்முனை பொதுநூலகத்துக்கு அழைத்து வந்து காண்பித்தார். இத்தருணத்தில் இந்தப் பொதுநூலகத்தின் வரலாற்றையும் அதன் உருவாக்கத்தையும் கல்முனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஏ.அப்துல் கபூர் விளக்கிக் கூறினார்.

இவருடைய இவ்விளக்கத்தைக் கேட்டறிந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கல்முனை பொதுநூலக வளாகத்தில் கனரக வாகனங்களையும் குப்பை ஏற்றும் வாகனங்களையும் நிறுத்தக்கூடாது என்று கல்முனை மாநகர சபை ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

கல்முனை பொதுநூலகத்தை தனியாக இயங்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரை ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

கல்முனை பொதுநூலகத்தின் உருவாக்கத்திற்காகவும் கல்முனை கல்விச் சமூகத்தின் உயர்வுக்காகவும் பாடுபட்ட மர்ஹூம் ஏ.ஆர்.எம். மன்சூர் கண்ட கனவை நனவாக்குவதற்காக உழைத்த திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை அபிவிருத்திக் குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஸர்ரப்பிற்கும். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் கல்முனைப் பிரதேச கல்விச் சமூகத்தின் சார்பில் கல்முனை பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ஏ.அப்துல் கபூர் பாராட்டு தெரிவித்துக் கொண்டார்.

**செல்லையா பேரின்பராசா...**
*(துறைநீலாவணை நிருபர்)*

# அக்கரைப்பற்று கல்வி அலுவலக உத்தியோகத்தர் ஹபீபா உம்மா ஆற்றிய பணிகளுக்கு பாராட்டு



சுமார் 31 வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.ரி.ஹபீபா உம்மாவுக்கான சேவைநலன் பாராட்டுவிழா' அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.எஸ்.அஹமட் கியாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலக கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கங்கள் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தன. அக்கரைப்பற்று கோட்டக்கல்வி அலுவலகம், கல்முனை வலயக் கல்வி அலுவலகம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகம் போன்ற அலுவலகங்களில் ஹபீபா உம்மா பணியாற்றியுள்ளார்.



இந்நிகழ்வில் எம்.ரி.ஹபீபா உம்மா பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இவ்விழாவில் உரையாற்றிய பிரதம அதிதியான வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் உரையாற்றுகையில், "பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.ரி.ஹபீபா உம்மா வினைத்திறன் மற்றும் உற்சாகத்துடன் பணிகளை முன்னெடுத்தார். அக்கரைப்பற்று கல்வி வலயம் தேசிய ரீதியிலும், மாகாண மட்டத்திலும் புகழ்பெற்று விழங்குவதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், அலுவலகத்தில் கடமையாற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் ஆகியோரின் சளைக்காத சமாந்தரப் பணிகளே பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

எம்.ரி.ஹபீபா உம்மா போன்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் சிறந்த வழிகாட்டல், நிர்வாகத்திறன் என்பன அரச அலுவலகமொன்றுக்குக் கிடைப்பது வரப்பிரசாதமாகும். அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைகள். விடுமுறைகள், உள்ளிட்ட இதர தாபனப் பணிகளை பிழையின்றி விரைவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு இவ்வாறான அனுபவசாலிகளின் தேவை இன்றியமையாததாகும். அதிபர், ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளைக் கையாள்வதிலும், இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியான சுற்றுநிருபங்கள், ஆசிரியர் சேவை பதவி உயர்வு என்பனவற்றை பிழையின்றி சரியாக அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதிலும் இக்கல்வி வலயம், ஏனைய கல்வி வலயங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

எம்.ரி.ஹபீபா உம்மா மேலதிகாரிகளையும், உத்தியோகத்தர்கள், ஊழியர்களையும் மிகச்சரியாக வழிநடத்தி, தனது பணியில் வெற்றிகண்டார்" எனக் குறிப்பிட்டார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், கணக்காளர் கே.லிங்கேஸ்வரன், பொறியியலாளர் ஏ.அருண், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.றிம்ஸான், பிரிவுத் தலைவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

**முகம்மட் றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

# ஒற்றை வடிகால் இடைவெளி மூலம் பத்தாயிரம் கிலோ மீட்டரை அடைந்துள்ள கோல்டெக்ஸ்

செவ்ரோன் லூப்ரிகன்ஸ் பிஎல்சீ ஒரு புதிய செயல்பாட்டின் மூலம் இலங்கையின் மசகு எண்ணெய் தொழில் துறையில் அதன் தனித்துவ உற்பத்திபற்றி பெருமையுடன் அறிவிக்கிறது. கோல்டெக்ஸ் ஹெவோ லைனின் 10 ஆயிரம் கிலோ மீற்றர்களை அடையும் இந்த செயல்பாடானது அதன் ப்ரோ டிஎஸ் முழுமையான செயற்கை தொடரின் ஒரு மைல்கல்லாகும்.

இந்த அரிய செயல்பாட்டின் ஆதாரம் அண்மையில் ஒரு செய்தியாளர் மாநாட்டின் போது பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. உள்ளூர் சுற்றுச்சூழல் நிபந்தனைகளுக்கு ஏற்ப ஒரு ஒற்றை வடிகாலை பயன்படுத்தி இலங்கையில் 10.000 கிலோமீட்டரை அடையலாம் என்னும் கூற்று செயல்வடிவம் பெற்றுள்ளது.

கோல்டெக்ஸ் ஹெவோ லைனின்



இந்த அரிய சாதனையானது இலங்கையருக்கு உயர்தர இயந்திர லூப்ரிகன்களை வழங்குவதோடு பயணிகள் வாகன மோட்டார் எண்ணெய் பிரிவுக்கு வழங்குகிறது .

இந்த செயல்பாட்டின் விரிவான சான்று நுகர்வோரின் தனித்துவமிக்க கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும் கோல்டெக்ஸின் உறுதிப்பாடாகும்.

கோல்டெக்ஸ் ஹவோலைனின் இந்த ப்ரோ டிஎஸ் முழுமையான செயற்கை சுற்றுச்சூழல் தொடர்கள் உள் எரிப்பு இயந்திரங்கள் மற்றும் ஹைபிரிட் பயணிகள் வாகனங்கள் இரண்டுக்கும் பொருத்தமானது.

இந்த சோதனைமூலம் தெரிவது சூழல் நிலைமைகளை ஆராய்ந்து இவ்வாறு நிரூபனம் செய்யும் ஒரே நிறுவனம் செவ்ரோன் லூப்ரிகன்ஸ் என்பதாகும்.

இந்த அணுகுமுறையானது குறிப்பிடத்தக்கது ஏனெனில் கோல்டெக்ஸ் ஹவோலைன் முன்னாள் இலங்கை கிரிக்கெட் கெப்டனும், கிரிக்கெட் ஜாம்பவானுமான மஹேல ஜயவர்தனவுடன் இணைந்து செயல்படுவதும் ஒரு காரணமாகும்.செய்தியாளர் மாநாட்டின்போது அவர் இலங்கையின் கோல்டெக்ஸ் நிறுவன உத்தியோகபூர்வ பிரதிநிதியாக அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

# டிஜிட்டல் உருமாற்றத்திற்கு தயாராகிறது Dialog Innovation Challenge

நாடளாவிய ரீதியில் இருந்து வந்த 1200இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களால் அமோக வரவேற்பை பெற்றுள்ளது. இது இந்த தேசிய முன்னெடுப்பின் மீதுள்ள வலுவான ஈடுப்பாட்டை காட்டுகிறது. இம்முன்னெடுப்பு டிஜிட்டல் மாற்றத்திற்கு வளமூட்டி நாட்டின் டிஜிட்டல் எதிர்காலத்தை வடிவமைப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கையர்களுக்கும் விடுக்கப்பட்ட இந்த அழைப்பின் மூலம் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் பொது மக்கள் என வெவ்வேறு வயதுப்பிரிவில் வெவ்வேறு விதமான போட்டியாளர்களுடன் 1279 விண்ணப்பங்களை இந்த சவால் பெற்றுக்கொண்டது.

இந்த சவாலானது தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் மூலம் மக்களின்வாழ்வை மேம்படுத்த ஆக்கபூர்வமான எண்ணங்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் அழைப்பு விடுத்தது. டிஜிட்டல் தொழில்நுட்பங்களான செயற்கை நுண்ணறிவு, machine learning, IoT, blockchain போன்றவற்றை கொண்டு வடிவமைக்கப்பட்ட தீர்வுகள் எந்த நிலையில் இருந்தாலும் அவை

வரவேற்கப்பட்டன. பதிவுகள் தற்போது முடிவடைந்துள்ள நிலையில், தெரிவு செய்யப்பட்ட

விண்ணப்பதாரிகளின் பெயர்கள் பெப்ரவரி ஆரம்பத்தில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




பங்கேற்பாளர்களுக்கு ரூ.5 மில்லியன் பெறுமதியான பரிசுக்குவியலில் இருந்து பரிசுகளை வெல்லும் வாய்ப்புண்டு.

அதேவேளை, தெரிவுசெய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கு தமது திட்டங்களை செயற்படுத்த டயலொக் புத்தாக்குனர் நிதிய, முதலீட்டு நிதியிலிருந்து 500 மில்லியன் ரூபாய் நிதியை கோர முடிவதுடன் டயலொக்கின் பரந்துபட்ட ஆக்கபூர்வ சூழலமைப்பிலிருந்து விலைமதிப்பற்ற பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்களை பெறும் வாய்ப்பும் கிட்டும்.

# "GoviLab" விவசாய தொழில்நுட்ப ஊக்குவிப்பு; Hatch மற்றும் சர்வோதயா இணைந்து அறிமுகம்

முன்னணி சமூக நலன் பேண் சர்வோதய அமைப்பும், இலங்கையின் மாபெரும் புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிறுவனமான Hatch இணைந்து, "GoviLab" விவசாய தொழில்நுட்ப ஊக்குவிப்பை அறிமுகம் செய்துள்ளன. இந்தியாவின் PwC இன் ஆதரவுடன் இலங்கை அரசாங்கம், பில் அன்ட் மெலின்டா கேட்ஸ் மையத்தின் ஆதரவுடன் இணைந்து முன்னெடுக்கும் தேசிய திட்டமான, இலங்கையின் உள்ளடக்கமான டிஜிட்டல் விவசாய மாற்றியமைப்பு மூலோபாயத்தின் (IDAT) உள்ளக அங்கமாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

இலங்கையின் விவசாயத் துறையில் காணப்படும் பிரதான சவால்களை இனங்கண்டு முன்னுரிமைப்படுத்துவதில் இந்த ஊக்குவிப்புத் திட்டம் கவனம் செலுத்துவதுடன், அதனூடாக உணவுப்




பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் சிறியளவிலான விவசாயிகளுக்கு டிஜிட்டல் மயப்படுத்தல் விவசாய சூழல் கட்டமைப்பினால் வலுவூட்டப்படுகின்றது. இது IDAT செயற்திட்டத்துக்கு பெருமளவு பங்களிப்புச் செலுத்தும்.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில், "பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் திகழ்வது மாத்திரமன்றி, மொத்த சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் தொழில் புரியும் துறையாக அமைந்திருக்கின்ற போதிலும், மொத்த தேசிய உற்பத்தியில் அதன் பங்கு 10 சதவீதத்துக்கு குறைவாக அமைந்துள்ளது. வனஜீவராசிகள் மற்றும் போக்குவரத்து போன்ற வினைத்திறனற்ற காரணிகளால் 40சதவீதம் விரயமாகின்றதுடன், பல தரப்பினரிடையே கைமாறுவதால், நுகர்வோரை சென்றடையும் போது அசல் விலையை விட 45 மடங்கு வரை அதிகரிக்கும்.

# Pinnacle Junior ஐ அறிமுகப்படுத்தியுள்ள DFCC வங்கி




DFCC வங்கி தனது செல்வந்த வாடிக்கையாளர்களுக்காக பிரத்தியேகமாக அறிமுகப்படுத்திய வங்கிச்சேவை முன்மொழிவான DFCC Pinnacle, தற்போது DFCC Pinnacle Junior ஐ அறிமுகப்படுத்தி அதனை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. Pinnacle வாடிக்கையாளர்களின் பிள்ளைகளுக்காக பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புத்தாக்கம்மிக்க வங்கிச்சேவை முன்மொழிவானது இளம் சேமிப்பாளர்களுக்கு தங்குதடையற்ற நிதியியல் பயணத்தை உறுதிசெய்து, வியப்பூட்டும் மற்றும் பிரத்தியேகமான சலுகைகளுக்கு உத்தரவாதமளிக்கின்றது.

DFCC வங்கியின் உப தலைவரும், Pinnacle/கிளை வங்கிச்சேவை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான தலைமை அதிகாரியுமான ஷேரா ஹசன் அவர்கள் இதன் மூலமாகக் கிடைக்கும் வாய்ப்புக்கள் குறித்து கருத்து வெளியிடுகையில், "DFCC Pinnacle Junior ஐ நாம் அறிமுகப்படுத்துகின்ற இத்தருணமானது, முன்னரை விடவும் மேம்பட்ட வகையில் நிகரற்ற வங்கிச்சேவை அனுபவங்களை வழங்கவேண்டும் என்ற எமது அர்ப்பணிப்பை உரத்து எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது." என்று குறிப்பிட்டார்.

படைப்பாற்றலை மேம்படுத்தி, தொடர்ந்தும் கற்பதன் மீதான ஆர்வத்தை அதிகரித்து, இளம் தலைமுறையினருக்கு வலுவான அத்திவாரமொன்றை வழங்கவேண்டியதன் முக்கியத்துவத்தை DFCC Pinnacle Junior தெளிவாக இனங்கண்டுள்ளது.

வெற்றி, புத்தாக்கம் மற்றும் மகத்துவம் ஆகியவற்றைக் குறிக்கும் எதிர்காலத்தை நோக்கி இளம் சிந்தனைகளை வழிகாட்டி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பிரத்தியேகமான மேடையாக DFCC Pinnacle Junior காணப்படுகின்றது.

# வெற்றியைக் கொண்டாடும் சோப் அன்ட் அலைட் இன்டஸ்ட்ரீ

கொழும்பு மெஷினரி அன்ட் இக்விப்மன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முன்னணி நிறுவனமாக விளங்கும் சோப் அன்ட் அலைட் இன்டஸ்ட்ரீ (பிரைவட்) லிமிடட் நிறுவனம் இரசாயனம் மற்றும் மூலப்பொருள் சந்தையில் தொழில்துறை முன்னணியாளராக மாறுவது என்ற எளிமையான தொடக்கத்திலிருந்து தனது அசாதாரண பயணத்தை நினைவுகூரும் வகையில் 25 வருட நிறைவை பெருமையுடன் பூர்த்தி செய்துள்ளது.

25வருட வெற்றியை முன்னிட்டு நேர்த்தியான கொண்டாட்டம் மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் அந்நிறுவனம் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் ஓர் அற்புதமான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. அந்நிறுவனத்தின் பயணத்தில் நெஸ்லே, ஹேமாஸ், யுனிலிவர், கொகாகோலா மற்றும் முன்னணியான பங்காளர்க



ளான டெல்மேஜ், பசிலூர் டீ, ஐசிஎல் மார்க்கட்டிங், ரீஜே லங்கா உள்ளிட்ட மேலும் பலர் இணைந்திருந்தனர். இது வெறுமனே பாராட்டுக்களைத் தெரிவிக்கும் ஓர் இரவாக மாத்திரமன்றி, நிறுவனத்தின் பாதையில் ஒருங்கிணைந்திருந்தவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் இதயபூர்வமான இசை நிறைந்த இரவாக அமைந்தது.

SAIL இன் முதுகெலும்பாக விளங்கும் ஊழியர்களுக்கு வெள்ளி நாணயங்கள் மற்றும் துபாய்க்கு சிறப்பு சுற்றுலாப் பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், அர்ப்பணிப்பான குழு மீது நிறுவனம் கொண்டுள்ள அக்கறைக்கு சான்றாக இது அமைந்தது.

புதிய பயணத்தின் ஆரம்பத்திற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை தொடர்பில் அனைவரும் ஆவலாகக் காத்திருந்தனர் SAIL இன் புதிய சின்னம் வெளியிடப்பட்டது.

இந்த சின்னமானது, நிறுவனத்தின் வரலாற்றின் அழகான பிரதிநிதித்துவம், கடந்த கால கொண்டாட்டங்கள் மட்டுமல்லாது, ஒரு புதுமையான எதிர்காலத்திற்கான நம்பிக்கையான படியையும் குறிக்கும் வகையில் அமைந்திருந்தது.

# மூன்று தசாப்த சிறப்பைக் கொண்டாடும் DPMC

இலங்கையின் பாரிய முன்னணி வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் உள்நாட்டின் வாகனத்தொழில் துறையில் மாத்திரமன்றி போக்குவரத்துத் துறையிலும் புரட்சியை ஏற்படுத்திய தனது 30வருட நிறைவை அண்மையில் கொண்டாடியது.

இலங்கையில் உள்ள ஏறத்தாழ அனைத்து குடிமக்களின் வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவகையில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலையில், பொருளாதாரச் சிக்கனமான மற்றும் சௌகரியம் மிக்க போக்குவரத்துத் தீர்வுகளை வழங்குவதன் ஊடாக இந்நாட்டின் வாகனத் தொழில்துறையின் புத்தாக்கத்தின் உந்துசக்தியாக DPMC காணப்படுகிறது.

டேவிட் பீரிஸ் குழுமத்தின் நிறுவுனரும், அதிபருமான டேவிட் பீரிஸ் மற்றும் குழுமத்தின் அனைத்துப் பணியாளர்களின் ஒன்று கூடலுடன் இந்த வெற்றிப் பயணத்தின் கொண்டாட்டம் பண்டாரகம பேர்ள் பேயில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டிருந்த 1,600 பணியாளர்கள் மத்தியில் சவால்களை வெற்றிகொண்டு அடுத்த மூன்று தசாப்தங்களுக்கு முன்னேறிச் செல்லுவதை ஊக்கப்படுத்தும் வகையில் அதிபர் திரு.பீரிஸ் ஆற்றிய உரை இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக அமைந்தது. இதற்கு மேலதிகமாக 30 வருட சேவையைப் பூர்த்திசெய்த ஆரம்பகாலப் பணியாளர்கள் 15 பேரும் கௌரவிக்கப்பட்டனர்.

1985ஆம் ஆண்டு ரிச்சட் பீரிஸ் மோட்டார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதுடன் DPMC ஆரம்பமாகிறது. 1994ஆம் ஆண்டு முகாமைத்துவம் கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி எனப் பெயர் மாற்றம் பெற்று 195 பணியாளர்களுடன் அதன் செயற்பாடு தொடங்கப்பட்டது.


வரையறுக்கப்பட்ட
இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

**கேள்விக்கோரலின் கால எல்லை நீடிப்பு**

கொள்முதல் இலக்கம் : CFHC/PD/T/FUEL DISPENSING UNIT / 2024/03

2024.01.12 ஆம் திகதி மிரிஸ்ஸ, திக்கோவிட்ட, நீர்கொழும்பு, அம்பலாங்கொடை, நில்வெல்ல, குடாவெல்ல, வாளச்சேனை, சுதுவெல்ல, ஹிக்கடுவ, ஹம்பாந்தோட்டை, சிலாபம், கலமெட்டிய, பேருவல, காலி, புரானவெல்ல மற்றும் கொட்பே மீன்பிடி துறைமுகங்களுக்காக இரட்டை பம்புகள் 110/130 திரவ எரிபொருள் விநியோக அலகுகள் 22, கிரிந்த, தொடந்துவ மற்றும் நில்வெல்ல மீன்பிடி துறைமுகங்களுக்காக 60/80 L/Min கலோரி ஒற்றை பம்ப் மண்ணெண்ணெய் விநியோக அலகுகள் 03 இனை வழங்கல், போக்குவரத்துச் செய்தல் மற்றும் நிறுவல் (Supply,Delivery - Installation) 20 அளவை கேன்கள் 17 கொள்வனவு செய்வதற்கா விளம்பரப்படுத்துவதற்காக அறிவித்தல் தொடர்பானது. (கால நீட்டிப்பு)

மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் அறிவிப்பு 2024.02.01 ஆம் திகதி திறக்கப்படுவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது மேலும் கேள்விக்கோரல் 2024.02.14 ஆம் திகதி பி.ப.02.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2024.02.13 ஆம் திகதி பி.ப.03.00 மணி வரை கேள்விக்கோரல் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. மேலதிக விபரங்களை எமது அதிகாரப்பூர்வ இணையதளம் மூலமாக (www.cfhc.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.

SELACINE



**தேருநர் இடாப்பு மீளாய்வு**

**தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல்.**

இந்த QR குறியீட்டை Scan செய்து பதிவு விபரங்களைப் பார்வையிட முடியும் இல்லையெனில் ec.lk/vrd எனும் எமது இணையத்தளத்தை நாடவும்.

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கமைய 2023 ஒத்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 சனவரி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் ஒரு தினத்தில் 18 வயதை பூர்த்திசெய்யும் ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள; 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பு 2024 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும்; இங்கே கீழுள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்காக அதன் II ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பதிவு அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ; அதன் III ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் / அலுவலகங்களில் வழமையான அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்க முடியுமெனவும்; தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20 அ (10) உப பிரிவின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர் சார்பாக அறியத்தரப்படுகின்றது.

2024 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி
இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தில்.

சமன் ஸ்ரீ ரத்னாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

*அட்டவணை*

| I ஆம் நிரல் தேர்தல் மாவட்டம் | II ஆம் நிரல் 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய அலுவலர் | III ஆம் நிரல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் / அலுவலகங்கள் |
|---|---|---|
| 01. கொழும்பு | எம்.எம்.எஸ்.கே. பண்டார மாபா | கொழும்பு |
| 02. கம்பஹா | டப்ளியூ.ஏ. ரவீந்திர விக்கிரமசிங்ஹ | கம்பஹா |
| 03. களுத்துறை | காலிந்திர ஜயவீர பெர்னாந்து | களுத்துறை |
| 04. கண்டி | எச்.டீ.என். சம்பத் பெர்னாந்து | கண்டி |
| 05. மாத்தளை | எச்.ஏ.ஈ. புஷ்பகுமார | மாத்தளை |
| 06. நுவரெலியா | கே.ஏ.எல்.எஸ். கலுகம்பிட்டிய | நுவரெலியா |
| 07. காலி | டப்ளிவ்.எச்.ஆர். விஜய குமார | காலி |
| 08. மாத்தறை | ரீ.டப்ளியூ. போஷிதா கௌமதி | மாத்தறை |
| 09. அம்பாந்தோட்டை | என். ரேகன் | அம்பாந்தோட்டை |
| 10. யாழ்ப்பாணம் | ஆர்.சீ. அமல்ராஜ் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 11. வன்னி | ஜே. ஜெனிட்டன் | மன்னார், வவுனியா, முல்லைத்தீவு |
| 12. மட்டக்களப்பு | எம்.பி.எம். சுப்யான் | மட்டக்களப்பு |
| 13. திகாமடுல்ல | கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க | அம்பாறை |
| 14. திருகோணமலை | ஆர். சசீலன் | திருகோணமலை |
| 15. குருநாகல் | ஆர்.எம்.எச்.பி. ரத்னாயக்க | குருநாகல் |
| 16. புத்தளம் | எஸ்.எல்.ஆர். ஜயநாயக்க | புத்தளம் |
| 17. அநுராதபுரம் | கே. முகுந்தன் | அநுராதபுரம் |
| 18. பொலன்னறுவை | பியுமி ஆட்டிகல | பொலன்னறுவை |
| 19. பதுளை | கே. காந்தீபன் | பதுளை |
| 20. மொனராகலை | என். ரேகன் | மொனராகலை |
| 21. இரத்தினபுரி | சுரங்க அம்பகஹதென்னெ | இரத்தினபுரி |
| 22. கேகாலை | சஜித் பீ. கஸ்தூரிசிங்க | கேகாலை |



ஸ்மார்ட்குரோ கற்கை நிலையத்தின் வருடாந்த அபாகஸ் விருது வழங்கும் நிகழ்வு, புதன்கிழமை மருதானை எல்பின்ஸ்டன் கலையரங்கில் நடைபெற்றது. இதில், கொழும்பு மாநகர சபை முன்னாள் முதல்வர் ரோசி சேனாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து மாணவ மாணவிகளுக்கு விருதுகள் வழங்கினர். அருகில் தேச பந்து கலாநிதி கோவிந்த பிள்ளை கௌசல்யா தேவி, பாடசாலை அதிபர் திருமதி தேவராஜ் மேநே, திரு தேவராஜ் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## சுற்றுலா செல்லவேண்டுமா?...

வழங்கிய உதவிகளை சுட்டிக்காட்டினார். இந்தியா குறித்து சாதகமான உணர்வுகளை இலங்கையர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் இந்த உதவிகள் முக்கிய பங்களிப்பை செய்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உங்களுக்கான எனது ஆலோசனை என்னவென்றால், அடுத்தமுறை நீங்கள் வெளிநாடொன்றுக்கு சுற்றுலா செல்லவிரும்பினால் தயவு செய்து இலங்கைக்கு செல்லுங்கள்.

இலங்கையின் சாதாரண பொதுமக்கள் இந்தியாவை மிகவும் உயர்வாக கருதுகின்றனர். பாராட்டுகின்றனர், இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட வேளை ஏனைய உலகநாடுகள் கைவிட்டன. இச்சந்தர்ப்பத்தில்,இலங்கைக்கு கரம் கொடுத்த நாடு இந்தியா.

நான், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டேன். எரிபொருள் வரிசைகளை நேரடியாக பார்த்தேன். உணவு அத்தியவசியப்பொருட்களுக்கான பற்றாக்குறைகளை அவதானித்தேன். அவ்வேளையில், இலங்கைக்கு உதவ முன்வந்த ஒரேயொரு நாடு இந்தியா.

இந்தியா இலங்கைக்கு 4.5 பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளை வழங்கியது. அவர்கள் சர்வதேச நாணயநிதியத்துடன் நீண்ட நாட்களாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.இலங்கைக்கு சர்வதேச நாணயநிதியத்திடமிருந்தே முதலில் உதவிகள் கிடைத்திருக்கவேண்டும். ஆனால் சர்வதேச நாணயநிதியத்தின் உதவி 03 பில்லியன் டொலர்களுக்கு குறைவானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியம் வழங்கியதை விட ஐம்பதுவீதம் அதிகமாக உடனடியாக இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்கள்
## (31.01.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
வரவேண்டிய தன வரவும் சரியான நேரத்தில் கிடைத்தாலும் அதிக செலவுகளால் பற்றாக்குறை ஏற்படக்கூடும்.

**ரிஷபம் :**
எதிர்பார்க்கும் தன வரவு வந்து சேரும். உத்தியோகத்தில் தங்கள் பொறுப்பில் உள்ள பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது அவசியம்.

**மிதுனம்:**
மன வருத்தம் கிடைக்கும். நண்பர்களின் உதவிகளை பெற முற்படுவீர்கள். உத்தியோகத்தில் வழக்கத்திற்கு மாறான வேலைப்பளுவால் அவதிப்படுவீர்கள்.

**கடகம்:**
தொல்லை கொடுத்து வந்த சிலர் மனம்மாறி தோள் கொடுக்க முன் வருவர். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படி தள்ளி வைத்த வேலை ஒன்றை செய்து கொடுக்க நேரிடும்.

**சிம்மம்:**
பயணங்களில் கவனமாக இல்லாவிட்டால் இழப்புகளை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் தங்கள் பொறுப்புகளில் கவனம் செலுத்தாவிட்டால் உயர் அதிகாரிகளின் பார்வையில் தென்படும் குறைகளுக்கு பதில் சொல்லவேண்டியதிருக்கும்.

**கன்னி:**
வரவுகள் இருந்தாலும் செலவுகள் காத்திருக்கும். ஆதாயம் உள்ள புதிய வேலை கிடைத்து மகிழ்ச்சி படுத்தும்.

**துலாம்:**
உத்தியோகத்தில் சிலருக்கு பணி செய்யும் அலுவலகத்திலேயே முக்கிய பொறுப்பு கிடைக்கலாம். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு மகழ்வளிக்கும்.

**விருச்சிகம்:**
வாக்குறுதி கொடுப்பதில் சற்று கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோபப் பார்வை இலக்காக நேரிடும்.

**தனுசு:**
உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பாராத இடமாற்றமும் சம்பள உயர்வும் கிடைக்கலாம். அலுவலகம் பற்றி புதிய நபர்களிடம் விமர்சனம் செய்து மன உளைச்சலை சந்திக்க நேரிடும்.

**மகரம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகத்தில் கிடைக்க வேண்டிய கடன் தொகை கைக்கு கிடைத்து நிறுத்தி வைத்திருந்த பணியை தொடர்வீர்கள்.

**கும்பம்:**
உத்தியோகத்தில் பதவி உயர்வு சம்பந்தமாக செய்த முயற்சிகள் பயனளிக்கக்கூடும். ஒரு சிலருக்கு சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய நேரிடும்.

**மீனம்:**
தனிப்பட்ட காரியங்களில் வெற்றி காண தக்க நண்பர்களின் உதவியோடு மீண்டும் தொடர்ந்து முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

## தேசிய சுதந்திர தின ஏற்பாடுகள்...

அசோக்க பிரியந்த தெரிவித்தார். தேசத்தின் அபிமானத்தை பாதுகாக்கும் வகையில் வழக்கம் போன்று எவ்வித குறைப்பாடுகளுமின்றி கம்பீரமானதாகவும் எளிமையான முறையிலும் இந்த நிகழ்வை நடத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. ஏழு தசாப்த தேரவாத பௌத்த தொடர்பை வலுப்படுத்தும் வகையில், தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் விஷேட அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இம்முறை நடைபெறவுள்ள சுதந்திர தின பிரதான நிகழ்வின் அணிவகுப்பில் ஆறாயிரத்திற்கும் அதிகமான முப்படை வீரர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படைவீரர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணவர்தன தெரிவித்தார்.

எவ்வித மேலதிக நிதி செலவுகள் செய்யப்படாது அந்தந்த படைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஊடாகவே சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் பெப்ரவரி (04) கொழும்பு, காலி முகத்திடலில் நடைபெறவுள்ள 76ஆவது தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்வு மற்றும் முப்படைகளின் அணிவகுப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கம் அளிக்கும் விஷேட செய்தியாளர் மாநாடு, நேற்று அரசாங்க தகவல் திணைக்களம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இச்செய்தியாளர் மாநாட்டில், பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தினித் கருணாரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுதந்திர தின பிரதான நிகழ்வின் சகல ஏற்பாடுகளும் நிறைவுற்றுள்ள நிலையில், முப்படையினரின் ஒத்திகைகள் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இம்முறை சுதந்திர தின பிரதான அணிவகுப்பில் முப்படையினர், பொலிஸ், பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் சிவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த சுமார் 6300 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களில் இராணுவத்தைச் சேரந்து 3163 பேரும், கடற்படையைச் சேர்ந்த 1013 பேரும், விமானப் படையைச் சேர்ந்த 875 பேரும் 289 பொலிஸார் மற்றும் 215 பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரும் சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த 380 பேரும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 551 பேரும் அடங்குவர்.

அத்துடன் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகள், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், இராஜதந்திரிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு சுதந்திர தின நிகழ்வை சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை, விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு 2000 பொலிஸார் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு 2000 பொலிஸார் என்ற வகையில் 04 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றார்.

## சகல பல்கலைக்கழகங்களிலும்...

அறிந்து அதனை உலகிற்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தேரவாத பௌத்தத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் இலங்கையைச் சார்ந்துள்ளது.

தொழில்நுட்ப யுகத்துக்கு தேவையான வகையில் இலங்கையின் கல்வியை பலப்படுத்த எதிர்பார்ப்பதோடு, அனைத்து பல்கலைக்கழங்களிலும் செயற்கை நுண்ணறிவு கற்கை நெறிகளை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். பாளி மற்றும் பௌத்த பட்டப்படிப்பு நிறுவனத்தில் கற்கும் மாணவர்களின் விருப்பத்திற்கிணங்க மாணவர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கான காணியையும் அரச அனுசரணையும் வழங்க தயாராக இருக்கிறோம். இதன்போது புதிய கட்டட நிர்மாணிப்புக்கு உதவிய வெளிநாட்டு நன்கொடையாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவு பரிசுகள் வழங்கினார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "2019 ஆம் ஆண்டில் இந்த கட்டட நிர்மாணத்துக்கு அடிக்கல் நடுவதற்கு பிரதமராக வந்திருந்தேன். இன்று கட்டடத்தைத் திறப்பதற்கு ஜனாதிபதியாக வந்துள்ளேன். கொரோனா தொற்று பரவலால் இந்த கட்டட நிர்மாண பணிகள் தாமதமாகியிருந்தன. வித்யாலங்கார பல்கலைக்கழகத்தின் பாளி மற்றும் பௌத்த நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு ரத்னசார தேரர் முன்னெடுத்திருந்த செயற்பாடுகள் சிறப்பானவையாகும். அதேபோல் கொடபிடிய ராஹுல நிறுவனத்தின் தேரரும் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தார்.

வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றிகொள்ள புத்த பெருமானின் போதனைகள் முக்கியமானவை. அவற்றை ஆழமாக ஆராய்ந்து உலகவாழ் மக்களுக்கு வழங்குவதற்காக இந்நிறுவனம் பெரும் பணிகளை ஆற்ற முடியும். இந்நிறுவனம் நிறுவப்பட்டு ஐந்து வருடங்கள் ஆகின்றன.

பௌத்த நாடுகளில் மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் தேரவாத பௌத்தத்தைப் பற்றிய தெரிவை வழங்கக் கூடிய பொறுப்பு எமக்கு உள்ளது. மேலும், இந்த நிறுவனங்களின் மூலம் தேரவாத நாடுகளிடையே உறவுகளை வலுப்படுத்த முடியும்.

மகா விகாரையின் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. லும்பினியில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்ட மாயாதேவி குழுவினரே, இந்தப் பணிகளை செய்கின்றனர். அதேபோல பௌத்த தர்மத்தை ஆழமாக ஆராய்வதற்கான ஆய்வு நிறுவனம் ஒன்றை நிறுவ எதிர்பார்க்கிறோம். அது தொடர்பிலான அறிக்கை இவ்வருட இறுதிக்குள் கிடைக்கும். அரசாங்கம் என்ற வகையில் தேரவாத பௌத்தத்தை உலகிற்கு கொண்டுச் செல்ல அவசியமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

## 10,000 பேருக்கு நிரந்தர...

சுற்றுலா, காணி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

'ரன் பூமி', 'ஜெய பூமி' மற்றும் 'சுவர்ண பூமி' போன்ற காணி அனுமதி பத்திரங்களை கொண்டிருந்த 10,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர காணி உறுதி வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (31) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டுக்குள் ஒரு மில்லியன் இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கான வேலைத்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர், இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை நினைத்துப் பார்க்க வேண்டும். கடுமையான நோய்ப் பாதிப்புக்கு உள்ளான நோயாளியை போல் இருந்தது. அந்த நேரத்தில் நோயாளியின் விருப்பத்துக்கு சிகிச்சை அளிக்கவே பலரும் முன்வந்தனர். ஆனால் ஒருவர் மட்டுமே நோய்க்கு பொறுத்தமான மருந்துகளை வழங்கினார். நோயாளிக்கு உரிய சிகிச்சை வழங்கப்படுவதை நோயாளி விரும்பாமல் இருக்கலாம். ஆனால் நோய் குணமாகிவிடும். நோயாளிக்கு தகுந்த சிகிச்சை வழங்கியதாலேயே நாடு சுமுக நிலைமைக்கு வந்துள்ளது.

நாம் யாருக்கும் சவால் விடுப்பதற்காக பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டின் வெற்றிக்காகவே பொறுப்புக்களை ஏற்றோம். அந்த சவாலை முடிந்தளவு வெற்றி கொள்வோம். கடந்த காலத்தில் சுற்றுலா கண்டிருந்த சரிவை சகலரும் அறிவர். அதன் இன்றைய நிலைமை தொடர்பிலும் அனைவரும் அறிவோம். சுற்றுலாத்துறை சடுதியாக அபிவிருத்தி கண்டுள்ளது.

தற்பொழுது கிரிக்கெட் தடையும் நீங்கியுள்ளது. பல வருடங்களுக்கு பின்னர் மேற்கிந்திய அணி அவுஸ்திரேலியாவை தோற்கடித்துள்ளது. அதுபோன்றதொரு எதிர்கால வெற்றியை நோக்கிச் செல்வதே எமது இலக்காகும்.

சந்தர்ப்பவாதிகள் சவால்களை ஏற்காமல் தப்பியோடுவர். ஆனால் நாடு அனைத்து துறைகளிலும் மோசமான வீழ்ச்சியைக் கண்டிருந்தபோது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொண்டார். அன்று அந்தச் சவாலை ஏற்காமல் இருந்திருந்தால் இன்று இந்த நாடு மனிதர்கள் இல்லாத பாலைவனமாக இருந்திருக்கும்.

காணி, காணி உறுதிப்பத்திரம், வீடு உள்ளிட்டவை கனவாக இருக்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதே தற்போது எமக்கு உள்ள சவாலாகும். எனவே, அதற்காக விசேட திட்டமாக "உரித்து" திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அதனால் இலங்கையின் இரண்டு மில்லியன் மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்த்திருக்கிறோம். அதன்படி, 'ரன் பூமி', 'ஜெய பூமி' மற்றும் 'சுவர்ண பூமி' போன்ற அனுமதி பத்திரங்களை கொண்டிருக்கும் 20 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர காணி உறுதியை வழங்கவுள்ளோம்.

அதற்கான ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 05 ஆம் திகதி தம்புள்ளையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் 10,000 காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. அதன் பின்னர் நாட்டின் 14,000 கிராம சேவகர் பிரிவுகளை உள்வாங்கி இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அன்று 'கொவி ஜனபத' வேலைத்திட்டம் பல இட்சம் பேருடைய வாழ்க்கையை முன்னேற்றியது. மகாவலி வேலைத்திட்டம் பலரது வாழ்வில் ஒளியை ஏற்படுத்தியது. இன்று "உரித்து" வேலைத்திட்டத்தின் ஊடாக இலட்சக் கணக்கிலானவர்களின் வாழ்வு மேம்படும். சுதந்திரத்தின் பின்னர் இவ்வாறானதொரு திட்டம் முதல் முறையாக முன்னெடுக்கப்படுகிறது. அதனால் இதனை வரலாற்று நிகழ்வாக கருத வேண்டும். வரலாற்றில் பொன் எழுத்துக்களால் எழுதப்படும்.

அது மட்டுமன்றி நாட்டின் இளம் சமூகத்தினரை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் வேலைத்திட்டம் ஒன்றும் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்கீழ் ஒரு மில்லியன் தொழில் முயற்சியாளர்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனால் இலங்கை மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் வீடு எரிப்பு...

உத்தரவிட்டுள்ளார். அதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்ட, நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகாத நான்கு பேருக்கும் பிடியாணை பிறப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் (09) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்ளுப்பிட்டி வாசஸ்தலத்திற்கு, தீ வைக்கப்பட்ட போது தீ அனர்த்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அங்கு தீயணைப்புப்படை வந்தது. இவ்வாகனத்தை தடுத்து அரசாங்க ஊழியர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீரங்காவும் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சாந்தனை இலங்கைக்கு அனுப்ப...

சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை அவர், குறிப்பிட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு இந்தியாவிலுள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாந்தனை, இலங்கைக்கு அழைத்து வரும் விடயம் தொடர்பில் தாம், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாந்தனை இலங்கை அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, இந்திய அதிகாரி ஒருவர் தமக்கு அறியப்படுத்தியதாக சிவஞானம் சிறீதரன் எம்.பி தெரிவித்துள்ளார். இலங்கை பாதுகாப்பு அமைச்சினுடைய சில உறுதிப்படுத்தலுக்காக காத்திருப்பதாகவும், உறுதிப்படுத்தல் கிடைத்தவுடன் சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டதாக சிவஞானம் சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார்.

## குடிவரவு, குடியகல்வு...

தெரிவித்துள்ளது. பயணி தனது விசா அல்லது வேறு ஏதேனும் பயண ஆவணத்தின் நம்பகத்தன்மையில் சந்தேகம் ஏற்படின், அவர்கள் செல்ல விரும்பும் நாட்டின் தூதரகம் அல்லது வெளிநாட்டுத் தூதரகத்துடன் அவற்றைச் சரிபார்க்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போலி இத்தாலிய விசாவுடன் சென்ற பயணி ஒருவர், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதையும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து (28) இச்சந்தேகநபர் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இப்பயணி, ஓமான் தலைநகர் மஸ்கட் நோக்கிச் செல்லும் WY372 ஓமான் எயர் விமானத்தில் செல்வதற்காக பதிவு செய்திருந்தார்.இவ்வேளையிலே அவரது கடவுச்சீட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதில், அவரது விசா போலி எனத் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், பயண முகவர் ஒருவர் அவருக்கு விசா ஏற்பாடு செய்ததாகவும் இதற்காக 01 மில்லியனுக்கும் அதிகமான பணம் அவருக்கு செலுத்தியதாகவும் கூறியிருந்தார்.

## ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு வழங்கியுள்ள...

ரீதியான பொறுப்பிற்கு அமையவும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட உயர் அரசாங்க பதவிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் உள்ளன.அரசியலமைப்பின் 41(ஈ) உறுப்புரையின் கீழ், பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பில்,அரசியலமைப்புச் சபைக்கு ஜனாதிபதி முன்வைத்த சிபாரிசுக்கு அங்கீகாரம் கிடைத்த பின்னரே,அப்பதவிக்கான நியமனம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் அரசியலமைப்புக்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்கு செய்யப்படும் இடையூறுகள் அரசியலமைப்பு மீறலாகவே கருதப்படும். ஜனாதிபதி அரசியலமைப்புக்கு முரணாக தனது அதிகாரங்களைப் பயன்படுத்தினால், அதற்கான நடவடிக்கைகளும் அரசியலமைப்பிலேயே வழங்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் மூலம் நிறுவப்பட்ட பாராளுமன்ற சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்பு பேரவை, நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியாக செயற்படுகிறது. அத்தோடு, அரசியலமைப்புக்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதியின் ஒத்துழைப்பையும் அரசியலமைப்புப் பேரவை வழங்குகிறது. அரசியலமைப்புப் பேரவையானது அரசியலமைப்பிற்கு அமைவாக தனது கடமைகளை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 41(ஈ) உறுப்புரையின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பான தனது கடமையை மேற்கொள்ளாமல் தவிர்க்குமாறு, அரசியலமைப்பு பேரவைக்கு பணிப்பது அரசியலமைப்பை மீறும் செயலாகும். அரசியலமைப்புச் சபையானது அரசியலமைப்பிற்கு முரணாக தனது அதிகாரங்களைப் பயன்படுத்தினால், அதற்கான தீர்வுகளும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பொதுத்தேர்தலை... (03ஆம் பக்கத் தொடர்)

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் எதிர்வரும் பொதுத் தேர்தலை பொதுஜன பெரமுன மிகுந்த பலத்துடன் எதிர்கொள்ளும். சந்தர்ப்பவாதத்துடன் செயற்பட்டு கட்சியின் கொள்கையை மாற்றப்போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சேவையிலிருந்து... (03ஆம் பக்கத் தொடர்)

மாநாட்டுக்காக கொண்டு வரப்பட்ட இந்த மதிப்பு மிக்க சொகுசு பஸ் வண்டிகள், எந்த தேவைக்கும் பயன்படுத்த முடியாத வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

உதிரி பாகங்கள், எஞ்சின்கள், இயந்திர பாகங்கள் இல்லாமை, அந்நிய செலாவணி பற்றாக்குறை போன்றவற்றை கருத்தில் கொண்டு, இந்த பஸ்களை புனரமைக்கும் பொறுப்பு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொறியியல் துறையில் அனுபவம் வாய்ந்த குஷான் வேகொடபொலவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த பஸ் வண்டிகளுக்கு தேவையான உதிரி பாகங்களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக சலுகை விலையில் பெற்றுக்கொள்வதற்காக நிறுவனங்களுடன் கலந்துரையாடினேன் .

இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி, 17 பஸ் வண்டிகளை நெடுஞ்சாலையில் இயக்கும் அளவுக்கு சீரமைக்க முடிந்திருப்பது அனைவரின் கூட்டு முயற்சியின் பலனாகும்.

தற்போது இந்த அதி சொகுசு பஸ் வண்டிகளின் சந்தை பெறுமதி 600 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாகும். குறைந்த பட்சம் பத்து மில்லியன் ரூபா செலவில் இவ்வாறான பெறுமதி கொண்ட பஸ் வண்டிகளை புதுப்பிப்பதற்கு பங்களித்த அனைவருக்கும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சில நாட்களில் இ.போ.ச யாப்பு இறுதி செய்யப்பட்டதன் பின்னர் நடைபெறும் மாநாட்டில் பங்களித்த அனைவருக்கும் விசேட கௌரவம் அளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்."

இலங்கைபோக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ், பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் குலதிலக, சொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவையின் மேற்பார்வை அதிகாரி பொறியியலாளர் குஷான் வேகொடோபொல, அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் குஷான் தேவிந்த மற்றும் ஏனைய அதிகாரிகள், இ.போ.ச ஊழியர்கள் மற்றும் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## இராஜாங்க அமைச்சராக ஷசீந்திர...

வழங்கல் இராஜாங்க அமைச்சராக ஷசீந்திர ராஜபக்ஷ நேற்று (31) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இந்நிகழ்வில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

## மலேசியாவின் புதிய மன்னர்...

மலேசியாவின் தெற்கு மாநிலத்தின் இரண்டாவது ஆட்சியாளர் சுல்தான் இப்ராஹிம் இஸ்கந்தர் பொருளாதாரத்தில் அதிக பங்காற்றுவாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாந்தனை நாட்டுக்கு...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டுக் கொண்டனர். இதன்போதே, அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

## சனத் நிஷாந்த வெற்றிடத்துக்கு...

கடந்த பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்துக்கான விருப்பு வாக்கு பட்டியலின் பிரகாரம் ஜகத் பிரியங்கர காலம்சென்ற சனத்நிஷாந்தவுக்கு அடுத்த இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுதத்திர தின நிகழ்வுகளுக்காக...

விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவற்றை கண்காணிப்பதற்கு தனி குழு அமைப்பக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமாகாண கடற்றொழில் துறைக்கு 500 மில்லியன் ரூபா அரசு ஒதுக்கீடு



வட மாகாணத்தில் கடற்றொழில்துறை அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கரைச்சி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்திலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு இவ்வருடம் 80 மில்லியன் நிதி கிடைத்துள்ளது. அதில் பெரும்பகுதி நிதி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்துக்கு கிடைத்த இந்நிதி போதுமானதல்ல. ஆனாலும், வடமாகாண சபை நிதியும் உள்ளது. அத்துடன் அமைச்சுக்களுக்கு ஊடாகவும் நிதிகள் ஒதுக்கப்படும்.

மேலதிகமாக நிதி வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

கடல் தொழில் அபிவிருத்திக்காக வட மாகாணத்திற்கு 500 மில்லியன் நிதியை அமைச்சு ஊடாக ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

இந்த ஒதுக்கீடுகளை முறையாகவும், பயனுள்ளதாகவும் பயன்படுத்த வேண்டும்.

அதற்கு பயனாளிகளும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# இராணுவத்தளபதி மருத்துவமனைக்கு விஜயம்

பாரசூட் சாகசத்தில், விழுந்து காயமடைந்த அதிகாரி மற்றும் படைவீரரின் நலம் குறித்து நேரில் விசாரிப்பதற்காக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே (30) கொழும்பு இராணுவ மருத்துவமனைக்கு விஜயம் செய்தார்.

பாரசூட் சாகசத்தின் போது ஏற்பட்ட காயங்கள் குறித்து தனது வருத்தத்தை தெரிவித்த இராணுவத் தளபதி, அவர்களிடம் தனித்தனியாக உரையாடி அவர்களது நலம் விசாரித்தார்.

மருத்துவமனையில் அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்த அவர், மருத்துவ அதிகாரிகளைச் சந்தித்து காயமடைந்த இராணுவ வீரர்களுக்கு மிக உயர்ந்த தரமான சிகிச்சையை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி விரைவாக குணமடைய அவர் உறுதி வழங்கினார்.

76 ஆவது சுதந்திர தின அணிவகுப்பு ஒத்திகையின் போது கீழே விழுந்து இவர்கள் காயமடைந்தனர்.





அக்கரைப்பற்று பஸ் டிப்போவில், 35 வருடங்கள் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆதம்லெவ்வை முஹம்மட் அமீர்அலியைப் பாராட்டும் நிகழ்வு,அண்மையில் காஞ்சிரங்குடாவில் நடைபெற்றது. டிப்போ நிர்வாகத்தினர் மற்றும் குடும்பத்தினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் அமீர்அலி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகிறார். (அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

# 2024: பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை வழங்கும் வருடமாகும்

## ஐ.தே.க. முன்னாள் எம்பி ஆசு மாரசிங்க தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டு மக்களின் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் ஆண்டாக 2024 ஐ, பெயரிட முடியுமென ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் எம்.பி ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு மார்ச் மாத ஆரம்பத்தில் நிவாரண பொருளாதாரத்தை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படும் இச்சூழலில்,கடந்த காலத்தையும் நோக்க வேண்டும் என தெரிவித்தார்.

## பொலிஸ் சிறைக்கூடத்தில்

# தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் திடீர் உயிரிழப்பு

***அநுராதபுரம் தினகரன் நிருபர்***

அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய பொலிஸ் சிறைக்கூடத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞன் ஒருவர் திடீரென நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதித்ததன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அநுராதபுரம் தெவன பியவர பகுதியை வசிப்பிடமாக கொண்ட 22 வயதுடைய எஸ்.எச். மாரம்பகே எனப்படும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; அநுராதபுரம் தலைமையக பொலிஸாரால் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் (31) 30ஆம் திகதி மாலை கைது செய்யப்பட்டு பொலிஸ் சிறைக் கூடத்தில் தடுத்து வைத்திருந்த இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த இளைஞனுடன் மேலும் மூன்றுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இளைஞனது திடீர் மரணம் குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாக இளைஞனின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.


## விலைமனுக்கள் கோரல் - 2024

### விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

தம்புத்தேகம விசேட பொருளாதார முகாமை பொறுப்பினால் கீழ்க்காணும் சேவைகளை வழங்கும் நிலையங்களுக்காக வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. தம்புத்தேகம விசேட பொருளாதார நிலையத்திற்கு உட்பிரவேசிக்கும் வாகனங்களுக்காக பிரவேசப் பத்திரங்களை விநியோகித்தல்.

02. உணவகம் - 01

03. உணவகம் - 03

இதுபற்றிய மேலதிக விபரங்களை கீழ்க்காணும் இணைய தளங்களில் மற்றும் பொருளதார நிலைய முகாமையாளர்களிடமிருந்து தொ.பே. இல. 025-2275171 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**https://thambuttegamadec.lk -**
**விசேட பொருளாதார நிலையம் - தம்புத்தேகம.**

**http://www.thambuttegamads.gov.lk/index.php/en/ -**
**பிரதேச செயலகம் - தம்புத்தேகம.**

**கட்டளை பிரகாரம்,**
**சுமித்.கே. சோமரத்ன,**
**பிரதேச செயலாளர் (தம்புத்தேகம) / பெறுகைக்குழுத் தலைவர்,**
**தம்புத்தேகம விசேட பொருளாதார நிலைய முகாமைத்துவப் பொறுப்பு, முகாமைத்துவ அலுவலகம்**
**தம்புத்தேகம.**
**2024.02.01**

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
செவ்வாய் 2024.01.30
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5375 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,002,416.00
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 7 1 4 3 3 7
ரூ.1,000,000/- அதிர்ஷ்ட இலக்கம் 256623
இலட்சாதிபதி அதிர்ஷ்ட இலக்கம் 51784

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3617 — சீட்டிழுப்பு திகதி 2024.01.30 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,990,171.12
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 18 29 38 73 — விசேட எழுத்து I — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 86604

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1723 — 2024.01.30 — 09876 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 422,324,454.00
ஆங்கில எழுத்து K — சுப்பர் இலக்கம் 16 — வெற்றி இலக்கங்கள் 16 40 44 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.01.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0201
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 8 3 8 0 3 5 — L7 எழுத்து X
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.24,282,276.52

ராசி சுப பலன் — திகதி 2024.01.30 — சீட்டிழுப்பு இலக்கம் 684 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,840,817.56
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 20 28 49 61 — தனயோக இலக்கம் 01594 — நாளுக்கான விதி எண் 22

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1405 — 2024.01.30 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,192,288.80
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 16 17 20 23 — விசேட எழுத்து B — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 22488

## திருகோணமலை வளாகம்
### இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்

**டிப்ளோமா கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்களை அழைத்தல்**

**கீழேயுள்ள கற்கைநெறிகளை தொடர்வதற்காக பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.**

1. மனித வள முகாமைத்துவத்தில் டிப்ளோமா
2. கணனி அடிப்படையிலான கணக்கிடலில் டிப்ளோமா

இந்த கற்கைநெறிகள் திருகோணமலை வளாக தொடர்பாடல் மற்றும் வர்த்தக பாடநெறிகள் கற்கைப்பீட வெளிவாரி கற்கைநெறிகள் அலகினால் நடத்தப்படுகின்றன.

➢ விண்ணப்பங்களை மூடும் திகதி: 2025 பெப்ரவரி 15
- மொழிமூலம்: ஆங்கிலம்
- காலஎல்லை: 12 மாதங்கள்
- வகுப்புக்கள் : வார இறுதிகளில்

விபரமான தகவலுக்காக கீழேயுள்ள தொடர்புகளை பார்வையிடவும்.

**http://www.cedec.esn.ac.lk/dhrm.tc** (Dip in HRM)
**http://www.cedec.esn.ac.lk/dcba.tc** (Dip in Computer Based Accounting)

தொடர்புகள்: # 077 244 6056
# 076 354 5550

**Repeat Your ad For Better Offers**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**111 ஹொண்டா கார்கள் விற்பனைக்கு**

CAZ-1159 HONDA, 2017, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல்பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714 5 42 9 58. 006962

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

HB-9824 BAJAJ, 2003, AAA-3350 BAJAJ, 2012, THREEW H EEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 8 10. 006958

QV-0358 BAJAJ, 2009, THREEWH EEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 8 10. 007005

### வர்த்தகம்

**233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு**

ZA-5140 JCB, 1994, கூடிய விலைக் கோரிக்கை க்கு . வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 9 58. 006965

**அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட\ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவி தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட / நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும் :-

| இல | பெயரும் முகவரியும் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி திலகமுனி ரேகா நிசங்சலா குணசேகர<br>இல.23,விஜிதபுர<br>தலவத்துகொட வீதி<br>பிட்டகோட்டை | நெதர்லாந்து இராச்சியத்திற்கான இலங்கையின் தூதுவராகப் பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | திரு. பசந்த யாப்பா அபேவர்தன<br>இல. 75/14 F, லக்மினிசந்த பிராதேசிய,<br>சங்வர்தன வீதி<br>பன்னிபிட்டிய | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 3 | திரு.ஆசிறி வாலிசுந்தர<br>இல. 79/33, சினமன் வீதி, குமரகேவத்தை<br>பெலவத்தை, பத்தரமுல்ல | வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனியின் தலைவராக 'நியமிக்கப்பட்டவர் |

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட / நியமிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, “செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே” என்ற விலாசத்திற்கு 2024 பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk).

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2024 பெப்ரவரி 01 ஆம் திகதி**

**பெறுகை அறிவித்தல்**

## கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை — ராகம

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் 2024 / 2025ம் ஆண்டிற்காக மின்பராமரிப்பு மற்றும் சேவை விடயங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான நிறுவனம் ஒன்றை தேர்ந்தெடுத்தல் சார்பாக வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | கேள்விகோரல் இலக்கம் | நிறுவனம் | உருப்படி | CIDA பதிவுத் தகைமை | கேள்விப் பிணை |
|---|---|---|---|---|---|
| 01 | AC/EL/2023 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை ராகம | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் 2024 / 2025 ஆண்டிற்காக மின்பராமரிப்பு மற்றும் சேவை விடயங்களை மேற்கொள்வதற்காக பொருத்தமான நிறுவனத்தை தேர்ந்தெடுத்தல் | EM4 அல்லது அதற்கு மேல் தரம் | ரூ. 50,000.00 |

02. இதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படுவர்.

03. மேற்படி விடயத்திற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய எந்தக் கேள்விதாரருக்கும் கீழ்க்காணும் விடயங்களை சமர்ப்பித்து 2024.02.01 முதல் 2024.02.21 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பப்படும் எழுத்துமூல விண்ணப்பம்
- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ. 2500.00 கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டு
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதி

04. ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விக்காக 1987 இல. 03 எனும் பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்

05. 2024.02.22 பி.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவருக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

06. சகல கேள்விகளும் இருபிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் “மூலப்பிரதி” மற்றும் “நகல்பிரதி” எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விகள் உள்ளிடும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் 2024 / 2025 ஆண்டிற்காக மின்பராமரிப்பு மற்றும் சேவை விடயங்களை மேற்கொள்வதற்கான பொருத்தமான நிறுவனமொன்றை தேர்ந்தெடுத்தல்” என்று மற்றும் கேள்வி திறக்கப்படும் தினத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(தொ.பே. இல. : 011-2959261/2 நீடிப்பு 139, பெக்ஸ் : 011-2959266)

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை, ராகம.**

# கிழக்கின் குரல்



## கிழக்கு ஆளுநர் தலைமையில் சுதந்திர தின நிகழ்வுகள்

**முன்னாயத்தக் கலந்துரையாடல்**





**(மட்டக்களப்பு விசேட நிருபர்)**

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளதை முன்னிட்டு முன்னாயத்தக் கலந்துரையாடலொன்று கிழக்கு மாகாண ஆளுநரின் மட்டக்களப்பு சுற்றுலா விடுதியில் அண்மையில் நடைபெற்றது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உள்நாட்டு , வெளிநாட்டு உல்லா சப்பயணிகளை கவரும் வகையில் சுதந்திர தினத்தன்று பழைய கல்லடிப் பாலம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு கடைத் தொகுதிகளும் அமைக்கப்பட்டு பழைய கல்லடிப் பாலம் சுதந்திர தினப் பாலம் என பெயர் சூட்டப்படவுள்ளதாக கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தவிசாளர் ஏ.பி.மதனவாசன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர், வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம்,கோபாலரெத்தினம் மற்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளரும் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருமான எந்திரி என்.சிவலிங்கம் ஆகியோர் இப்பகுதியில் கண்காணிப்பு விஜயத்தில் கலந்துகொண்டனர்.

## மல்வத்தை பிரதேச வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் கண்காணிப்பு விஜயம்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் சகிலா இஸ்ஸதீன் தலைமையிலான குழுவினர் மல்வத்தை பிரதேச வைத்தியசாலையில் சுமார் 1.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற விடுதி கட்டடத்தை பார்வையிட்டதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமும் கலந்துரையாடினார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம் மாஹிர்,தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் கள விஜயத்தில் கலந்து கொண்டனர். இதன்போது இவ் வேலைத்திட்டத்தை விரைவாக நிறைவுசெய்து மக்கள் பாவனைக்காக கையளிப்பது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் நீண்டகால தேவையாகவுள்ள குளிரூட்டி வழங்கி வைக்கப்பட்டதுடன் ஞாபகார்த்தமாக மரமொன்றையும் பணிப்பாளர் நட்டு வைத்தார்.

மல்வத்தை பிரதேச வைத்திய அதிகாரியின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். **(எம்.எம். ஜெஸ்மின்)**



கிழக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வு திருகோணமலை விவசாய உற்பத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் குறித்து சிறப்பு பயிற்சியளிக்கப்பட்டது.

(படம்: தம்பலகாமம் குறூப், திருகோணமலை நிருபர்கள்)

## டெங்கு நுளம்பு பரவும் அபாயம்



**(ஒலுவில் விசேட நிருபர்)**

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மீண்டும் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் புகை விசிறும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ. எம். முகம்மது இஸ்ஸதீன் தெரிவித்தார்.

ஒலுவில்,பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் ஒரு வார காலத்திற்குள் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு புகை விசிறும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கொழிப்பு செயலணி மற்றும் பொலிஸார் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்புரவு செய்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்தல், அவற்றின் வதிவிடத்தை முற்று முழுதாக அழித்தல், வதிவிடத்தில், நுளம்பின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானதாகும், இதுதொடர்பாக மக்களுக்கு துண்டுப்பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினர் வீடுகளுக்கு வரும் போது உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

தென்னம் குரும்பை, யோகட் கப், வெற்றுப்போத்தல்கள், வெற்று டயர்கள், பொலித்தீன் கழிவுகள் போன்ற கழிவுகளை முறையாக அகற்ற வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்கள் துப்புரவு செய்யுமாறும் அதனை மீறுபவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகள், மதஸ்தலங்கள், அரச, தனியார் நிறுவனங்களிலும் புகை விசிறும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



ஓய்வுபெற்ற அரசாங்க அதிபரும் முன்னாள் பிரதேச செயலாளருமான சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ.எம். ஹனீபாவை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அட்டாளச்சேனையில் நடைபெற்றது. 'நாம் ஊடகர் பேரவை' மற்றும் ருஹுணு லங்கா அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த 'நம்மவரைக் கொண்டாடுவோம்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற நிகழ்விலேயே இவ்வாறு கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

(படம்: பாலமுனை தினகரன், திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்)

## அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**




அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் பிரதேச செயலாளர் எம்.ஏ,சீ அகமது ஷாபீரின் ஏற்பாட்டில், பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டம், தேசிய காங்கிரஸ் தலைவரும் அட்டாளைச்சேனை ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஏ.எல்.எம் அதாஉல்லா (பா.உ) தலைமையில் நடைபெற்றது. இதன்போது பிரதேச பாடசாலைகள் அபிவிருத்தி, மைதான அபிவிருத்தி உள்ளிட்ட இன்னும் பல முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது பற்றிய பல விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், பிராந்தியத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. மேலும் வெள்ள அனர்த்தங்களை தடுப்பதற்காக விவசாய நிலங்கள், களப்புகள் என்பவற்றை நிரப்புதல், ஆறுகள், மற்றும் நீரேந்து பிரதேசங்களை முறையாக பராமரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பைஸால் காஸிம், அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எல்.மஜீட் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள, திணைக்களத்தலைவர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கவிதை நூல் வெளியீட்டு விழா

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நீலையூர் சுதாவின் 'கொத்து வேலி' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி திருகோணமலை நகராட்சி மன்ற மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

எழுத்தாளரும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளருமாகிய ச.நவநீதன் தலைமையில் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது.

## பெரும்போக நெற்செய்கையில் பாதிப்பு

**(தோப்பூர் குறூப் நிருபர்)**



தோப்பூர் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட தோப்பூர் பிரதேச விவசாயிகள் திடீர் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கைக்கு அறுவடைக்கு இன்னும் சில வாரங்கள் உள்ள நிலையில் திடீர் மழை காரணமாக பயிர்கள் சாய்ந்தமையால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் விளைச்சல் பாதிக்கப்படுவதோடு அறுடையின் போது மேலதிக செலவை எதிர்நோக்க வேண்டியேற்படுமெனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



கிழக்கு மாகாண சமூக சேவைத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சக்கரநாற்காலி விசேட தேவையுடையோருக்கு தோப்பூர் உப பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக்கினால் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

(படம்: தோப்பூர் தினகரன் நிருபர்)


## மட்டக்களப்பு சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் நிவாரண பணி

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

பிரித்தானிய முத்தமிழ் மன்றத்தின் நிதி அனுசரணையில் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் நடைமுறைப்படுத்தலின் கீழ் அண்மையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண பணி அமிர்தகழி மற்றும் சின்ன ஊரணியிலுள்ள 40 குடும்பங்களுக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் அண்மையில் (30) வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளரும் சிவாநந்தா பழைய மாணவர் சங்க தலைவருமான வீ.வாசுதேவன், உதவி பிரதேச செயலாளர் ஷியாகுல் ஹக், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், சிவாநந்தா பழைய மாணவர்கள் மற்றும் சிவாநந்தா பட்டமுன் சங்க அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.



## அம்பாறை மாவட்ட சமூக ஊடக ஆர்வலர்களுக்கான பயிற்சிப் பட்டறை



**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கியதாக கப்சோ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் 'Youth Media Project' வேலைத்திட்டம் கப்ஸோ நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட் தலைமையில் காரைதீவு லேடி லங்கா வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் ஆரம்பமானது.

GCERF, HELVETAS நிதியுதவியுடன் கப்ஸோ நிறுவனத்தின் அமுல்படுத்தலில் செயற்படுத்தப்படும் HOPE OF YOUTH வேலைத்திட்டத்தின் கீழ் Youth Media Project ஆனது இடம்பெற்றுவருகின்றது.

இவ்வேலைத்திட்டமான அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 30 சமூக ஊடக ஆர்வலர்களை கொண்டு இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்வேலைத்திட்டமானது ஒரு வருட காலத்தில் இடம்பெறவுள்ளது. இதில் முதலாவது விரிவுரையை ஊடகவியலாளர் ரிப்தி அலி வழங்கியிருந்தார்.

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**



அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபிரின் ஏற்பாட்டில் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா, வீ.வி சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# நிககொல்ல வை. எம். எம். ஏ. கிளையின் 25ஆம் வருட நிறைவும் பரிசளிப்பு விழாவும்

மாத்தளை மாவட்டத்தில் நிககொல்ல வை. எம். எம். ஏ. கிளையின் 25ஆம் ஆண்டு நிறைவு விழாவும் மற்றும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் நிககொல்ல மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் வை. எம். எம். ஏ. கிளையின் தலைவர் டி. எம். சனீர் தலைமையில் வெகு சிறப்பாக அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் மற்றும் விசேட அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் முன்னாள் தலைவரும் தேசிய விவகாரங்களுக்கான தவிசாளருமான சஹீட் எம். ரிஸ்மி மற்றும் நிககொல்ல மின்ஹாஜ் பாடசாலையின் அதிபர் என். எஸ். மஸ்பஹா, பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் எம். எம். ரிஸ்வான், ஆலோசகர் எம். ஜி. எம். லபீர் நளீமி, மாத்தளை பாடகர் கமால் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை மட்டத்தில் கையடக்கத் தொலைபேசியின் மூலம் சமூகத்திற்கு நன்மையா? தீமையா? என்பது பற்றிய பட்டிமன்றம் இடம் பெற்றது.

25 ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரதேச மக்களிடையே விளையாட்டுப் போட்டிகள், ஆக்க இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்கள் மற்றும் புலமைப் பரிசில், க. பொ. த சாதாரண தரம், பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட மாணவர் மாணவிகளுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

**இந்நிகழ்வில் உரையாற்றிய விழாவின் பிரதம அதிதியும் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவருமான இஹ்சான் ஏ. ஹமீட்;**

நிககொல்ல வை. எம். எம். ஏ. கிளையின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதே போன்று எங்களது அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 74 ஆவது ஆண்டு தினத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம்.

நாடளாவிய ரீதியில் எமது இயக்கத்திற்கு நிககொல்ல வை. எம். எம். ஏ. கிளையுடன் 175 கிளைகள் பரந்துபட்டு இயங்குகின்றன. இந்த 25 ஆண்டு நிறைவை இந்த ஊரில் உள்ள மக்கள் உட்பட நாம் அனைவரும் மிக்க மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

நிககொல்ல வை. எம். எம். ஏ. சங்கத்தைப் பொறுத்தவரையில் உண்மையிலே இந்த ஊர் மக்கள் மத்தியில் ஒற்றுமையினைக் காணமுடிகின்றது. இந்த முழுநாள் நிகழ்வில் ஊர் மக்கள் அனைவரும் கலந்து கொண்டுள்ளனர். பாடசாலைப் பிள்ளைகள், ஊர் பெற்றோர்கள், பெரியார்கள், பள்ளிவாசல், சிவில் அமைப்புக்கள்







கொள்ளாமல் இருப்பதையிட்டு நான் கவலை கொள்கின்றேன்.

எங்களது இயக்கத்தின் யாப்பின்படி தேசிய தலைவராக இரு தடவை இருக்க முடியும். அதற்கு மேல் இருக்க முடியாது. எத்தகைய திறன் வாய்ந்தவர்கள் இருந்தாலும் இரண்டு வருடங்கள்தான் இருக்கலாம். இங்கு அமர்ந்துள்ள முன்னாள் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி இரு வருடங்கள் இருந்தார். எனது பதவி காலமும் எதிர்வரும் ஜுலை மாதம் 29 ஆம் திகதி நடைபெறும் பொதுக் கூட்டத்துடன் இரு வருடங்கள் நிறைவடைகின்றன. ஏனென்றால் இவை புதிய தலைமைத்துவங்களை உருவாக்கத்தான் இந்த ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனது 18 வயதில் 1992 இல் வை. எம். எம். ஏ. இயக்கத்தில் இணைந்து கொண்டேன். 30 வருடங்கள் இச்சங்கத்துடன் இணைந்து செயலாற்றி வருகின்றேன். படிப்படியாக உள்நுழைந்து 2022 ஆம் தேசிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். நான் பதுளையில் ஒரு சாதாரண அங்கத்தவராக இணைந்துதான் தேசிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையில் இணைந்து கொள்வதற்கு இளைஞர்களுக்கு கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. எதிர்காலத் தலைவர்கள் உருவாவதற்கான வேலைத் திட்டங்கள் உள்ளன.

மிகத் திறன் வாய்ந்த தலைவர்கள் இருப்பார்களாயின் முன்னுக்கு வாருங்கள். அவர்கள் தலைவர்களாக வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அதற்கான எங்களுடைய வழிகாட்டல்கள் இருக்கின்றன. இன்று உங்களுடைய செயற்பாடுகளை நாங்கள் தெரிந்து கொள்ளக் அறிந்து கொள்வதிலும் மேலும் பயன்படுத்தப் படுவதிலும் கவனம் செலுத்த வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். கடந்த 10 வருடத்தில் நிககொல்ல கிராமம் வை. எம். எம். ஏ உடனான பயணத்தில் மிகவும் வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு இந்த ஊர் பிரமுகர்கள் இந்த ஊரின் ஒற்றுமை, ஒரு ஊரின் குழு முயற்சி முக்கியத்துவமானவை. குறிப்பாக ஊர் பள்ளிவாசல், பாடசாலை, வை. எம். எம். ஏ. ஆகியன இணைந்து செயற்படுகின்ற ஒரு திறன் ஒரு முன்மாதிரியான விடயமாகக் கொள்ளலாம்.

இந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் நான் ஏனைய கிராமங்களுக்கு பயணம் மேற்கொள்வதன் காரணமாக இக்கிராமத்தை ஒரு வித்தியாசமான கிராமமாக பார்க்கின்றேன். ஒரு முன்மாதிரிமிக்க கிராமமாகப் பார்க்கின்றேன். தம்மால் தமக்கு விதிக்கப்பட்ட செயற்பாடுகளை நேர்மையுடனும் பொறுப்புடனும் முன்மாதிரியுடனும் செய்யக் கூடிய சமூகப் பொறுப்புக் கொண்ட மக்கள் இங்கு அதிகமானவர்கள் இருக்கின்றார்கள். அந்த வகையிலே இன்றைய இந்நிகழ்வில் முதலாவது மாணவர்களுக்கான நிகழ்வும் இரண்டாவது இளைஞர் ஒற்றுமையை வலியுறுத்துகின்ற நிகழ்வும் மூன்றாவது பெண்களுக்கான நிகழ்வும் நான்காவது சிறுவர்களுக்கான நிகழ்வு என நான்கு வகைகளாகப் பிரித்து நிகழ்வுகள் இடம்பெற்றதை நாம் அவதானித்தோம். குறிப்பாக ஊர் திருவிழாப் போன்று காட்சியளிக்கின்றது. மாணவர்களுக்கு கட்டுரை கவிதைப் போட்டிகளில் பங்கு கொண்டு தம் திறனை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பளிக்கப்பட்டுள்ளன. வெற்றி பெற்ற மாணவர்களும் இங்கு கலந்து கொண்டியிருக்கின்றார்கள். கலந்து கொண்ட மாணவர்களும் இங்கே இருக்கின்றார்கள்.

பொதுவான போட்டிகளில் கலந்து கொள்ளும் போது மாணவர்கள் பெற்றோர்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் பொதுவான போட்டிகளில் புதிய விடயங்கள் புதிய அணுகுமுறைகள், வேறு அனுமானங்கள், புதிய எதிர்பார்ப்புக்கள், வழமையான வெளிப்பாட்டுக்கப்பால் சிந்திக்கும் போதுதான் வெற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அளிக்கும். எனவே இவ்வாறான போட்டிகளில் நீங்கள் கலந்து கொள்ள ஆயத்தமாகும் போது புதிய சிந்தனையில் தன்னுடைய சுய ஆக்கங்களை வெளிப்படுத்துவதில் தான் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். இந்தச் சந்தர்ப்பங்கள் நீங்கள் எதிர்காலத்தில் வளர்வதற்கு பரீட்சைக்குத் தயாராகுவதைப் போன்று வெறுமனே குறிப்புக்களை மாத்திரம் பயன்படுத்துவராக இருந்தால் நீங்கள் வளரமாட்டீர்கள். எனவே நீங்கள் இதில் கவனம் செலுத்துங்கள். சுய அறிவு ஆற்றலையும் வெளிப்படுத்த வேண்டும்.

அதிகமாக பெண் ஆசிரியர்கள் இருப்பது எமது பிள்ளைகளுக்கான ஒரு சாதகமான சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது. கற்றுக் கொண்டே கற்பிக்கும் ஆசிரியர்கள் அதிகமானவர்கள் பெண்களே. தன் பிள்ளைகளை வழிநடத்த அவர்களால் முடியுமாக இருக்கின்றது. அவ்வாறான சூழலிலே பெண்கள் கற்றலுக்கு ஆசை ஏற்படுகின்றது. என்றாலும் இடைவிலகல் இருந்திருக்கலாம். அவர்களுக்கும் பல வாய்ப்புக்கள் இருக்கின்றன. மீண்டும் விட்ட இடத்தில் இருந்து உங்கள் கல்வியை ஆரம்பியுங்கள். நிச்சயமாக உங்கள் பிள்ளைகள் கல்விமான்களாக மாறுவார்கள்.







என சகல தரப்பினர்களும் கலந்து கொண்டுள்ளனர். மிகப் பெறுமதியான பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளமை வரவேற்கத்தக்க அம்சமாகும். அவர்களுக்கு எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிககொல்ல தலைவரின் தலைமைத்துவப் பண்பு மிகவும் சிறப்புமிக்கதாக இருக்கின்றது. எல்லோருடைய கருத்துக்களையும் உள்வாங்கி சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது எனப் பலர் இன்று வியந்து பாராட்டுமளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது என்று குறிப்பிடலாம்.

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 175 வை. எம். எம். ஏ. கிளைகளை எடுத்து நோக்கினால் நிககொல்ல வை. எம். எம். ஏ. கிளையிடம் விசேட தன்மை காணப்படுகின்றது. அவர்களுடைய செயற்பாடுகள் அவதானிக்கின்ற போது புலப்படக் கூடியதாக அமைந்துள்ளன. இந்த வை. எம். எம். எம். ஏ. அமைப்புக்கு எந்தளவுக்கு செல்வாக்கு உள்ளதென்பதை இந்நிகழ்வில் கலந்து கொண்டதன் மூலம் அறிந்து கொண்டேன்.

இந்தளவு திறமைகளை வெளிக்காட்டக் கூடிய தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட இச்சங்கத்தின் தலைவர்கள் ஏன் தேசிய அளவில் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய உயர்பீட அங்கத்துவத்தைப் பெற்றுக் கூடியதாக இருந்தன. எதிர்காலத்தில் நல்ல தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு நான் பங்களிப்பையும் நல்லாதரவையும் வழங்கி வைப்பேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இந்நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் தேசமானிய சஹீட் எம். ரிஸ்மி உரையாற்றும் போது;**

கடந்த பத்து வருடங்களாக இந்த ஊரில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளுக்காக சமுகமளித்திருக்கிறேன். குறிப்பாக வருடா வருடம் நடத்தப்படும் பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா மற்றும் பரிசளிப்பு விழா எனப் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளேன்.

அந்த வகையில் இன்றைய நாளிலும் உங்களுடைய நிகழ்வொன்றில் கலந்து கொள்ளக் கிடைத்தமையிட்டு நான் பெருமகிழ்ச்சிடைகின்றேன்.

1999 ஆம் ஆண்டு நிககொல்ல வை. எம். எம். ஏ. கிளை ஆரம்பிக்கப்பட்டது. அதாவது 20 ஆம் நூற்றாண்டில் கல்வி கலாசாரம் குறிப்பாக ஒரே கலாசாரத்தைப் பின்பற்றி ஒரே மாதிரியான வேகத்தில் பயணம் செய்து 25 ஆவது வெள்ளி விழாவைக் கொண்டாடும் அளவுக்கு இந்த அமைப்பு வளர்ச்சியடைந்துள்ளது. இன்றைய நாள் 21 ஆவது நூற்றாண்டை எட்டியுள்ளது.

இது அறிவு மைய நூற்றாண்டாகும். டிஜிட்டல் புரட்சி மேலும் வளர்க்கப்பட வேண்டிய திறன்கள்








**நிககொல்ல வை. எம். எம். ஏ கிளையின் தலைவர் டி. எம். சனீர் உரையாற்றும் போது;**

1999 ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் திகதி மஸ்ஜிதுல் ரஹ்மானியாவில் ஒன்று கூடி ஆரம்பிக்கப்பட்ட வை. எம். எம். ஏ இன் கிளை இயக்கம் இன்று 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்றது. அன்று எமது சமூகத்திற்கு எத்தகைய பணிகள் ஆற்ற வேண்டும் என்று திட்டமிட்டு ஒரு முன்னேற்றகரமான செயற்பாடுகளைச் செய்து கொண்டு செல்வது எங்களுடைய முயற்சிகள் மட்டுமல்ல அல்லாஹ்வின் உதவியும் ஊர் மக்களும், வெளிநாடுகளிலுள்ள எமது ஊரைச் சேர்ந்த சகோதரர்களும் ஆவார்கள். எமது பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்கள் சம்மேளனம். ஏனைய சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒட்டுமொத்த ஊர் மக்களும் இணைந்து ஒரு ஒற்றுமையான பயணத்தை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம். அந்த வகையில்தான் நாங்கள் இவ்வளவு தூரம் ஒரு நீண்ட தூரத்தைக் கடந்து ஓர் இலக்கை அடைந்து கொண்டிருக்கின்றோம்.

25 வருட காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு நான் தலைவராக இருந்திருக்கின்றேன். மூன்று வருடங்களில் ஒரு தடவை அல்லது ஒவ்வொரு வருடம் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டு பதவிகள் தெரிவு செய்யப்படுகின்றன. கடந்த காலங்களில் பல தலைவர்கள் இருந்துள்ளார்கள். அவர்கள் பல்வேறு முயற்சிகள் செய்து இந்தளவுக்கு கொண்டு வந்துள்ளமை குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் அவர்களை நினைத்துப் பார்க்கின்றோம். அவர்களை மறக்க இயலாது. முன்பள்ளிப் பாடசாலை தொட்டு ஜனாஸா நலன்புரி வரையிலுள்ள பிரிவுகளின் மூலம் பல்வேறு சேவைகளைச் செய்கின்றோம்.

இந்த முன்பள்ளிப் பாடசாலையில் வறிய நிலையிலுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து உரிய கட்டணங்களை அறவிடாமல் ஒரு பகுதியளவில் கட்டணங்களை அறவிட்டு ஒரு தொண்டு அடைப்படையிலும் நடத்திச் செல்கின்றோம். புலமைப் பரிசில் பரீட்சை. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள் எனப் பிரித்து அவர்களுடைய கல்வி மேம்பாட்டுக்காக பங்களிப்புக்களைச் செய்து வருகின்றோம். அது மாத்திரமல்ல எமது சமூகத்தின் ஒற்றுமைக்காக தொடர்ச்சியாக பல்வேறு விளையாட்டுக்களை நடத்தி வருகின்றோம். பெருநாள் பண்டிகை தினத்தை விட பெரியளவில் விசேடமாக விளையாட்டினை மிகவும் மகிழ்ச்சிகரமாக நடத்தி வருகின்றோம். நோன்பு காலத்தில் எமது பிரதேசத்தில் வசதியற்ற குடும்பங்களுக்கு உலருணப் பொதிகள் வழங்கி வருகின்றோம்.

பெருநாள் தினத்தை சிறந்த முறையில் கொண்டாடுவதற்காக அதற்கான உலருணவுப் பொதிகளையும் வழங்கி வருகின்றோம். அவற்றை ஒவ்வொரு வீடுகளுக்குச் சென்று வழங்கி வருகின்றோம். வெளிநாடுகளில் உள்ள எமது ஊரைச் சேர்ந்த சகோதரர்கள் மனிதாபிமான உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

ஜனாஸா சேவைகளையும் எமது அமைப்பு செய்து வருகின்றது. எமது பிரதேசத்தில் ஜனாஸா ஒன்று இடம்பெறுமாயின் அவ்வீட்டுக்குச் சென்று ஹட் வசதிகளையும் அன்றைய தினம் அவர்களுக்குரிய உணவு தேவைகளையும் செய்து கொடுத்து வருகின்றோம். அயல் வீட்டவர்கள் உணவுகளை கொடுக்க வேண்டிய தேவைகள் இல்லை. எமது இயக்கம் அதற்கான பங்களிப்புச் செய்து வருகின்றது.

நோயாளிகளுக்கு மருந்துகள் வாங்கி கொடுக்கின்றோம். மருந்துகள் தட்டுப்பாடான நேரத்தில் கூட எங்கேயாவது இருந்து மருந்துகளை வரவழைத்து மருந்துகளை கொடுத்து வருகின்றோம். வெளிநாட்டிலுள்ள சகோதரர்கள் இதற்கான பண உதவிகளைச் செய்து வருகின்றார்கள். நாங்கள் நோயாளிகளை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்து வருகின்றோம். நிரந்தர நோயாளிக்கு தண்ணீர் மெத்தை வாங்கி கொடுத்துள்ளோம். நோயாளிகளின் தன்மையைப் பொருட்டு அவர்களுடைய வீடுகள் தேடி உதவிகளைச் செய்து வருகின்றோம். காலத்தின் தேவைக்கு ஏற்ப சேவைகளைச் செய்து வருகின்றோம் என்றார்.

இ. அம்மார்

# நெற்செய்கையில் பீடைத் தாக்க அழிவுக்கு இழப்பீடு

## ஆராய்வதாக வடமாகாண விவசாயப் பணிப்பாளர்

**பரந்தன் குறூப் நிருபர்**



நெற்செய்கையில் பீடைத் தாக்கத்தால் ஏற்படும் அழிவை இயற்கை அழிவாகக் கருதி எதிர்காலத்தில் இழப்பீடு வழங்க முடியுமாவென்று ஆராய்ந்து வருவதாக, வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு தேராவில் விவசாயப் பண்ணையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்ற அறுவடை விழாவில் கலந்துகொண்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

காலபோகத்தில் குறிப்பாக வெள்ளப்பெருக்கு, வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதி திட்டம் உள்ளது. பீடைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட, ஏற்கெனவே காப்புறுதி செய்தவர்களுக்கு மாத்திரமே அதற்கான இழப்பீடு பெற்றுக் கொள்ள முடியும். ஆயினும், எதிர்காலத்தில் இதனை இயற்கை அழிவாகக் கருதி அதற்கு இழப்பீட்டை பெற்றுக்கொடுப்பதற்கான சாத்தியக்கூறு தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்காலத்தில் குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி உரிய நீர் முகாமைத்துவம் மூலம் நவீன விவசாயத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளதாகவும், இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதை துரிதப்படுத்த கோரிக்கை

### அங்கஜன் இராமநாதன் எம்.பி

**சாவகச்சேரி விசேட நிருபர்**



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதை துரிதப்படுத்த வெளிவிவகார அமைச்சரிடம் கோரியுள்ளதாக, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"சாந்தனின் வருகையை விரைவுபடுத்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் நான் கோரிய போது, அதற்கான அறிவுறுத்தலை தூதரக அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதாக அமைச்சர் அலி சப்ரி எனக்கு தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் வெளிவிவகார அமைச்சு உடனடி கவனம் எடுக்க வலியுறுத்தி வெளிவிவகார அமைச்சருக்கும், வெளிவிவகார பிரதி அமைச்சர் தாரக பாலசூரியவுக்கும் நான் கோரிக்கை கடிதங்களை அனுப்பியுள்ளேன். இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் அலி சப்ரியுடன் தொலைபேசியிலும் உரையாடியுள்ளேன்" என்றார்.

## நானாட்டானில் விபத்து; இளம் தாய்க்கு காயம்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார், நானாட்டான் பேருந்து நிலையத்துக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் நேற்று புதன்கிழமை (31) நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் தாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அரிப்புத்துறை பிரதேசத்திலிருந்து வங்காலை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நானாட்டான் பேருந்து நிலையத்திலிருந்து அரிப்புத்துறை நோக்கி குழந்தையுடன் இத்தாய் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இளம் தாய், நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆயினும், இத்தாயின் குழந்தை எந்தவித காயமுமின்றி தப்பியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

நானாட்டான், அச்சங்குளம் பிரதேசத்தை பிறப்பிடமாகவும் அரிப்புத்துறையில் வசித்து வருபவருமான இளம் தாயே இவ்விபத்தில் காயமடைந்துள்ளார்.

## மல்லாகம் பெரியதம்பிரான் கோயிலில் சங்காபிஷேகம்



**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ்ப்பாணத்தின் மல்லாகம் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற பெரியதம்பிரான் கோயிலில் சங்காபிஷேகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (30) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி கோயிலில் விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து பெரியதம்பிரான் பெருமானுக்கு விசேட பாலாபிஷேகம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து தவில், நாதஸ்வரம் முழங்க பிரதான கும்பங்கள் உள்வீதியால் வலமாக கொண்டு வரப்பட்டு, பெரியதம்பிரான் பெருமானுக்கு சங்காபிஷேகம் நடைபெற்றது.

இச்சங்காபிஷேகத்தில் பெருமளவான அடியவர்கள் கலந்து கொண்டு, பெரியதம்பிரானின் அருள் பெற்றுக்கொண்டனர்.

## சுன்னாகத்தில் கோழி வளர்ப்பால் கலவரம்; கத்திக்குத்தில் ஒருவர் பலி

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தின் சுன்னாகம், கந்தரோடைப் பிரதேசத்தில் கோழி வளர்ப்புத் தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (30) ஏற்பட்ட கலவரம் காரணமாக ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தரோடையைச் சேர்ந்த 36 வயதுடைய சந்திரநாதன் கோபிராஜ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கொலைச் சந்தேக நபரான 57 வயதுடைய அயலவர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோழி வளர்ப்புத் தொடர்பாக உறவினர்களான அயலவர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் அது கொலையில் முடிவடைந்ததாகத் தெரிவித்த பொலிஸார், கோழி வளர்ப்புத் தொடர்பாக இவர்களுக்கு இடையில் பிரச்சினை நிலவி வந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் சுன்னாகம் பொலிஸார் விசாரணையை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டுவிலில் மிதிவெடி மீட்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில், சந்திரபுரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (30) மிதிவெடியொன்றை பொலிஸார் மீட்டனர்.

மேற்படி பிரதேசத்திலுள்ள தனியார் காணியொன்றிலிருந்து இந்த மிதிவெடி அடையாளம் காணப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு காணி உரிமையாளர் தகவல் வழங்கினார். இதனைத் தொடர்ந்து அம்மிதிவெடியை அகற்றுவதற்கான நடவடிக்கையை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

## யாழ்ப்பாண சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட இளைஞர் உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (31) சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

நல்லூர் அரசடியைச் சேர்ந்த கணேஷ் நிசாந்தன் எனும் இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாண சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த இளைஞர், கடந்த 26ஆம் திகதி விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தெரியவருமென, வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது.

## டிப்பரில் 123Kg கேரள கஞ்சாவை கடத்திய சந்தேகநபர் கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பெல்மதுளை பிரதேசத்தில் டிப்பர் வாகனமொன்றில் கேரள கஞ்சா போதைப்பொருளை கடத்திச் செல்ல முற்பட்ட ஒருவரை நேற்று புதன்கிழமை (31) பொலிஸார் கைது செய்துள்ளதுடன், இவரிடமிருந்து 123 கிலோகிராம் கேரள கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பெல்மதுளையில் ரோந்து நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்ட போதே, கஞ்சாவுடன் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். எம்பிலிப்பிட்டி பிரதேசத்திலிருந்து கடத்திக் கொண்டு வரப்பட்ட இந்தக் கஞ்சாவை எஹெலியகொடை பிரதேசம்வரை கொண்டு செல்ல முயற்சித்ததாகவும், நீண்டகாலமாக தான் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

## கண்டியில் புதிய முன்பள்ளி ஆரம்பிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி, குண்டசாலை புதிய நகரில் மத்திய மாகாணக் கல்வி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளி அபிவிருத்தி மத்திய நிலைய மாதிரி ஆரம்பப் பாடசாலை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரியவர்களிடம் கையளித்து வைக்கப்பட்டது. மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தலைமையில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது. மத்திய மாகாணத்தில் மேலும் ஆரம்பிக்கப்படவுள்ள ஏனைய முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு இந்த முன்பள்ளிப் பாடசாலை ஒரு முன் மாதிரியாக அமையுமென, ஆளுநர் லலித் யூ.கமகே தெரிவித்தார்.

தற்போது மத்திய மாகாணத்தில் 3,000 க்கும் மேற்பட்ட முன்பள்ளிப் பாடசாலைகள் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார். இந்த மத்திய நிலையத்தினூடாக முன்பள்ளி ஆசிரியைகளுக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.




## மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் வருடாந்த திருவிழா

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் மாசிமக மகோற்சவத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை (02) காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அன்றையதினம் முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்று, எதிர்வரும் 24ஆம் திகதி காலை இரதோற்சவமும் 26ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் அன்றையதினம் இரவு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளதாக, கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இந்நிலையில் 2ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை முற்பகல் 11.00 மணிக்கும் இரவு 7.00 மணிக்கும் சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வரவுள்ளதாகவும், கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

23ஆம் திகதி காலை 7.00 மணிக்கு சுடுகங்கை ஸ்ரீஏழுமுகக்காளியம்மன் கோயிலில் காவடி எடுத்தலும் முற்பகல் 10.00 மணிக்கு தீ மிதிப்பும் முற்பகல் 11.00 மணிக்கு ஸ்ரீசிவனடியார் திருவிழாவும் வசந்த மண்டப பூஜையும் பிற்பகல் 1.00 மணிக்கு மகேஸ்வர பூஜையும் அன்றையதினம் இரவு திருவேட்டைத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. அத்துடன், அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

24ஆம் திகதி காலை 8.00 மணிக்கு இரதோற்சவ வசந்த மண்டப பூஜையும் 25ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு கற்பூரத் திருவிழாவும் 26ஆம் திகதி காலை 8.00 மணிக்கு பாற்குட பவனியும் நடைபெறவுள்ளது. 27ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு ஸ்ரீசண்டேஸ்வரி உற்சவமும் மாலை 6.00 மணிக்கு பூங்காவனமும் மார்ச் 01ஆம் திகதி இரவு ஸ்ரீவைரவர் பூஜையும் நடைபெறவுள்ளதாகவும், கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.



கண்டி பன்விலை ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா உற்சவத்தின் போது, தென்னிந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சியான சரிகமப நிகழ்ச்சிப் புகழ் புசல்லாவை நயபனை அசானிக்கு வரவேற்பளிக்கப்பட்டு, ஆசியும் வழங்கப்பட்டது. (புசல்லாவை தினகரன் நிருபர்)

## கண்டியில் கித்துள் உற்பத்தி தொழிற்சாலை நிறுவ ஏற்பாடு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

கித்துள் உற்பத்திப் பொருட்களை சர்வதேச தரத்தில் சந்தைப்படுத்துவதற்காக நவீன வசதிகளுடன் கூடிய கித்துள் உற்பத்தி தொழிற்சாலையை கண்டி மாவட்டத்தில் நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் நீண்டகாலமாக மூடப்பட்டுள்ள நியங்கொட பாடசாலை கட்டட வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கித்துள் உற்பத்திப் பொருட்கள் தொழிற்சாலை தொடர்பாக விசேட கலந்துரையாடல் கண்டி ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கித்துள் உற்பத்திகளான சொக்கலேட், கருப்பட்டி, கித்துள் பாணி உள்ளிட்ட உற்பத்திகளை சர்வதேச தரத்துக்கமைய இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கவுள்ளதாகவும் தற்போது கித்துள் உற்பத்திகளுக்கு உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகளில் அதிகளவான கிராக்கி உள்ளதாகவும், ஆளுநர் தெரிவித்தார்.

மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சும் Green Globe Organics எனும் தனியார் நிறுவனமும் இணைந்து ஐந்து ஆண்டு திட்டத்தின் கீழ் இதற்கான பணியை முன்னெடுக்கவுள்ளது. முதற்கட்டமாக 100 மில்லியன் ரூபாவும் இரண்டாம் கட்டமாக 67 மில்லியன் ரூபாவும் இதற்காக செலவிடப்படவுள்ளது.

கித்துள் உற்பத்திப் பொருட்கள் தொழிற்சாலையால் தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பு செய்ய முடியுமெனவும் இதனால் கித்துள் உற்பத்தியாளர்கள் பெரிதும் நன்மை அடைய முடியும். அத்துடன் பல நேரடி, மறைமுக தொழில் வாய்ப்புகள் உருவாகுமெனவும், ஆளுநர் மேலும் தெரிவித்தார்.



பதுளை தெல்பெத்த இல.01 தமிழ் வித்தியாலயத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையிலும் க.பொ.த. சாதாரணதர பரீட்சையிலும் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா, பாடசாலையின் அதிபர் ஜெயபாரதி பிரபாகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ஊவா சுழற்சி நிருபர்)

## மரக்கறி விலை அதிகரிப்பால் சிரமத்தை எதிர்நோக்குகிறோம்

### வியாபாரிகள் தகவல்

**நானுஓயா நிருபர்**

கடந்த சில மாதங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் தாம் சிரமத்தை எதிர்நோக்குவதாக, நுவரெலியா வியாபாரிகளும் பொதுமக்களும் தெரிவித்தனர்.

நுவரெலியா மத்திய சந்தையில் பலாக்காய், ஈரப்பலாக்காய், மரவள்ளிக்கிழங்கு, பூசணிக்காய், வல்லாரை, பொன்னாங்காணி, நாட்டுக்கீரை, பசளி உள்ளிட்டவற்றையே அதிகளவில் நுகர்வோர் கொள்வனவு செய்வதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஏனைய பொருளாதார நிலையங்களிலிருந்து மரக்கறிகளை கொள்வனவு செய்து, நுவரெலியா மத்திய சந்தைக்கும் நானுஓயா பிரதான நகருக்கும் கொண்டு சென்று, சிறிய இலாபம் வைத்து வியாபாரம் செய்யும் தாம் வியாபாரமின்றி உள்ளதுடன், பல மரக்கறிகள் பழுதடைவதாகவும் இதனால் தாம் நட்டத்தை எதிர்நோக்குவதாகவும், வியாபாரிகள் தெரிவித்தனர்.

மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதால் மரக்கறிகளின் கொள்வனவு குறைந்துள்ளதாகவும், வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பெரியநீலாவணை அரசடி ஸ்ரீ முருகன் ஆலய மகா கும்பாபிஷேகம்

கல்முனை, பெரியநீலாவணை அரசடி ஸ்ரீ முருகன் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று (31) ஆரம்பமாகியது. இன்று (01) வியாழக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நடைபெறவுள்ளதுடன், நாளை (02) காலை 9.12 மணி தொடக்கம் 10.20 மணி வரை கிரியைகள் மற்றும் மகா கும்பாபிஷேக விஷேட பூஜைகள் நடைபெறவுள்ளன. பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார், ஆதீனகர்த்தா சிவஸ்ரீ சதா. ரவீந்திரராஜ குருக்கள், பிரதம குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறவுள்ளன.

## போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதான இளைஞன் திடீர் மரணம்

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் அநுராதபுரம் தலைமையக பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்ட இளைஞனொருவன் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். அநுராதபுரத்தை சேர்ந்த 22 வயதுடைய ஷனுக கிஹான் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இளைஞனுக்கு சிறைச்சாலையில் வைத்து ஏற்பட்ட சுகயீனம் காரணமாக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த இளைஞனுடன் மேலும் மூவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விபுலானந்தா பொது நூலகத்துக்கு பெறுமதியான நூல்கள் அன்பளிப்பு



*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

ஏறாவூர்பற்று பிரதேச சபைக்குட்பட்ட விபுலானந்தா பொது நூலகத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே முரளீதரன் பெறுமதியான நூல்களை வழங்கி வைத்தார்.

சித்தாண்டியில் அமைந்துள்ள விபுலானந்தா பொது நூலகத்திற்கு தேசிய மொழிகள் பிரிவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் அண்மையில் மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

பொதுமக்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் மாணவர்களிடையே கற்றல் செயற்பாட்டை மேம்படுத்துவதுடன் இரண்டாம் மொழி அறிவினை விருத்தி செய்வதற்காக நூல்கள் ஏறாவூர் பற்று பிரதேசசபை செயலாளர் வ.பற்குணனிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர் வி.சந்திரகுமார், பிரதம முகாமைத்துவ உதவியாளர் கே.எம். றிழா, சித்தாண்டி பொது நூலக உதவியாளர் ஜே.சுகந்தினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொன்.செல்வநாயகம் எழுதிய இரு புத்தகங்களின் வெளியீட்டு நிகழ்வு

*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

முன்னாள் கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத்தின் தவிசாளர் பொன்.செல்வநாயகத்தின் இரு புத்தகங்களின் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது. தமிழ் சிங்கள மொழிகளிலான 'முன்பள்ளிக் கல்வி' எனும் இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வானது அரசடி தேவநாயகம் மண்டபத்தில் வைத்திய நிபுணர் வ.வரணீதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டதுடன் நூலாசிரியரின் வரவேற்புடன் விழா ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீதரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் சர்வதேச முன் பிள்ளைக் கல்வி அபிவிருத்தி ஆராச்சி நிறுவன பணிப்பாளர் நாயகமும் முன் பள்ளி நிபுணருமாகிய கலாநிதி ஜெயலத் இலங்கக்கோன், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் சீ.பிரகாஷ், கிழக்கு பல்கலைக்கழக ஆரம்ப சௌக்கிய பீட தலைவர் வைத்திய கலாநிதி கே.அருளானந்தம், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் வ.கருணைநாதன், பிரதேச செயலாளர் கா.சித்திரவேல், கணக்காய்வு அத்தியட்சகர் ஏ.எம்.மாஹீர், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Pradeshiya Sanwardhana Bank

## மீட்கப்படாத தங்க ஆபரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள், காரியாலயங்கள் மற்றும் அடகு மத்திய நிலையங்களிலும் 2019.04.01ஆம் திகதிக்கு முன்பாக லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி கிளைகளிலும் அடகு வைக்கப்பட்ட கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கமைய 2024.03.01ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் 2024.03.02ஆம் திகதி முதல் கீழ் குறிப்பிடப்படும் மாகாணக் காரியாலயங்களில், மாவட்டக் காரியாலயங்களில் மற்றும் கிளைகளில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். அனைத்து ஏல விற்பனைகளும் மு.ப 09.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| அடகு பெற்றுக் கொள்ளப்பட்ட இறுதித் திகதி | அடகுக் காலவெல்லை | அடிப்படையாய் அமைந்த திகதி | கடந்துள்ள காலம் |
|---|---|---|---|
| 2022.12.31 | 12 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்ட | 2023.12.31 | 01 வருடம் கடந்த |
| 2023.06.30 | 06 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்ட | 2023.12.31 | 06 மாதங்கள் கடந்த |
| 2023.09.30 | 03 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்ட | 2023.12.31 | 03 மாதங்கள் கடந்த |

**மாகாணக் காரியாலயங்கள்**

| மத்திய மாகாணம் | வடமத்திய மாகாணம் | வடமேல் மாகாணம் | சப்ரகமுவ மாகாணம் | ஊவா மாகாணம் | மேல் மாகாணம் | கிழக்கு மாகாணம் | தென் மாகாணம் |
|---|---|---|---|---|---|---|---|
| தொ.பே.இல. 0812214115/6/7 | தொ.பே.இல. 0252223080/ 0252225214 | தொ.பே.இல. 0372231880 | தொ.பே.இல. 0452224566 | தொ.பே.இல. 0552223635 | தொ.பே.இல 0332248731/ 0332248583 | தொ.பே.இல 0652225881 | தொ.பே.இல 0412226208/9 |

**மாவட்டக் காரியாலயங்கள்**

| கண்டி | பொலன்னறுவை | குருநாகல் | இரத்தினபுரி | மொனராகலை | கம்பஹா கொழும்பு | அம்பாறை | அம்பாந்தோட்டை |
|---|---|---|---|---|---|---|---|
| தொ.பே.இல 0812214124/ 0812214115/6/7 | தொ.பே.இல 0272223212 | தொ.பே.இல 0372268323 | தொ.பே.இல 0452230512 | தொ.பே.இல 0552273930 | தொ.பே.இல 0332234922 | தொ.பே.இல 0632223420 | தொ.பே.இல 0472240647/8 |
| **மாத்தளை** | **அனுராதபுரம்** | **புத்தளம்** | **கேகாலை** | **பதுளை** | **களுத்துறை** | **மட்டக்களப்பு** | **மாத்தறை** |
| தொ.பே.இல 0662051332/ 3 | தொ.பே.இல 0252223080 | தொ.பே.இல 0322223448 | தொ.பே.இல 0352230333 | தொ.பே.இல 0552224192 | தொ.பே.இல 0342264276 / 0342262526 | தொ.பே.இல 0652225845 | தொ.பே.இல 0412231585 |
| **நுவரெலியா** | **வடக்கு மாவட்டம்** | | | | | | **காலி** |
| தொ.பே.இல 0522224552/ 0522222630 | தொ.பே.இல 0212280180 | | | | | | தொ.பே.இல 0912222458 |

**மத்திய மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| கம்பளை, உடவெல, ஹதரலியத்த, மாரஸ்ஸன, தன்துரே, வத்தேகமை, மொரயாய, தெல்தெனியா, பூஜாபிட்டிய, கட்டுகஸ்தோட்டை, உடுதும்புரை, மெனிக்ஹின்ன, தவுலகல, நாவலப்பிட்டி, ஹேதெனிய, கண்டி, பேராதனை, கண்டி இரண்டாம் நகர், செங்கடகல | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, நாவலப்பிட்டி கிளை, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி |
| நுவரெலியா, ரிக்கிலகஸ்கட, கினிகத்தேனை, பூண்டுலோயா, நில்தண்டாஹின்ன, அக்கரப்பத்தனை, ஹங்குராங்கெத்த, கொட்டகலை | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, ரிகில்லகஸ்கட கிளை, ராகலை வீதி, ரிகில்லகஸ்கட |
| மாத்தளை, தம்புளை, கலேவெல, லக்கலை, இரத்தோட்டை, வில்கமுவை, நாவுல | 2024.03.06 மற்றும் 2024.03.07 | பிரதேச அபிவிருத்தி வங்கி, மாத்தளை மாவட்டக் காரியாலயம், இல. 05, பலாபத்வல, மாத்தளை |

**வட மத்திய மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| மிஹிந்தலை, அனுராதபுரம், தம்புத்தேகமை, கஹடகஸ்திகிலிய, கல்நேவ, தலாவ, மதவாச்சி, திரப்பனை, ரம்பேவ, கலென்பிந்துனுவெவ, கோணபத்திராவ, அனுராதபுரம் புதிய நகர், கெக்கிராவை, தம்புத்தேகமை புதிய நகர், போகஸ்வெவ, வவுனியா, மன்னார், சுன்னாகம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கனகராயன்குளம் | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, வடமத்திய மாகாணக் காரியாலயம், இல. 65D, 4வது குறுக்குவீதி, அபய பிரதேசம், அனுராதபுரம் |
| பொலன்னறுவை, மெதிரிகிரியா, புலஸ்திகமை, ஹிங்குராக்கொட, பகமூன, மன்னம்பிட்டி, கல்அமுன, சிரிபுர, கதுருவெல, அரலகன்வில, செவனபிட்டி | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி,பொலன்னறுவை கிளை, மட்டக்களப்பு வீதி, பொலன்னறுவை |

**வட மேல் மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| குளியாபிட்டி, பண்டுவஸ்நுவர, நிகவெரட்டிய, கிரியுல்ல, அலவ்வை, பொத்துஹர, ரிதீகமை, மாவத்தகமை, நாரம்மல, பரகஹதெனிய, அத்துகல்புர, குருநாகல், மெல்சிறிபுர, இப்பாகமுவ, பொல்பித்திகமை, கல்கமுவை, அம்பன்பொல, பெரகும்புர, மஹவ, வாரியபொல | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, குருநாகல் கிளை, சுரதிஸ்ஸ மாவத்தை குருநாகல் |
| புத்தளம், மாம்பூரி, பாலக்குடா, கல்பிட்டி, பன்னல, போவத்தை, தும்மலசூரிய, முந்தல், மஹவெவ, நாத்தாண்டியா, கிரிமெட்டியான, சாந்த ஆனாபுரம், நவகத்தேகமை, சிலாபம், ஆனைமடு, வென்னப்புவை | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, புத்தளம் மாவட்டக் காரியாலயம், இல. 160 கொழும்பு வீதி, மைக்குளம், சிலாபம் |

**சப்ரகமுவ மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| கேகாலை, பிட்டகல்தெனிய, ரம்புக்கனை, மாவனல்லை, வரக்காபொலை, அரநாயக்க, கித்துல்கல, ருவன்வெல்ல, தேவாலேகம, புலத்கொஹுபிட்டிய, தெரனியலை, ஹெம்மாதகமை, நெலும்தெனிய, எட்டியாந்தோட்டை, கொட்டியா-கும்புர, தெஹியோவிட்ட | 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, கேகாலை மாவட்டக் காரியாலயம், இல. 143/2, பிரதான வீதி, கேகாலை |
| இரத்தினபுரி, பெல்மதுளை, பலாங்கொடை, எம்பிலிபிட்டி, கொலொன்ன, எஹலியகொட, கலவானை, கொடகவெல, எரத்ன, குருவிட்ட, நிவித்திகலை, கஹவத்தை, ரக்வானை, கிரிஎல்ல, பொத்துபிட்டிய, வெலிகேபொல, பலாபத்தல, புளிகுபிட்டிய | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, இரத்தினபுரி மாவட்டக் காரியாலயம் இல. 278 குடுகல்வத்த, இரத்தினபுரி |

**ஊவா மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| பதுளை, பண்டாரவளை, போகஹகும்புர, தியத்தலாவை, கிராந்துருகோட்டை, ஹல்தும்முல்ல, ஹப்புத்தளை, கந்தகெட்டியா, லுணுகலை, மகியங்கனை, மாளிகாதன்னை, மீகஹகிவுல, பசறை, ரிதீமாலியத்த, ஊவா பரணகமை, வெளிமடை | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, பதுளை மாவட்டக் காரியாலயம், இல. 1/315, பசறை வீதி, பதுளை |
| படல்கும்புர, பிபிலை, புத்தள, மடுல்ல, மெதகம, மொனராகலை, செவனகல, சியம்பலாண்டுவ, தனமல்வில, வெள்ளவாய | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, மொனராகலை கிளை, இல. 151, வெள்ளவாய வீதி, மொனராகலை |

**மேல் மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| அவிசாவளை, திவுலபிட்டி, கம்பஹா, ஹோமாகமை, ஜாஎல, களனி, கிரிந்திவெல, கொலொன்னாவை, மாவரமண்டிய, மினுவாங்கொடை, மீரிகமை, மிரிஸ்வத்தை, நீர்கொழும்பு, நிட்டம்புவ, பிலியந்தலை, ராகமை, நுகேகொடை | 2024.03.09 சனி மற்றும் 2024.03.10 ஞாயிறு | பிரதேச அபிவிருத்தி வங்கி, மிரிஸ்வத்த மாகாணக் காரியாலய வளாகம், இலக்கம் 36, கண்டி வீதி மிரிஸ்வத்தை, முதுன்கொட |
| அகலவத்த, பதுரலிய, பேருவளை, புலத்சிங்கள, தொடங்கொட, கோணபொல, ஹொரனை, இங்கிரியா, களுத்துறை, மத்துகமை, மீகஹதென்ன, மில்லனிய, மொரகஹஹேன, மொரொன்துடுவ, பாணந்துறை, வாத்துவ, வலகெதர, வரகாகொட | 2024.03.09 சனி மற்றும் 2024.03.10 ஞாயிறு | பிரதேச அபிவிருத்தி வங்கி, களுத்துறை மாவட்டக் காரியாலயம், இல. 51, இரத்தினபுரி வீதி, ஹொரனை |

**கிழக்கு மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| மட்டக்களப்பு, மட்டக்களப்பு இரண்டாம் நகர், செங்கலடி, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, கந்தளாய், காத்தான்குடி, கொக்கட்டிச்சோலை, மூதூர், திருகோணமலை, வாழைச்சேனை | 2024.03.05 மற்றும் 2024.03.06 | பிரதேச அபிவிருத்தி வங்கி, மட்டக்களப்பு மாவட்டக் காரியாலயம், இல. 51 A, புதிய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு |
| அம்பாறை, அக்கறைப்பற்று, தமன, தெஹியத்தகண்டி, கல்முனை, மஹாஓயா, நிந்தவூர், பொத்துவில், சம்மாந்துறை, உஹனை, | 2024.03.09 மற்றும் 2024.03.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, அம்பாறை மாவட்டக் காரியாலயம், இல. 01, 04வது குறுக்கு வீதி, ரீகல் சந்தி, அம்பாறை |

**தென் மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| ஹக்மன, ஊருபொக்க, தெய்யன்தர, அக்குரஸ்ஸை, வெலிகம, கன்தர, கெக்கனதுர, பிட்டபெத்தர, கம்புருகமுவ, தெனியாய, கம்புருபிட்டி, திஹகொட, மாத்தறை நகர், பம்புரனை, மாவரல, மொரவக்க, கிரிந்த, திக்வெல்ல, மிரிஸ்ஸ, தெவிநுவர | 2024 மார்ச் மாதம் 02ஆம் திகதி முதல் 10ஆம் திகதிக்குள் வார அல்லது வார இறுதி நாளில் | பிரதேச அபிவிருத்தி வங்கி, மாத்தறை மாவட்டக் காரியாலயம், இல. 05, அளுத் மாவத்தை, உயன்வத்த, மாத்தறை |
| அம்பலாந்தோட்டை, அகுனகொலபெலஸ்ஸ, கட்டுவன, பெலியத்த, திஸ்ஸமஹாராமை, லுணுகம்வெஹெர, சூரியவெவ, வீரகெட்டிய, தங்காலை, அம்பாந்தோட்டை, வலஸ்முல்ல, பரவகும்புக்க, ரத்ன, மித்தெனிய, வராபிட்டி | 2024 மார்ச் மாதம் 02ஆம் திகதி முதல் 10ஆம் திகதிக்குள் வார அல்லது வார இறுதி நாளில் | பிரதேச அபிவிருத்தி வங்கி, அம்பாந்தோட்டை மாவட்டக் காரியாலயம், இல. 61/36, தர்மபால மாவத்தை, தங்காலை |
| எல்பிட்டியா, பட்டபொல, பிட்டிகல, கோணகல்புர, இமதூவ, பத்தேகமை, தல்கஸ்வெல, அக்மீமன, கரன்தெனிய, காலி, ஊரகஸ்மங்ஹன்திய, யக்கலமுல்ல, நெலுவ, உடுகம, அஹன்கம, ஹிக்கடுவை, கராபிட்டி, பலபிட்டி, களுவெல்ல | 2024 மார்ச் மாதம் 02ஆம் திகதி முதல் 10ஆம் திகதிக்குள் வார அல்லது வார இறுதி நாளில் | பிரதேச அபிவிருத்தி வங்கி, காலி மாவட்டக் காரியாலயம், இல. 301, மாத்தறை வீதி, மாகால்ல, காலி |

**குறிப்புகள்** ஏலவிற்பனையை பிற்போடுதல் அல்லது ஒன்றிணைத்துச் செய்யும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குரியதாகும்.

**லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக்குரிய இக்கிளைகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.**

**பிரிவுத் தலைவர் கடன் அறவீடு**
**பிரதேச அபிவிருத்தி வங்கி**
**பிரதான காரியாலயம்**
**இலக்கம் 933,**
**வெதமுல்லை, களனி**
**2024.02.01**

| | | |
|---|---|---|
| அம்பாந்தோட்டை இரண்டாம் கிளை | - | அம்பாந்தோட்டை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது |
| கதுருவெல இரண்டாம் கிளை | - | கதுருவெல கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது |
| கேகாலை இரண்டாம் கிளை | - | கேகாலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது |
| திருகோணமலை இரண்டாம் கிளை | - | திருகோணமலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. |

Daily News Classifieds, the Housewives' companion

# தேசிய கல்வி நிறுவனம் – மஹரகம

2024ம் ஆண்டிற்காக பொருள் வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள், சேவை நிலையங்கள், உணவகங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்கும் வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசனை சேவை நிறுவனங்கள்/ மற்றும் கணனி சார்ந்த துணைப்பாகங்களை பழுதுபார்ப்பதற்காக நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

தேசிய கல்வி நிறுவனத்தின் கீழ்க்காணும் துறைகளுக்காக 2024ம் ஆண்டு சார்பாக வழங்குநர்கள், சேவை நிலையங்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசனை சேவை நிலையங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

i) வழங்கல் மற்றும் சேவைகள்
ii) சேவை நிலையங்களுக்கு
iii) உணவகத்திற்கு தேவையான உணவுப் பொருட்களை வழங்குதல்
iv) ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நானாவித வேலைகளுக்கான ஆலோசனை சேவை நிறுவனங்கள்
v) கணனி மற்றும் கணனி சார்ந்த துணைப்பாகங்களைப் பழுதுபார்ப்பதற்காக

மேற்படி துறைக்காக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தேசிய கல்வி நிறுவனத்தின் www.nie.ac.lk இணைய தளத்திற்கு பிரவேசித்து Tender Notice இணையதளத்தில் குறித்த சகல தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட சகல விண்ணப்பங்களையும் குறித்த ஆவணங்களுடன் குறித்த துறையை இனங்காணக் கூடியவாறு உறைகளில் இட்டு விண்ணப்பங்களை 2024.02.15ம் திகதி பி.ப. 3.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், த.பெ.இல. 21, கேள்விப் பிரிவு, தேசிய கல்வி நிறுவனம், மஹரகம என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நிறுவனத்தின் கேள்விப் பிரிவிற்கு கொண்டுவந்து ஒப்படைப்பதுடன் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவனம்,**
**மஹரகம**
**2024.02.01**
**தொ.பே.இல: 0117601799 - Ex - 797/ 0117601600 - Ex - 601**

# பெறுகை அறிவித்தல்

## இரத்தினபுரி மாநகர சபை

## பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் ஏல விற்பனை

இரத்தினபுரி மாநகர சபையினால் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பதற்கு திறந்த விலைக்கேட்பு மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

❖ விலைமனு விண்ணப்பம் வழங்கலை ஆரம்பிக்கும் திகதி – 2024.02.01
❖ விலைமனு விண்ணப்பம் வழங்கலை நிறைவு செய்யும் திகதி மற்றும் நேரம் – 2024.02.21 பி.ப. 3.00
❖ விலைமனு விண்ணப்பங்களை ஏற்பதை நிறைவு செய்து முத்திரை பொறிக்கும் திகதி மற்றும் நேரம் – 2024.02.22 மு.ப. 10.30
❖ விலைமனு விண்ணப்பம் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் – 2024.02.22 மு.ப. 11.00

01. ஏல விற்பனைக்கு அடையாளம் காணப்பட்ட வாகனங்கள்

| வரிசை இலக்கம் | வாகனத்தின் இலக்கம் | வாகன ரகம் | தயாரிப்பு ஆண்டு | குறைந்த விலைமனு | மீளளிக்கப்படாத கேள்வி பிணை வைப்புக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்வி பிணை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-9825 | டிப்பர் வண்டி - JAC –HFC3041K- DUMP TRUCK | 2013 | ரூபா 950,000.00 | ரூபா 10000.00 + VAT | ரூபா 50000.00 |
| 02 | KU-1557 | ஜீப் வண்டி - MICRO - REXTON 270XDI | 2012 | ரூபா 4,400,000.00 | ரூபா 15000.00 + VAT | ரூபா 50000.00 |
| 03 | BAF-9776 | மோட்டார் சைக்கிள் - BAJAJ-PLATINA | 2013 | ரூபா 130,000.00 | ரூபா 2500.00 + VAT | ரூபா 50000.00 |

2024.02.01 ஆம் திகதி தொடக்கம் 2024.02.21ஆம் திகதி வரையான காலத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை இரத்தினபுரி மாநகர சபையில் குறித்த கட்டணத்தை செலுத்தி கேள்வி விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

02. வாகன ஏல விற்பனையில் விற்பனையாகும் தொகை மற்றும் அது சார்ந்த அரச வரிப் பணத்தை (VAT) செலுத்த வேண்டும்.

கேள்விமனு நிபந்தனை மற்றும் வேறு விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலகத்திற்கு வந்து அல்லது கீழுள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக வாகனத் துறை அதிகாரியிடம் இருந்து கேட்டறிந்துகொள்ள முடியும்.

தொ.பே.இல. 045 – 2222275 / 045-2224336

மேல் குறிப்பிடப்பட்ட அனைத்து வாகனங்களும் இரத்தினபுரி வெளிச் சுற்றுப் பாதையில் அமைந்துள்ள இரத்தினபுரி மாநகர சபை வாகனக் கூடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாநகர ஆணையாளர் அல்லது அவர்தம் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி அடிப்படையில் வாகனங்களை பரீட்சிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**இரத்தினபுரி.**

# இலங்கை வங்கி

## விலைமனுக்கோரல்

### இலங்கை வங்கியின் கிழக்கு மாகாணத்திற்கு மூன்று நலன்புரி வாகனங்களை வழங்குதல்

வாடகை அடிப்படையில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு மூன்று நலன்புரி வாகனங்களை வழங்க விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**இவ் விலைக்கூறலில் பங்கெடுக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் கீழ்கண்ட தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும்.**

➢ பயணிகள் போக்குவரத்து வாகனமாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் உயர் கூரை வாகனமாகவும், 14 பயணிகள் வசதியாகப் பயணிக்கக் கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டும்.
➢ வாகனமானது இரட்டைக் குளிரூட்டி வசதியைக் கொண்டிருக்க வேண்டும்.
➢ முன்மொழியப்படும் வாகனமானது 2014 அல்லது அதற்குப் பிந்திய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டதாகக் காணப்பட வேண்டும்.
➢ வாகனமானது பயணிகளுடன் பூரணமாகக் காப்புறுதி செய்யப்பட்டதாகக் காணப்பட வேண்டும்.
➢ ஏலவிலை கோருபவர் உரிய மாவட்டத்தின் அடிப்படையில் வாகனங்களை வழங்கக் கூடியவராகக் காணப்பட வேண்டும்.
➢ வாகனத்தின் பராமரிப்புச் செலவு, ஓட்டுநரின் சம்பளம், காப்புறுதி மற்றும் எரிபொருள் கட்டணமானது வாகனத்தின் உரிமையாளரால் பொறுப்பேற்கப்பட வேண்டும்.
➢ நிறுவனத்தின் தேவைக்கமைய வாகனம் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். மேலும், வாகன சாரதி அனுபவமுடையவராகவும் ஒழுக்கமுடையவராகவும் காணப்பட வேண்டும்.

உரிய விண்ணப்பமானது செயற்பாட்டு முகாமையாளர் (கிழக்கு மாகாணம்), இலங்கை வங்கி, கிழக்கு மாகாண அலுவலகம், இல. 455, பிரதான வீதி, திருகோணமலை அல்லது உரிய மாவட்ட காரியாலயங்களில் (அம்பாறை, மட்டக்களப்பு) மீளளிக்க முடியாத விலைமனுக் கட்டணம் ரூபா.1,500/- + Social Security Levy + VAT வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளமுடியும். 15.02.2024 அன்று காலை 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு உங்களது விலைமனுக்களை கிழக்கு மாகாண காரியாலயத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நலன்புரி வாகனத்திற்கான விலைமனுக்கோரல், .................. மாவட்டம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு செயற்பாட்டு முகாமையாளர், தொலைபேசி இல. 026-2226398 ஊடாக வார நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**செயற்பாட்டு முகாமையாளர்**
**(கிழக்கு மாகாணம்)**
**இலங்கை வங்கி**
**கிழக்கு மாகாண அலுவலகம்**
**இல. 455, பிரதான வீதி**
**திருகோணமலை**
**தொ.பே. 026-2226398**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# திணைக்கள பெறுகைக் குழு
# கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்
# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**2024 ஆம் வருடத்திற்கான சுத்திகரித்தல் மற்றும் சுகாதார சுத்திகரிப்பு பராமரிப்பு சேவைகள்**

கம்பனிகளின் திணைக்களத்திற்கு (இரசாயனங்கள் மற்றும் சுத்திகரிப்பு கருவிகளுடனானது) சுத்திகரிப்பு மற்றும் சுகாதார சுத்திகரித்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கம்பனிகள் திணைக்கள பதிவாளர், கம்பனிகளின் பதிவாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழே குறிப்பிட்டுள்ள அடிப்படையான தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   1) சுத்திகரித்தல் மற்றும் சுகாதார சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக பதிவு பெற்ற கம்பனியொன்றாகவிருத்தல் வேண்டும்.
   2) அரசாங்க/ஓரளவு அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு நிகரான வேலைகளில் ஆகக் குறைந்தது 3 வருட முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   3) 2020 ஜனவரியிலிருந்து 2023 டிசம்பர் வரையிலான மூன்று வருடங்களுக்கு 60 ஊழியர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு ஊநநி மற்றும் ஊசேநி ஆகியவற்றை செலுத்தியமைக்கான சான்று ஆவணத்தை விலைமனுதாரர் வழங்கல் வேண்டும்.
   4) அரசாங்க/ஓரளவு அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு கடந்த கால சேவைகளுக்காக ஆகக் குறைந்தது நான்கு சேவை பாராட்டுக் கடிதங்களை விலைமனுதாரர் வழங்கல் வேண்டும்.
   5) கடந்த மூன்று வருடங்களுக்கான நிதியியல் கூற்றுக்களை விலைமனுதாரர் வழங்கல் வேண்டும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, 400 ஆம் இலக்கத்திலுள்ள ''சமாகம் மெதுர'', கம்பனிகளின் பதிவாளர் திணைக்களம், பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று (011 268 9205/2689205) விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக மேலேயுள்ள முகவரியில் எந்தவொரு வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் பரீட்சிக்கலாம்.
4. 2024.02.01 ஆம் திகதியிலிருந்து 2024.02.19 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2,000 ரூபாவைச் செலுத்திய பின்னர் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது 4 ஆம் மாடியின் கணக்கியல் கிளையில் எந்தவொரு வேலைநாளிலும் செலுத்தப்படலாம்.
5. விலைமனுவின் மூலப்பிரதியானது தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **"ROC/FG/04/2021 – Bid for providing Janitorial Services and Maintenance"** என குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுவை சமர்ப்பிக்கும் கம்பனியின் பெயர் மற்றும் முகவரியானது தபாலுறையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
6. 2024.02.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் கம்பனிகளின் பதிவாளர் திணைக்களம், ''சமாகம் மெதுர , இல. 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கணக்கியல் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.02.19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் எந்தவொரு புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 40,000 ரூபா (நாற்பதினாயிரம் ரூபா) பெறுமதியானதும் 2024.06.24 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுமான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுவின் மொத்தப் பெறுமதியானது ஐந்து மில்லியனுக்கு மேற்படின், கம்பனிகளின் பதிவாளரின் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஒப்பந்த பதிவு செய்தல் சான்றிதழின் (பிசிஏ-3) பிரதியொன்றை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. 2024.06.24 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் பொருத்தமான தொகைக்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுக்கள் மற்றும் தாமதமான விலைமனுக்கள் ஆகியன நிராகரிக்கப்படும். 2024.02.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகள் திறக்கப்படும்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**கம்பனிகள் பதிவாளரின் திணைக்களம்,**
**''சமாகம் மெதுர",**
**இல.: 400,**
**டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer ADZ it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

SUNDAY OBSERVER ADZ it's what you want / வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Gampaha District

Gampaha - 033 22 23 464
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

Wattala - 011 2 937 989
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

Nilpanagoda - 077 8 627 321
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

Wattala - 011 2 932 511
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

Kochchikade - 031 22 78 359
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

Batuwatta - 071 8 921 271
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

Dunagaha - 077 3 517 752
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

Ja-Ela - 011 2 947 379
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

Negombo - 071 480 43 55
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

Katunayake - 077 4 115 998
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

Kandana - 011 2 233 651
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

Minuwangoda - 011 2 297 881
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

Katana - 031 2 241 687
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

Ja-Ela - 071 8 571 713
1943 - Gamini Arambawatta - No. 28, Old Negombo Road, Kanuwana, Ja-Ela.

Kotugda - 011 2 290 815
1944 - M. K. Melcolm Silva - 'Jayamal' Kasagahawatta, Kotugoda.

Negombo - 071 552 22 40
1944 - H. A. S. Pushpalatha Rosairo - Rosairo Newspapers and Advertising, Negombo.

Udugampola - 071 4 554 696
1470 - K. K. Danesh Pradeepa - 'Kumudu' Nilwala Road, Udugampola.

Ganumulla - 076 2 217 181
1969 - S. Damith Mellawa Thanthrige - Ganumulla

Indigolla - 033 5 613 736
1982 - M. M. Manjula Saman Kumari - 72/5/C/2, Yakkala Road, Indigolla.

Kelaniya - 011 2 947 379
1457 - G. Wimalasiri Perera - No. 555, Dhanushka Velandasela, Waragoda Road, Kelaniya.

Malwana - 011 2 487 560
1461 - G. Shamila Vithana - No. 549/5, 'Dilsha' Walgama, Malwana.

Kadawatha - 011 2 902 092
1434 - M. M. S. Damayanthi Herath - Adz soon Advertising, 137/1, Kandy Road, Kadawatha.

Dompe - 071 7 186 955
1498 - S. A. C. Senadheera - 'Jayanthi', Dompe.

Kiribathgoda - 077 3 719 282
1499 - P.A. Priyani Peliarachchi - New Samanala Book Shop, No. 181, Kandy Road, Kiribathgoda.

Yakkala - 077 3 475 696
1561 - W. Mudalige - Ruhunu Hardware Stores, No. 50 A, Kirindiwela Road, Yakkala.

Kirindiwela - 077 2 047 350
1607 - D. M. Sarath Premathilake - Chandana News Center, Radawana Road, Kirindiwela.

Nittambuwa - 033 22 89 608
1654 - W. P. K. R. S. Narangoda - Ganga Trade Center, No. 134, Kandy Road, Nittambuwa.

Nittambuwa - 077 3 191 979
1905 - L. T. R. S. Jayawardana - Jayawardena Book Shop, No. 643, Wathupitiwala, Nittambuwa.

Giriulla - 077 9 542 492
1906 - K. A. Jagath Chandrasiri - No. 45, Negombo Road, Giriulla.

Kelaniya - 011 4 820 896
1910 - P. D. Sumedha Samarajeewa - No. 340, Biyagama Road, Sinharamulla, Kelaniya.

Makola - 078 5 200 648
1940 - R. D. Chirantha Jayawardena - No. 365/5, Gunarathna Mawatha, Makola North, Makola.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

Daily News Classifieds, the Housewives' companion

# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம் – அம்பாறை

இவ் அலுவலகத்தின் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றது.

**சேவைகள்**

| தொ இல. | சேவை விபரம் | தகைமைகள் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை வைப்பு (மீளச் செலுத்தப்படும்) (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | துப்புரவு செய்யும் சேவை மாவட்ட செயலகம், அம்பாறை | 3 வருட அனுபவம் | 2500.00 | 45, 000.00 |
| 02 | பாதுகாப்பு சேவை, மாவட்ட செயலகம், அம்பாறை | 3 வருட அனுபவம் | 2500.00 | 70, 000.00 |

02. மேலே உள்ள சேவைகளுக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை அரசாங்க அதிபர், அம்பாறை என்ற பெயரில் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் இவ் அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் 2024.02.01 ஆம் திகதி தொடக்கம் 2024.02.21 ஆம் திகதி காலை 09.00 மணி தொடக்கம் பி.ப. 03.00 மணி வரை அலுவலக தினங்களில் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

03. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்கு கோரல் பிணையுடன் கேள்விப்பத்திரங்களை வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்வியினைப் பொறுப்பேற்றல் 2024.02.22 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவடைவதுடன், அத்தினத்திலேயே மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

05. அச் சந்தர்ப்பத்தில் கேள்விகள் சமர்ப்பித்துள்ள கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ள முடியும்.

06. கேள்விகள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளும் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அதிகாரம் பெற்ற பிரதிநிதி தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தனது தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தினை தேவையான எல்லாச் சந்தர்ப்பத்திலும் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. விலைமனு அனுப்பப்படும் ஒட்டப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "விலைமனு சமர்ப்பித்தல்" என குறிப்பிடுவதுடன் விலைமனு பாரம் கொடுக்கப்படும் சேவையின் விபரம் கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டும். (உதா: "விலைமனு சமர்ப்பித்தல் - துப்புரவு செய்யும் சேவை - மாவட்ட செயலகம், அம்பாறை" )

08. ஒரு சேவைக்காக கேள்விதாரர் ஒருவர் ஒரு கேள்வியினை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

09. மேலதிகத் தகவல்களை 063-2222193/ 063-2222233 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிய முடியும்.

10. விலைமனு தொடர்பான இறுதித்தீர்மானம் பெறுகைக் குழுவினைச் சார்ந்ததாகும்

**சிந்தக அபேவிக்ரம,**
**அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,**
**தலைவர், கேள்விக் குழு**
**2024.01.31 ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலகத்தில்.**

---

# INVITATION OF QUOTATIONS

DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## MANTHAI WEST PRADESHIYA SABHA

**EU FUNDED**

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

| | |
|---|---|
| **Name of Project** | **Purchasing of Vehicle with Gully Bowser (brand new)** |
| **Contract No.:** | **LDSP/NP/MN/MWPS/2024/PT3/01** |

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Loan from World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this Loan to payments under the LDSP PT3 to the Contract for Purchasing of Vehicle with Gully Bowser (brand new) Contract No: LDSP/NP/MN/MWPS/2024/PT3/01.
2. The Chairman of Local Authority Procurement Committee **(The Purchaser)**, on behalf of Manthai West Pradeshiya Sabha, Mannar District now invites bids from Registered Suppliers to submit a quotation for the supply of **Vehicle with Gully Bowser (brand new)** as specified in Section III Schedule of Requirements.
3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) procedure.
4. Quotations are valid for a period of Thirty (30) days after the deadline for bid submission.
5. Interested Registered Suppliers may obtain further information from **Secretary, Manthai West Pradeshiya Sabha** [Tel No: **0232051852**, Email: **mwpss@yahoo.com**] and inspect the Bidding Documents at the address: Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar from 09.00 hrs. to 14.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested Registered Suppliers on submission of a written application to the **Chairman, Manthai West Pradeshiya Sabha from 01.02.2024 to 28.02.2024** between 09:00 hrs and 14:00 hrs on normal working days and upon payment of a non-refundable fee of **Rupees Four Thousand (Rs. 4,000.00)**. The method of payment will be by cash.
7. Address for submission of Quotations (duly filled Bids in Duplicate) is: **Chairman, Local Authority Procurement Committee, Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar**. The envelopes shall bear the additional identification marks (vehicle name for which the quotation is submitted) on the top left corner: **"PURCHASING OF VEHICLE WITH GULLY BOWSER (BRAND NEW)"** Deadline for submission of quotations is: **29.02.2024 at 10.30 hrs.** Late submission of quotations will be rejected.
8. Quotations shall be opened at the address of **Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar** immediately after the closing of bids.
9. Registered Suppliers shall submit the Quotation Submission Form using the form furnished in Section V in the Bidding Document. This form must be completed without any alterations to its format, and no substitutes shall be accepted. All blank spaces shall be filled in with the information requested.
10. Alternative offers shall not be considered. Vendors are advised not to quote for different options **(unless stated in the Data Sheet)** for the same item but furnish the most competitive among the options available to the bidder.
11. The **Final Destination** shall be the Main Office of **Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar** and **Latest Delivery Date** should be 45 days **from the Date of Letter of Acceptance.**

**Section III: Schedule of Requirements**

| S. No. | Contract No. | Name of the Contract | Minimum ICTAD Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|
| | | | | Amount (Rs.) | Valid up to | |
| 01 | LDSP/NP/MN/MWPS/2024/PT3/01 | **Purchasing of Vehicle with Gully Bowser (brand new)** | **Recognized Organization** | 230,000.00 | 28.05.2024 | 45 Days |

*The address referred to above is:*

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Manthai West Pradeshiya Sabha,**
**Adampan, Mannar.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், முனையம் –1 இல் உள்ள வருகை தீர்வையற்ற கடைகள் கட்டிடத்தொகுதியின் முதலாம் தளத்திலுள்ள தீர்வையற்ற கடைகளை நடாத்திச் செல்வதற்காக சர்வதேச போட்டி ரீதியில் விலைமனு கோரல்**

(கேள்வி இல. **133/T/2023**)

**விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதியை நீடித்தல்**

2023 டிசம்பர் 21ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட விலைக்கோரலுக்கான அழைப்பு தொடர்பானது.

விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி 2024 பெப்ரவரி 02ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 09ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்குக் கோபுரம், 30ஆம் மாடி, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சில் விலைக்கோரல்கள் 2024 பெப்ரவரி 09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். அதன்பின் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**30ஆம் தளம், மேற்குக் கோபுரம்,**
**உலக வர்த்தக மையம், கொழும்பு 01.**

---

**சுற்றுலாத்துறை அமைச்சு**

## இலங்கை சம்மேளன பணியகம்

## பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கான வழங்குனர்களை பதிவு செய்தல் (12 மாதங்களுக்கு) - 2024 / 2025

இலங்கை சம்மேளன பணியகமானது (SLCB) இலங்கையின் MICE (கூட்டங்கள், ஊக்கத்தொகைகள், மாநாடு, நிகழ்வுகள்) வசதிகளை ஊக்குவிக்கும் சுற்றுலா அமைச்சின் கீழ் இயங்கும் சட்டமுறையிலான ஒரு அமைப்பாகும். இலங்கை சம்மேளன பணியகத்துடன் இணைய விரும்பும் அனைத்து புகழ்பெற்ற நிறுவனங்களுக்கும் 2024/2025 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான வழங்குனர்களை பதிவு செய்யும் கொள்முதல் நடைமுறையினால் தகுதியான வழங்குனர்களை இணைத்துக்கொள்வதற்கான இலங்கை சம்மேளன பணியகத்தினால் (SLCB) விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

இலங்கை சம்மேளன பணியகத்தின் (SLCB) இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கீழ்க்காணும் வகைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள தயவு செய்து SLCB இணையத்தளத்தினை **(www.meetinsrilanka.com)** பார்வையிடவும்.

**பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| G.1 | அனைத்து வகையான அலுவலக தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | G.8 | டிஜிட்டல் டிஸ்ப்ளே போர்டுகள், ஹோர்டிங்ஸ், ஒளியேற்றப்பட்ட சைன்போர்டுகள், பெயர் பலகைகள், நியான் அடையாள சின்னம், LED திரைகள் போன்றவை நிறுவனங்களை வழங்குகின்றன. |
| G.2 | எழுது பொருட்கள் | G.9 | டி-ஷர்ட் பிரிண்டிங், எம்பிராய்டரி மற்றும் அதனுடன் இணைந்த பொருட்களை வழங்கும் நிறுவனங்கள் |
| G.3 | கணினி மற்றும் தொடர்புடைய பொருட்கள் - மடிக் கணினி / மேசை கணினி / கணினிகள் / ஹார்ட் டிரைவ் / கூட்ட அறையின் ஒலி அமைப்பு | G.10 | ஓப்செட் அச்சிடுதல் - புத்தகங்கள் / குறிப்பேடுகள் / யேடுகள் / பைண்டிங் / வணிக அட்டைகள் / தினப் புத்தகங்கள் / நாட்காட்டிகள் / ஆண்டறிக்கைகள் / லெட்டர்ஹெட்/ கடித உறைகள் / பேக்ட்ரொப் / பெனர் |
| G.4 | டோனர்கள் ( HP/ Brother) | G.11 | டிஜிட்டல் ஓ.ஃப்செட் பிரிண்டிங் புத்தகங்கள் / பிரசுரங்கள் / சிற்றேடு அச்சிடுதல் / பைண்டிங் / சிற்றேடுகள் / வணிக அட்டைகள் தினப் புத்தகங்கள் / நாள்காட்டிகள் / ஆண்டறிக்கைகள்/நாளிதழ்கள் / லெட்டர்ஹெட்ஸ் / லெட்டர்ஹெட்ஸ் / பெயர்ப்பலகைகள் / பதாகைகள் / ஸ்டிக்கர்கள் / பின்னணிகள் / புல்அப் பேனர்கள் மற்றும் பிற |
| G.5 | நிகழ்வுகளுக்கான உபகரணங்களை வாடகைக்கு எடுக்கும் நிறுவனங்கள் | G.12 | டிஜிட்டல் புகைப்பட அச்சிடுதல் - புகைப்பட அச்சிடுதல், ஸ்கிரீன் பிரின்ட், ஃப்ராக்ஸோ, கிராவ், சப்லிமேஷன் அச்சிடுதல் மற்றும் பிற அச்சிடும் தொழில்நுட்பங்கள் போன்றவை. |
| G.6 | **பரிசு பொருட்கள் மற்றும் விளம்பர பொருட்கள்** கைவினைப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் - (கீ டேக்ஸ், பிராண்டட் கெப்ஸ், டி-ஷர்ட், குவளைகள், லேன்யார்ட்ஸ், பென் டிரைவ்கள், கை பட்டிகள், இலங்கையின் அழகு சாதனப்பொருட்கள் மற்றும் மூலிகை பொருட் தயாரிப்புகள், பேனைகள், மெட்டில் கீ டேக்ஸ் மற்றும் ஏனையவைகள்) | G.13 | கிராஃபிக் / கலைப்படைப்பு வடிவமைப்பாளர்கள் (ஃபிளையர்கள் / துண்டு பிரசுரங்கள்/ பதாகைகள்/ பின்னணிகள் / பெயர்ப்பலகைகள் / லெட்டர்ஹெட்கள் / உறைகள்) |
| G.7 | **DVD's, CD's,** டொக்கெட்டுகளுடன் கூடிய பட **DVD** கள் பென் டிரைவ்கள் வழங்கும் நிறுவனங்கள் | | |

**சேவைகள்**

| | | | |
|---|---|---|---|
| S.1 | அனைத்து வகையான வாகன பழுதுகள் | S.15 | பிற மொழிகளுக்கான மொழிபெயர்ப்புகள் (ஜெர்மன், சீனம், கொரியன், துருக்கியம், பிரஞ்சு, ஜப்பானியம், டச்சு, இந்தி, மலாய், ரஷ்யன், இத்தாலியன், கெமர், தாய்) |
| S.2 | கார் வாடகை சேவைகள் | S.16 | பேச்சாளர்கள் (ஜேர்மன், சீனம், கொரியன், பிரஞ்சு, இந்தி, கெமர், தாய், ஜப்பானிய, ரஷ்யன்) |
| S.3 | DJ மற்றும் இசைக்குழுக்கள் (கிளாசிக்கல்/மேற்கு) | S.17 | விளம்பர நிறுவனங்கள் |
| S.4 | தொழில்முறை மாநாட்டு அமைப்பாளர்கள் (PCO) | S.18 | நிகழ்வினை நிகழ்த்தும் கலைஞர்கள் (நடனக் குழுக்கள் முதலியன) |
| S.5 | பொதி சேவைகள் - உள்நாட்டு மற்றும் சர்வதேச | S.19 | நிகழ்வு முகாமைத்துவ நிறுவனங்கள் (உள்நாட்டு ) |
| S.6 | சரக்கு போக்குவரத்து மற்றும் சுங்க அனுமதி | S.20 | இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள் (DMC)/ உள்நாட்டு பயண முகவர்கள் - இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தில் (SLTDA) பதிவு செய்திருக்க வேண்டும். |
| S.7 | மொபைல் அப்ளிகேஷன் டெவலப்பர்கள் | S.21 | PR முகவர் நிலையம் (உள்நாட்டு ) |
| S.8 | போக்குவரத்து மற்றும் வாடகை வாகன சேவை வழங்குநர்கள் | S.22 | இணையதள வடிவமைப்பு, மேம்பாடு, ஹோஸ்டிங் மற்றும் பராமரிப்பு நிறுவனங்கள் |
| S.9 | விமான பயணச் சீட்டு முகவர்கள் | S.23 | டிஜிட்டல் மார்க்கெட்டிங் நிறுவனங்கள் / சமூக ஊடக முகாத்துவ நிறுவனங்கள் |
| S.10 | நேரடி ஒளிபரப்பு மற்றும் நேரடி நிகழ்வுகளின் வீடியோ கவரேஜ் | S.24 | புகைப்படக் கலைஞர், கானொளி கலைஞர் |
| S.11 | திரவ உணவு சேவைகள் (வெளியில்/வீட்டில்) | S.25 | ஆடியோ தயாரிப்பு, வீடியோ தயாரிப்பு மற்றும் வெளியீட்டு நிறுவனங்கள் |
| S.12 | நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் (பெண்/ஆண்) | S.26 | விளம்பரம் மற்றும் கட்டுரை உள்ளடக்க எழுத்தாளர்கள் மற்றும் அறிக்கைகள் எழுத்தாளர்கள் ஆங்கிலம், சிங்களம், தமிழ் மற்றும் வேறு மொழிகள் |
| S.13 | சர்வதேச படப்பிடிப்புக்கான திரைப்பட தயாரிப்பு நிறுவனங்கள் (சர்வதேச திரைப்படக் குழுக்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்காக தொழில்முறை வழங்கள் மற்றும் தொழில்நுட்ப ஏற்பாடுகள்) | S.27 | வாயு சீராக்கிகள் பராமரிப்பு சேவை |
| S.14 | மொழிபெயர்ப்பாளர்கள் - ஆங்கிலம் / தமிழ் / சிங்களம் | S.28 | தொலைபேசி அமைப்பு பராமரிப்பு - NEC SL 1000 தொலைபேசி இணைப்புகள் அமைப்பு |
| | | S.29 | அலுவலக சீரமைப்பு நிறுவனங்கள் |

தயவு செய்து உங்கள் விண்ணப்பங்களை **2024.02.21** ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் **மு.ப.11.00** மணிக்கு சமர்ப்பிக்கவும்.

**கொள்முதல் பிரிவு**
**இலங்கை சம்மேளன பணியகம்**
**இல:78, காலி வீதி,**
**கொழும்பு 03.**
**கொள்முதல் பிரிவு : 011- 48 65 050 / 011- 244 0002**

SELACINE

## கம்பனியின் பெயர் மாற்றல் பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
பீ ஏ எ.்.ப் எ.்.ப் பொலிமெக் (பீவீடீ) எல்டீடி

**இல:** PV 66756

**பதிவு விலாசம்:**
இல. 01, ஏற்றுமதி செயலாக்க வலயம், கொக்கல, ஹபராதுவ.

**புதிய பெயர்:**
ஓஷன் வொயேஜர் இன்டர்நெஷனல் (பீவீடீ) எல்டீடி

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

## மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல்/ வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்

2007ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் சட்டதிட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1939 ஆம் ஆண்டு கம்பனிகளை ஒடுக்குதல் விதிகளின் கீழ் பின்வரும் நிறுவனத்தை கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

**சிங்ககிரி (பிறைவட்) லிமிடட்,**
**இல. 515,**
**டீ.பீ. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10**

**மனுதாரர்.**

**வழக்கு இலக்கம்** : **94/2023/CO** **எதிர்**
**தன்மை** : **கலைப்பு செய்தல் (ஒடுக்குதல்)**
**நடைமுறை** : **பொது**

**இன்பினிட்கொம் (பிறைவட்) லிமிடட்**
**8A, 89**
**பாமன்கட வீதி,**
**கொழும்பு 05**

**பிரதிவாதி**

மேற்படி நிறுவனத்தினை ஒடுக்குவதற்காக 2023 ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2024 பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஒப்பம்:**
தம்மிகா பிமினிகே
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி
இல. 16/G/9, கொஸ்ஹேன வீதி,
மாலபே

**குறிப்பு :** அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்துமூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2024 பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி**

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

**Maintenance of Network Switches at Inland Revenue Department**
**Contract Number: IR/PAM/28/139/2024**

1. *"Maintenance of Network Switches at Inland Revenue Department"* என்பதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (மேல் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். பராமரிப்பு கால எல்லையானது 1 வருடமாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் -
   அ. அபகீர்த்தியானோர் பட்டியலில் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் நேரத்திலும் ஒப்பந்தத்தை வழங்கும் நேரத்திலும் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இது தொடர்பாக சத்தியக்கடதாசியொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   ஆ. இலங்கையில் செல்லுபடியாகும் வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ. கடந்த மூன்று வருடங்களில் மொத்த சான்றழிக்கப்பட்ட நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது ஆகக் குறைந்தது 100 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   ஈ. விலைமனுவை நிறைவேற்றுவதற்கான கையொப்பமிட்டவரின் நம்பகத்தன்மையை நிரூபித்தல் (ஏற்புடையதான அற்றோணித்தத்துவம் அல்லது அதிகாரம் வழங்கும் கடிதம்)
   உ. அரசாங்க திணைக்களங்கள்/நிறுவகங்கள் அல்லது சிறந்த புகழ்வாய்ந்த தனியார் கம்பனிகளில் இந்த ஆவணத்தில் பட்டியலிடப்பட்ட நிகரான வன்பொருள் அம்சங்களை பராமரித்தலில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம்.
   ஊ. ஒவ்வொரு வர்த்தக உற்பத்திக்கும் ஆகக் குறைந்தது 2 CISCO/DELL சான்றழிக்கப்பட்ட பொறியியலாளர்கள் இருத்தல் வேண்டும்.
4. 2024.02.01 ஆம் திகதியிலிருந்து 2024.02.21 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (12,500 ரூபா) செலுத்திய பின்னர், கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
5. 2024.02.22 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல் மட்டம்) பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளை, 15 ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2024.05.22 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் இரண்டு இலட்சம் இலங்கை ரூபா பெறுமதியான (200,000 இ.ரூபா) விலைமனுப்பிணை யொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணத்தின் படிவத்தின் பிரகாரம் வங்கி உத்தரவாத பாங்கில் மாத்திரமைந்த விலைமனுப் பிணையொன்றாக இருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2024.06.22 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல் மட்டம்),**
**பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளை,**
**15 ஆம் மாடி,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**
**01.02.2024.**

**இணைப்பு 01**

## 2021 இல 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல.5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் (8)3 பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

2024.01.16ம் திகதி கொழும்பு உயர்நீதிமன்றத்தின் மூலம் வழக்கு இல. SPL/02/2024 இன் கீழ் 2011 இல.40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 05 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) (ஆ) பிரிவின் பிரகாரம் இல. WP-CBH-7045 என்ற CHR வகை காரிற்காக விநியோகிக்கப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை 2024.04.12 வரையான காலத்திற்கு அமுல்படுத்தப்பட்டு நீடிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர்களுக்கு வசதிகளை வழங்கும் முகமாக அறிவூட்டுவதற்காக பிரசுரிக்கிறேன்.

**நிதீமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**
**பதிவாளர்,**
**கொழும்பு உயர் நீதிமன்றம்**

## பொருட் கொள்வனவு அறிவித்தல் அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-12

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகிறன. இருப்பு வைத்திருப்பவர்கள் அல்லது ஆர்டர் செய்து 45 நாட்களுக்குள் பொருட்களை வழங்கக் கூடியவர்கள் விலை மனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

1). குறிப்பு எண் :- SI/LP/WPP/2024/02
பொருட்கள் : White Printing Paper 20"x25"-70 gsm + 2.5% -100M/T±10%
விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்:-
2024.02.21, மு.ப. 10.30 மணி.
மீளளிக்கப்படாத கட்டணம் : ரூபா 13,000.00
ஏல பாதுகாப்பு - ரூபா 804,000.00

2). குறிப்பு எண் :- SI/LP/WPP/2024/06
பொருட்கள் : White Printing Paper 24"x36"-80 gsm±2.5%-2000 Reames
விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்:-
2024.02.21, 10.30 மணி
மீளளிக்கப்படாத கட்டணம் : ரூபா 4,000.00
ஏல பாதுகாப்பு - ரூபா 207,000.00

2024.02.21 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு விலைமனுக் கோரல் முடிவுறும் அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறந்து வைக்கப்படும். அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 2024.02.01 இலிருந்து 2024.02.20 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்து மூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30மணிமுதல் பி.ப. 4.15 மணிவரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118,டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு - 08.**
**தொலைபேசி / பெக்ஸ் :- 011-2694172 / 011-2694898**
**இணையத்தளம் :- www.documents.gov.lk**
**2024/01/31**

## பொருட்கொள்வனவு அறிவித்தல் அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-06

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ அவர்களின் பிரதிநிதிகளின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. *குறிப்பு எண் : SI/LP/WPP/2024/02*
*பொருட்கள் : White Printing Paper 20"-70gsm ± 2.5%*
*எண்ணிக்கை : 150 MT ± 10%*
*விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் : 2024/02/21 மு.ப. 2.00 மணி.*
*மீளளிக்கப்படாத கட்டணம் : ரூபா 11,500.00*
*ஏலபாதுகாப்பு : ரூபா 940,000.00*

2. *குறிப்பு எண் : SI/LP/WPP/2024/06*
*பொருட்கள் : White Printing Paper 17"-70gsm ± 2.5%*
*எண்ணிக்கை : 100 MT + 10%*
*விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்: 2024/02/21 மு.ப. 2.00 மணி.*
*மீளளிக்கப்படாத கட்டணம் : ரூபா 9,000.00*
*ஏலபாதுகாப்பு - ரூபா 620,000.00*

3. *குறிப்பு எண் : SI/LP/WPP/2024/08*
*பொருட்கள் : White Printing Paper 17"-60gsm ± 2.5%*
*எண்ணிக்கை : 300 MT + 10%*
*விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்: 2024/02/21 மு.ப. 2.00 மணி.*
*மீளளிக்கப்படாத கட்டணம் : ரூபா 25,000.00*
*ஏலபாதுகாப்பு - ரூபா 1,900,000.00*

2024/02/21 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனுக்கோரல் முடிவுறு அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறந்து வைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 2024/02/01 இலிருந்து 2024/02/20 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்துமூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணிமுதல் பி.ப. 4.15 மணிவரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட்கொள்வனவு தலைவர்,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு - 08.**
**தொலைபேசி/ பெக்ஸ் : 011-2694172 / 011-2694898**
**இணையதளம் : www.documents.gov.lk**
**2024/01/31**

## பொருட்கொள்வனவு அறிவித்தல் அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-09

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகளின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

குறிப்பு எண் : SI 2024/05
பொருட்கள் : White Printing Paper-25"x35" – 80gsm ±2.5%
எண்ணிக்கை : 50 MT ± 10%
விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் : 2024/02/21 பி.ப. 2.00மணி
மீளளிக்கப்படாத கட்டணம் : ரூபா 4,800.00
ஏல பாதுகாப்பு : ரூபா 325,000.00
2024/02/21 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கோரல் முடிவுறும் அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறந்து வைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 2024/02/01 இலிருந்து 2024/02/20 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்து மூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு தலைவர்,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு - 08.**
**தொலைபேசி / பெக்ஸ் : 011-2694172 / 011-2694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk.**
**2024/01/31**

## பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவனம்

### பெறுகை அறிவித்தல்

### பாதுகாப்பு சேவைகளை வழங்கல்

2024 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்ற மற்றும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வருடாந்த உரிமத்தைக் கொண்டுள்ள புகழ்வாய்ந்த பாதுகாப்பு நிறுவனங்களிடமிருந்து பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
2024 பெப்ரவரி 1 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 2000 ரூபாவை (இரண்டாயிரம் ரூபா மாத்திரம்) செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளக்கூடிய உத்தியோகபூர்வ பணப்பற்றுச்சீட்டை **sarpgiar@kln.ac.lk** என்ற மின்னஞ்சலில் அனுப்புவதன் மூலம், பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவன பொது நிருவாகத்திற்கான உதவிப் பதிவாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேற்கூறப்பட்டுள்ள பணக்கொடுப்பனவானது இலங்கை வங்கி டொரிங்டன் கிளையிலுள்ள 6406077 என்ற PGIAR இன் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.
விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 90 நாள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையில் 2020.10.28 ஆம் திகதியிடப்பட்ட 5.3.11 என்ற பெறுகை வழிகாட்டி குறிப்பீட்டிற்கான அநுபந்தத்தில் திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள வகையில் முகவராண்மையொன்றிலிருந்து பெறப்பட்ட மீளளிக்கப்படும் விலைமனுப் பிணையான 20,000 ரூபாவிற்கான (இருபதாயிரம் ரூபா) விலைமனுப் பிணையுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 407 ஆம் இலக்கத்திலுள்ள பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவன சபை அறையில் 2024 பெப்ருவரி 15 ஆம் திகதியன்று விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
விலைமனுக்கள் பதிவுத் தபாலில் முத்திரையிடப்பட்ட தபாலுறைகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவனம், 407, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 407 ஆம் இலக்கத்திலுள்ள பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவன பொது நிருவாகத்திற்கான உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். (தொலைபேசி இல.: 011-2685217/0112673108).
விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவிற்கும் PGIAR பொறுப்பேற்க மாட்டாது. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி/ மின்னஞ்சல் வழியாக பொது நிருவாகத்திற்கான உதவி பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம் (தொலைபேசி இல.: 011-2685217/0112673108 அல்லது **sarpgiar@kln.ac.lk)**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவனம்,**
**இல. 407, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**
**2024 பெப்ரவரி 01.**

## அறிவித்தல்



### வியாபார அபிவிருத்தி அதிகாரி

### தி அசோசியேட்டட் நீயூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் (ANCL)

எமது நிறுவனத்தில் வியாபார அபிவிருத்தி அதிகாரியாக கடமையாற்றிய பன்னிபிட்டிய, மொரக்கெட்டிய, பழைய வீதி, இல.455 1/1/இல் வசிக்கும் மேற்படி புகைப்படத்தில் காணப்படும் திரு. அதாவுதகே தொன் சமன் குமார (சமன் அதாவுத) (தே.அ.அ.இல. 800871190V) தி அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் இனால் பிரசுரிக்கப்படும் பத்திரிகை அல்லது பருவ வெளியீடுகள் சார்பாக விளம்பரங்களை பெற்றுக் கொள்வதற்கு உள்ள உரிமை உடன் அமுலுக்கு வருமாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இன்று முதல் அவரால் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல் சார்பாகவும் தி அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் பொறுப்பாக மாட்டாது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**தி அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்**
**டி.ஆர். விஜேவர்தன மாவத்த,**
**கொழும்பு - 10**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## ஓர் பொது தனியார் பங்குடமையின் கீழ் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதிகளின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பிற்கான ஆர்வத்தைக் கோரல்.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, குருநாகல், பொலன்னறுவை, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாகாண/ மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதிகளை பொது தனியார் இணைந்த பங்குடமையின் கீழ் நிர்வாகம் மற்றும் பராமரிப்பை வழங்குவதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

தேசத்தின் சொத்தாக சர்வதேச தரத்தை அடையக் கூடிய - திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்காக ஒவ்வொரு மாகாணம்/ மாவட்டத்திலும் விளையாட்டுக்களை மேம்படுத்தும் நோக்கோடு இந்த விளையாட்டு கட்டிடத் தொகுதிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அறிவு, நிபுணத்துவம் மற்றும் நிதி திறன்களை கொண்ட தனியார் துறை தொழில்முனைவோருடன் பங்குதாரராக நாம் உத்தேசிக்கிறோம்.

ஒரு வாக்குமூலத்தின் வழியாக கீழ்க்காணும் விபரங்களை பூர்வாங்க ஆர்வத்தை வெளிப்படுத்தல் (E01) உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ) தொழில்முனைவோரின் பொதுவான விபரங்கள்

ஆ) தொழில்முனைவோரின் சட்டரீதியான தகுதி

இ) தொழில்முனைவோரின் பொருளாதார திறனை நிரூபிக்கும் ஆவணங்கள்

ஈ) விளையாட்டுத்துறை அல்லது சமமான துறைகளின் முகாமைத்துவ வசதிகளில் தொழில்முனைவோர் கொண்டுள்ள அனுபவம்

உ) ஏதாவது நீதிமன்றம் அல்லது பொறுப்பு வாய்ந்த அமைப்பில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது

மேலே குறிப்பிடப்பட்ட மாகாணம்/ மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு கட்டிடத்தொகுதிகளின் நிர்வாகம் மற்றும் பராமரிப்புகளை பொறுப்பேற்க உத்தேசிக்கும் தொழில்முனைவோர், 2024.02.14 பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்பு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமாறு கொழும்பு 07, பிலிப் குணவர்தன மாவத்த, இல.09, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், பணிப்பாளர் நாயகத்திற்கு மேற்படி தகவல்களுடனான அவர்களது ஆர்வ வெளிப்பாடுகளை அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆர்வத்தை வெளிப்படுத்துதல் - மாகாண/ மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி......." என்ற சொற்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் குறிப்பு விதிமுறைகளின் (TOR) பிரகாரம் திட்டத்தின் செயற்படுத்தலுக்காக பொருத்தமான தரப்பினரிடமிருந்து, திட்டங்கள், தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதி முன்மொழிவுகளுக்காக ஆர்வத்தை வெளிப்படுத்தலின் ஓர் முறையான மதிப்பீட்டின் பின்னர் அழைக்கப்படும். தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகளின் வெவ்வேறான மதிப்பீட்டின் பின்னர் மிகவும் பொருத்தமான தொழில்முனைவோர் தேர்ந்தெடுக்கப்படுவர், இந்த விளையாட்டு கட்டிடத்தொகுதியின் மேலதிக தகவல்களை பணிப்பாளர் (நிர்வாகம்) திருமதி. J.P.A.L வீரசிங்க,

தொலைபேசி இலக்கம்: 071 - 4971848 இடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் மின்னஞ்சல் departmentofsportsdevelopment@gmail.com

**பேராசிரியர் (ரியர் அட்மிரல்) சேமால் பெர்னான்டோ**
**விளையாட்டு பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்**

# இலங்கை துறைமுக அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக்கப் பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6451(MP) | Spares for Niigata Engine Coupled to Nishishiba Generator | 1,800,000.00 | 20,000.00 | 14-03-2024 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6530(MP) | 375M Main and Auxiliary Hoist Wire Rope for Kato KA-900 (CR28) Mobile Crane | 35,000.00 | 1,000.00 | 14-03-2024 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/23/PT/22/018 | MS "I" Sectional Beams | 92,000.00 | 1,000.00 | 22-02-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/01/063 | 5397 Mtrs Cloth Polyester Brown Suiting | 83,000.00 | 1,000.00 | 22-02-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/03/061 | Items to Upgrade UG50 Telephone System | 16,000.00 | 1,000.00 | 22-02-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/074 | Spares for Kato NK 250 E – III, 25 Ton Mobile Crane | 20,000.00 | 1,000.00 | 26-02-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 பெப்ரவரி 02ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# விலைமனுகோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே.இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| சேவைகள் | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/033<br>வாடகைக்கு வான்/டபிள் கெப் (பிரதேச பராமரிப்புப் பிரிவு) - வாழைச்சேனை (இரண்டு வருட காலம்) | 14-02-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், (வாழைச்சேனை)<br>065-2225882<br>அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 / 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு மாகாணம் | DGM(E)/QPPC/24/034<br>வாடகைக்கு வான்/டபிள் கெப் மின் அத்தியட்சகர் (வாழைச்சேனை மின் பாவனையாளர் சேவை நிலையம்) - வாழைச்சேனை (இரண்டு வருட காலம்) | 14-02-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம், (வாழைச்சேனை)<br>065-225882<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666 / 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணபித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பனவற்றிற்கு இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி.சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை. பொ.மு/பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிலக்கம் செய்யப்படலாம்.**



# ஆப்கானுக்கு எதிரான இலங்கையின் 16 பேர் டெஸ்ட் குழாம் அறிவிப்பு

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆடும் 16 பேர் அடங்கிய இலங்கை டெஸ்ட் குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் ஆடுவதற்காக இலங்கை வந்துள்ள ஆப்கானிஸ்தான் அணி நாளை (02) இலங்கைக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடவுள்ளது. இதற்கு தனஞ்சய டி சில்வா தலைமையில் 16 பேர் கொண்ட இலங்கை குழாம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குசல் மெண்டிஸ் உப தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் இலங்கை குழாத்தில் தனஞ்சய டி சில்வாவுடன் திமுத் கருணாரத்ன, தினேஷ் சந்திமால் மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் துடுப்பாட்ட வரிசையில் பலம் சேர்க்கின்றனர்.

அதேநேரம் பந்துவீச்சில் பிரதான வேகப்பந்து வீச்சாளர்களாக அசித்த பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ ஆகியோரும் பிரதான சுழல்பந்து வீச்சாளர்களாக பிரபாத் ஜயசூரிய மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் தவிர இளம் வீரர்களான லஹிரு உதார, மிலான் ரத்நாயக்க மற்றும் சாமிக்க குணசேகர ஆகியோரும் ஆப்கானுக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான இலங்கை குழாத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதில் 24 வயதான வலது கை வேகப்பந்து வீச்சாளர் சாமிக்க குணசேகர மற்றும் 27 வயது வலது கை வேகப்பந்து வீச்சாளர் மிலான் ரத்னாயக்க முதல் முறையாக டெஸ்ட் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மற்றும் ஆப்கான் அணிகள் டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆடவுள்ளது இதுவே முதல் முறையாகும்.

**இலங்கை டெஸ்ட் குழாம்: தனஞ்சய டி சில்வா (தலைவர்), குசல் மெண்டிஸ், நிஷான் மதுஷ்க, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், சதீர சமரவிக்ரம, ரமேஷ் மெண்டிஸ், அசித பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ, கசுன் ராஜித, கமிந்து மெண்டிஸ், பிரபாத் ஜயசூரிய, லஹிரு உதார, சாமிக்க குணசேகர, மிலான் ரத்நாயக்க.**

## இலங்கை வந்தது ஆப்கானிய அணி

இலங்கைக்கு எதிராக அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலும் ஆடுவதற்காக ஆப்கானிஸ்தான் அணி நேற்று முன்தினம் (30) இரவு இலங்கையை வந்தடைந்தது.

ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை அணிகள் ஒரு டெஸ்ட், மூன்று ஒருநாள் மற்றும் அதனைத் தொடர்ந்து மூன்று டி20 சர்வதேச போட்டிகளில் ஆடவுள்ளன. இரு அணிகளுக்கும் இடையிலான ஒரே ஒரு டெஸ்ட் போட்டி நாளை கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த போட்டியை மைதானம் சென்று இலவசமாக பார்வையில் ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச செய்திகள்

## பாதுகாப்புச் சபை குறித்து பொதுச் சபையில் கவலை



உலக அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்த உதவவும் ஆதரவளிக்கவும் தேவையான முடிவுகளை எடுக்க முடியாத இயலாமையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்சபையின் 78ஆவது அமர்வுத் தலைவர் டென்னிஸ் பிரான்ஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ள அதேநேரம், பாதுகாப்புச் சபையில் புவிசார் அரசியல் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவதால் வீட்டோ அதிகாரம் பயன்படுத்தப்படுவது அதிகரித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டுக்கு பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை கிடைக்கப்பெறாமை குறித்து கவலை தெரிவித்ததோடு இந்தச் சபை இந்தியாவுக்கு நிரந்தர அங்கத்துவம் கிடைக்கப் பெறுவதற்கான சாத்தியம் குறித்தும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெறும் முயற்சியில் இந்தியா நீண்ட காலமாக ஈடுபட்டுள்ளது.

## மனைவியுடன் இம்ரானுக்கு மேலும் 14 ஆண்டுகள் சிறை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவிக்கு இரண்டு நாட்களில் இரண்டாவது தண்டனையாக நேற்று மேலும் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் ஒரு வாரத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே இம்ரான் கான் மீது தொடர்ச்சியாக தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து ஏற்கனவே இம்ரான் கான் தடுக்கப்பட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டில் தமது எதிர்ப்பாளர்களால் பதவி கவிழ்க்கப்பட்ட இம்ரான் கான் ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டுக்காக மூன்று ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

தன் மீது தொடுக்கப்பட்டிருக்கும் பல வழக்குகள் அரசியல் நோக்கம் கொண்டவை என்று இம்ரான் கான் கூறி வருகிறார்.

இந்நிலையில் இம்ரான் கான் பதவியில் இருக்கும்போது அவர் மற்றும் அவரது மனைவி பெற்ற அரசு சார்பிலான பரிசுகள் தொடர்பிலேயே நேற்று (31) வழக்கு விசாரணை இடம்பெற்றது. முன்னதான நேற்று முன்தினம் அரசின் இரகசிய ஆவணங்களை கசியவிட்ட குற்றச்சாட்டில் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.



தவிர இந்த தம்பதிக்கு நீதிமன்றம் 1.5 பில்லியன் ரூபா அபராதமும் விதித்துள்ளது. இந்த இரு வழக்கிற்கு எதிராகவும் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்போவதாக இம்ரான் கானின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமரும் சர்வதேச கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான் கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டது தொடக்கம் சிறை அனுபவித்து வருவதோடு ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையிலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### ஈரான் ஆதரவுக் குழுவின்

## அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கைகள் நிறுத்தம்



ஜோர்தானில் ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தி மூன்று அமெரிக்க படையினரை கொன்றதாக சந்தேகிக்கப்படும் ஈராக் போராட்டக் குழுவொன்று அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கைகளை இடைநிறுத்தியதாக அறிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதலுக்கு பொறுப்பேற்ற ஈரானுடன் தொடர்புபட்ட கதைப் ஹிஸ்புல்லா, "ஈராக் அரசின் சங்கடத்தை தடுப்பதற்கு" இந்த முடிவை எடுத்ததாக கூறியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு பதிலளிக்க தீர்மானித்ததாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியபோதும், அது தொடர்பில் எந்த விபரத்தையும் வெளியிடவில்லை. எனினும் தமது நலன் மீதான எந்த ஒரு தாக்குதலுக்கு எதிராகவும் பதிலடி தரப்படும் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

முன்னதாக ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலுக்கு தொடர்பு இருப்பதாக அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டை ஈரான் மறுத்திருந்தது.

இந்நிலையில் கதைப் ஹிஸ்புல்லா குழுவின் செயலாளர் நாயகம் அபூ ஹுஸைன் அல் அமிதாவி கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் கூறியதாவது, "ஈரான் அரசின் சங்கடத்தை தவிர்க்கும் பொருட்டு ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிரான இராணுவ மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை இடைநிறுவத்துவதாக நாம் அறிவிக்கிறோம். காசாவில் உள்ள மக்களை வேறு வழிகளில் நாம் தொடர்ந்து பாதுகாப்போம்."

ஜோர்தான் மற்றும் சிரிய எல்லைப் பகுதியில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆளில்லா விமானம் ஈரானில் தாயாரிக்கப்பட்டது என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் தாக்குதல்களை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காசாவுக்கான மனிதாபிமான நிதியை பெற நன்கொடை நாடுகளிடம் ஐ.நா மன்றாட்டம்

## போர் நிறுத்த திட்டத்தை பரிசீலிக்கிறது ஹமாஸ்

காசாவில் இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்கள் தொடருவதோடு பலஸ்தீன போராளிகளுடனான மோதலும் உக்கிரம் அடைந்துள்ள சூழலில், பல நாடுகளும் நிதியை நிறுத்தி இருப்பதால் காசாவில் 'மனிதாபிமான கட்டமைப்பு' செயலிழக்கக் கூடும் என்று ஐ.நா எச்சரித்துள்ளது.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரை மையப்படுத்தி அண்மைய வாரங்களில் மோதல் உக்கிரமடைந்திருப்பதோடு குண்டு மழையாக பெரும் பகுதி இடிபாடுகளாக மாறியுள்ளன. குண்டு வெடிப்புகளுக்கு மத்தியில் அந்த நகரில் இருந்து மக்கள் வெளியேறி வருவதாக அங்குள்ள ஏ.எப்.பி. செய்தியாளர் விபரித்துள்ளார்.

"பீரங்கி மற்றும் வான் தாக்குதல்களுக்கு இடையே எந்த ஒரு படுக்கையும் இல்லாத நாசர் மருத்துவமனையை விட்டு நாம் வெளியேறினோம். எங்கே போவதென்று எமக்குத் தெரியாது" என்று இளம் பெண் ஒருவர் குறிப்பிட்டார்.



"நாம் குளிரில் இருக்கிறோம், நாம் எம்மை தற்காத்துக்கொள்ள வேண்டி உள்ளது. கூடாரங்கள் இல்லை மற்றும் உயிர்வாழ எதுவும் இல்லை" என்றும் அவர் கூறினார்.

மத்திய காசா நகரான டெயிர் அல் பலாஹ்வில் குடியிருப்புக் கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் கடந்த செவ்வாயன்று நடத்திய தாக்குதலில் நான்கு சிறுவர்கள் உட்பட குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் உள்ளூர் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருப்பதாக அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கான் யூனிஸ் நகரின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் ஹெலிகொப்டர்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் சூடு நடத்தி வரும் இஸ்ரேலியப் படை அங்கு நேற்று போர் விமானங்கள் மற்றும் டாங்கிகள் மூலம் நடத்திய தாக்குதல்களில் ஆறு பேர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

காசாவில் 24 மணி நேரத்தில் மேலும் 150 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு 313 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இதன்படி கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் இஸ்ரேல் இடைவிடாது நடத்தி வரும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 26,900 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 65,949 பேர் காயமடந்துள்ளனர்.

மறுபுறம் காசாவில் பலஸ்தீன போராளிகளின் எதிர்ப்பை தொடர்ந்து சந்தித்து வரும் இஸ்ரேலிய இராணுவத்தின் மேலும் மூன்று வீரர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் ஐவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

87 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த 30 வயது இஸ்ரேலிய வீரர் வடக்கு காசாவில் கடந்த செவ்வாயன்று கொல்லப்பட்டிருப்பதோடு 6646ஆவது ரோந்துப் படையின் 28 மற்றும் 43 வயதான வீரர்கள் அதே தினத்தில் தெற்கு காசாவில் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறியது.

காசா மீது இஸ்ரேல் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் 218 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டு மேலும் 1,283 வீரர்கள் காயமடைந்திருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் போரினால் காசா மக்கள்தொகையில் பெரும் பகுதியினர் இடம்பெயர்ந்திருப்பதாக ஐ.நா குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்திற்கான நிதியை பிரதான நன்கொடை நாடுகள் மீண்டும் வழங்காவிட்டால் இந்த முற்றுகை பகுதியில் மனிதாபிமான நெருக்கடி மேலும் மோசமடையும் என்று ஐ.நா அமைப்பு எச்சரித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஒக்டோபர் 7 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலில் இந்த ஐ.நா நிறுவனத்தின் ஊழியர்கள் சிலர் ஈடுபட்டதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியதை அடுத்து அமெரிக்கா முதற்கொண்டு பல நாடுகள் நிதி அளிப்பதை இடைநிறுத்தி உள்ளன.

ஆயிரக்கணக்கான ஊழியர்களைக் கொண்டிருக்கும் பலஸ்தீன அகதிகளுக்கான நிறுவனத்தை வேறு எந்த நிறுவனத்தாலும் பதிலீடு செய்யவோ அல்லது மாற்றவோ முடியாது என்று காசா உதவிகளுக்கான ஐ.நா இணைப்பாளர் சிக்ரிட் காக் குறிப்பிட்டார்.

உலக சுகாதார அமைப்பு, ஐ.நா மனித உரிமை அலுவலகம், யுனிசெப் மற்றும் உலக உணவுத் திட்டம் உட்பட பல ஐ.நா நிறுவனங்களின் தலைவர்களும் வெளியிட்ட அறிவிப்பில், பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்திற்கான நிதியை நிறுத்துவது "காசா மக்களுக்கு பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும்" என்று எச்சரித்தனர்.

நிதி இல்லாவிடின் பரந்த அளவான மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் விளைவுகளுடன் காசாவில் மனிதாபிமான கட்டமைப்பு செயலிழந்துவிடும் அபாயத்தை ஏற்படுத்தும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் தொடக்கம் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்திற்கு 131 மில்லியன் டொலர்களை வழங்கி இருப்பதாக கூறியிருக்கும் அமெரிக்கா, இது அந்த நிறுவனத்தின் பணிகளுக்கு போதுமானதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது.

**போர் நிறுத்தப் பேச்சு**

அமெரிக்கா, இஸ்ரேல், எகிப்து மற்றும் கட்டார் அதிகாரிகள் அண்மையில் பாரிஸில் சந்தித்து பேசியதை அடுத்து போர் நிறுத்தத்திற்கான வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதோடு, அந்த முன்மொழிவு கிடைக்கப்பெற்றதை ஹமாஸ் அமைப்பு நேற்று முன்தினம் (30) உறுதி செய்தது. இது தொடர்பில் ஆராய்ந்து தமது பதிலை அளிப்பதாகவும் அந்த அமைப்பு கூறியது.

இந்த ஆரம்பக்கட்ட உடன்பாடு நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்ப்பதாக மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அப்துல்ரஹ்மான் அல் தானி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முன்மொழிவு மற்றும் ஹமாஸினால் மேற்கொள்ளப்பட்டபதில் முன்மொழிவுகளின் கூறுகள் அடிப்படையிலேயே பாரிஸ் பேச்சுவார்த்தை கட்டமைக்கப்பட்டது என்று அல் தானி கூறினார்.

பேச்சுவார்த்தைகளுக்குள் நுழைவதற்கு நிரந்தர போர் நிறுத்தம் ஒரு முன்நிபந்தனை என்று முன்னர் கூறிய ஹமாஸ் இப்போது மற்ற விருப்பங்களை பரிசீலிக்க முன்வந்திருக்கலாம் என்று கட்டார் பிரதமர் குறிப்பிட்டார்.

இருப்பினும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு ஆயிரக்கணக்கான பலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்யவோ, காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்பினரை வெளியேற்றவோ கேட்டுக்கொள்ளப்படும் எவ்விதத் திட்டத்தையும் ஏற்கப் போவதில்லை என்று கூறியிருக்கிறார்.

இந்த வரைவில் ஆறு வார போர் நிறுத்தத்திற்கு வழிவகுப்பதாக உள்ளது என்று பெயர் குறிப்பிடாத அதிகாரிகளை மேற்கோள்காட்டி வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆறு வார போர் நிறுத்தம் என்பது கடந்த நவம்பரில் எட்டப்பட்ட தற்காலிக போர் நிறுத்தத்தை விடவும் நீண்டதாக அமையும். பல பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட்ட கடந்த நவம்பரில் இடம்பெற்ற தற்காலிக போர் நிறுத்தம் ஒரு வாரம் மாத்திரமே நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.